Deviyin KANMANI-Tamil Weekly 02-01-2013 Regd.No. TN/CH(C)/360/12-14 Registered With Registrar of News papers for India Under No.49510/89 published every Wednesday of every Week.



## வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

திரேதாயுகத்தில் சீதையை 'அக்னிப் பிரவேசம்' செய்ய வைத்து அவளது பவித்திரத்தை உலகறிய வைத்தார் ஸ்ரீராமர்.

இந்தக் காலத்திலும் பல சீதைகள் இருக்கின்றார்கள். அவர்கள் அக்னிப் பிரவேசம் செய்துதான் தங்களது பவித்திரத்தை நிலை நாட்ட வேண்டுமா?

கதாநாயகி மிதிலா... மூட நம்பிக்கையில் ஊறிப் போன மலைக்கிராமத்தில்... தனது புகுந்த வீட்டினர் மூலமாக அக்னிக் குழியில் இறங்கும்படி நிர்ப்பந்திக்கப் படுகிறாள்.

தன் மீது விழுந்த பழியை களங்கத்தைத், துடைப்பதற்காக அவள் அக்னிப் பிரவேசம் செய்தாளா? இல்லையா? அவள் எடுத்த முடிவு சரிதானா? என்பதை வாசித்துப் பார்த்து... உங்களது மேலான கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

புதுமையாக மலர்ந்துள்ள கண்மணிக்கும், அன்புள்ள வாசகர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

உங்கள்

லட்சுமி பிரபா எம்.ஏ.பி.எட்.,



# அக்னிப் பிரவேசம்...!

உருண்ட வெள்ளிக்குவளையில் பசுவின் மடியிலிருந்து பீறிட்ட பால் 'சர் சர்' என சங்கீதத்தோடு இறங்கியது.

சேர்ந்திருந்த பாலைப் பீய்ச்சியது விர்ரென்று ஊடுருவ... நுரை நுரையாய் பொங்கிய அழகை ரசித்தபடி மரத்தில் சாய்ந்து நின்றிருந் [illegible]ள் மிதிலா.

ஒரே லயத்தில் கேட்ட ஓசையும் பசுஞ்சாணப் புல்லுமாய் [illegible]ரவி வீசி.... மேனியைத் தழுவிய தென்றலும்... அவளுள் அலாதி நிம்மதியைத் த ந்தன.

தேவையான பாலைக் கறந்தபின், அவிழ்த்து விடப்பட்ட கன்று துள்ளிக் குதித்து ஓடிப்போய்... தாயின் மடியை செல்லமாய் முட்டிய அழகை ரசித்தபடி லயித்துப் போயிருந்தாள்.

''இந்தாங்க தாயி''

வெள்ளிக்குவளையை பவ்யமாய் நீட்டினான் காசி. முன் நெற்றியில் வந்து புரண்ட முடிக்கற்றையை புறங்கையால் ஒதுக்கி விட்டுக் கொண்டு... அவனிடமிருந்து வெள்ளிக்குவளையை வாங்கியபடி முறுவலித்தாள்.

''கனகம்மாவுக்கு இப்போ எப்படி இருக்கு?''

''நீங்க குடுத்த மாத்திரையால.... அவளுக்கு கப்புன்னு வயித்துப் போக்கு நின்னு போச்சு தாயி! நான் என்னவோ? ஏதோன்னு ரொம்ப பயந்துட்டேன்.

மகராசி உங்களுக்கு நல்ல கைராசி தாயி! வயித்துப் போக்கு நின்னுட்டாலும் காய்ச்சல் இன்னமும் விடலை தாயி!''

**-லட்சுமி பிரபா**



''இனி பயமில்லை.... காய்ச்சல் கொஞ்சம் கொஞ்சமா மட்டுப் பட்டுரும். பயப்படாதீங்கய்யா... நான் குடுத்த மாத்திரைகள்லே குழாய் மாத்திரை இருக்கு பாருங்க... அதை மட்டும் காலை மாலை இரண்டு வேளையிலேயும்.... சாப்பிட்டதுக்கு அப்புறமா போட்டுக் கிட்டா... சரியாயிடும்.

கஞ்சியா சாப்பிடச் சொல்லுங்க... நல்லா ஓய்வு எடுத்துக்கிட்டா எல்லாம். சரியாயிடும்.

ஆமா... நீங்க இங்க வேலைக்கு வந்துட்டீங்களே? கனகம்மாவை யாரு பார்த்துப்பாங்க?''

அக்கறையாய் கேட்டவளை ஊன்றிப் பார்த்தான் காசி. பொன் மஞ்சள் நிறத்தில் நல்ல உயரமாய் கொடிபோன்ற தோற்றத்துடன் இருந்த மிதிலா கம்பி சரிகை போட்ட காட்டன் புடவை தான் கட்டியிருந்தாள்.

அதீத அழகுடன் தேவதைபோல் மிளிர்ந்தவளின் விழிகளில் கனிவும் கரிசனமும் மிதந்து கொண்டிருந்தன.

''எம் பொண்ணு வந்திருக்கு தாயி! பக்கத்துல தானே அவளைக் கட்டிக் குடுத்தோம். அது வந்து கவனிச்சுக்குது தாயி! கனகம்மா உங்களை நெனச்சுக்கிட்டு அடிக்கடி புலம்புது...

''பாவம்...! சின்னம்மா தனியா கிடந்து அடுப்படியில எல்லாத்தையும் இழுத்துப் போட்டு செய்யணுமே....,ன்னு புலம்பிக்கிட்டு இருக்கா...''

காசி தர்ம சங்கடமாய் தலையை சொரிந்தான்.

''அவங்க என்ன வேணும்னா... வேலைக்கு மட்டம் போட்டாங்க? உடம்புக்கு முடியாம போயிட்டா என்ன செய்யறது? கனகம்மாவை கவலைப்படாம ஓய்வெடுத்துட்டு வரச் சொல்லுங்க...

அவசரப்பட்டு நாளைக்கே ஓடி வந்துட வேணாம்.

நிதானமா வந்தா போதும்... நான் சமாளிச்சுப்பேன். என்னைப் பத்தி நெனச்சு உடம்பைக் கெடுத்துக்க வேணாம்.. முடிஞ்சா.. நான் இன்னிக்கு வீட்டுக்கு வந்து பார்க்கிறேன்...''

''ஐயோ! வேணாம் தாயி! உங்களுக்கு எதுக்கு சிரமம்? சின்ன எஜமாணி நீங்க... இவ்ளோ கரிசனமா மாத்திரை மருந்து குடுத்து உதவுனீங்க... இதுவே பெரிய விஷயம்.,. உங்களுக்கு விசாலமான மனசு தாயி! உங்க தங்கமான குணத்துக்கு... உங்களுக்கு ஒரு குறையும் வரா

தும்மா....

நீங்க செஞ்ச உதவிக்கு... எப்படி எங்க நன்றியைத் தீர்க்கப் போறோம்?னு நானும் கனகம்மாவும் ன்னிக்கு காலையில பேசிட்டிந்தோம் தாயி!'' கைகளைக் கூப்பினாள் காசி.

''என்னய்யா நீங்க? என்ன பெரிய உதவியை நான் செய்துட்டேன்? மனுஷனுக்கு மனுஷன் இந்த உதவி கூட செய்யலைன்னா.... நாம் பூமியில பிறந்ததுக்கே அர்த்தமில்லாம போயிடுமே?

வயசுல பெரியவர் நீங்க.. என்னோட அப்பா ஸ்தானத்துல இருக்கிறவரு... நான் தான் உங்களை கை கூப்பி வணங்கணும்..'' என்றபடி மெல்ல நடந்தாள்.

''வேணாம் தாயி! நீங்க வீட்டுக்கு வர வேணாம்... ஒரு வாட்டி அவசரத்துக்கு வந்து உதவினீங்க... அதுக்கே பெரியம்மா கிட்டே நீங்க பெரிய மண்டகப்படியே வாங்கிக் கட்டிக்கிட்டீங்க...

அவங்க உங்களை தாளிச்சுக் கொட்டினதை... நான் கேட்டுக்கிட்டு தானே இருந்தேன்?

பாவம்... எங்களால... உங்களுக்கு வீண் வசவு? பாவம் தாயி நீங்க.... எம் மனசு ரொம்ப வேதனைப் படுது...

மகராசி... நீங்க அடியெடுத்து வைக்கிறதுக்கு.. எங்க குடிசை புண்ணியம் செய்திருக்கணும்.

உங்களை வர வேணாம்னு சொல்றதுக்கு... மனசே வர மாட்டேங்குது தாயி... ஆனா.... வேற வழியில்லை, கனகம்மாவுக்கு இப்போ வயித்துப்போக்கு நின்னுடுச்சில்லா?

இனி... பயம் இல்லைன்னு நீங்களே சொல்லிட்டீங்களே...? வர வேணாம் தாயி...''

பதற்றமாய் கெஞ்சும் தொனியில் பேசிய காசியை நின்று நிதானமாய் ஏறிட்டுப் பார்த்தாள் மிதிலா.

''சரிங்க ஐயா! நான் வரலை. போதுமா?'' என்றபடி இதமாய் புன்முறுவல் பூத்தாள்.

வெள்ளிக்குவளையில் நிரம்பியிருந்த பசும்பால் தளும்பி சிந்திவிடக் கூடாதே? என்ற எச்சரிக்கையுடன் நிதானமாய் நடந்து உள்ளே சென்று விட்டாள்.

தலைக்குமேல் அவளுக்கு வேலைகள் அடுக்கடுக்காய் காத்து இருந்தன.

கூடமாட உதவுவதற்கு கன்கம்மா இருந்தால்... சமையல்



வேலையை சடுதியில் முடிக்கலாம்.

ஐந்து நிமிடம் தாமதமானாலும்... மாமியார் சொர்ணம்

எட்டு ஊருக்கு கேட்கும்படியாக கத்தி ரகளை செய்து விடுவாளே?

எப்போது எந்த சாக்கு கிடைக்கும்? என்று கண்களில் விளக்கெண்ணெயை விட்டுக் கொண்டு ஊன்றிப் பார்ப்பவளிடம்... மாட்டிக் கொண்டால் கதை கந்தலாகி விடும்.

நாள் முழுக்க திட்டி தீர்த்து அர்ச்சனை செய்து முடித்தால் தான்.. அன்று இரவு அவளுக்கு நிம்மதியாக உறக்கம் வரும்.

அவளிடம் வாங்கிக் கட்டிக் கொண்ட மிதிலாவுக்கோ... இரவு தூக்கமே பறிபோய் விடுமே..?

திரும்பத் திரும்ப மாமியார் பாடிய வசைச் சொற்கள்... அவளது செவிகளில் ரிங்காரமிட்டுக் கொண்டே இருக்குமே..?

மிதிலா நடுத்தர குடும்பத்தில் பிறந்தவள் தான்.

அப்பா பத்மநாபன் ஒரு நிறுவனத்தில் தலைமை கணக்கராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

அம்மா தெய்வநாயகி அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு துணி தைபதுக் கொடுத்து கட்டும் செட்டுமாக குடும்பத்தை நடத்தி வந்தவள்.

தங்கை வெண்ணிலா கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தாள்.

தம்பி அமுதன் பிளஸ் டூ -வில் அடியெடுத்து வைத்திருந்தான்.

மிதிலா படிப்பில் கெட்டிக்காரி. எப்பொழுதும் வகுப்பில் முதல்



'டாக்டர்' ஆகியே தீர வேண்டும் என்ற
மாணவியாகத் தான் வருவாள். படித்து மெரிட்டில் தேறியதால்
லட்சியத்துடன் கண்ணும் கருத்துமாகப் நன்கொடை ஏதுமின்றி அவளுக்கு
சுலபமாக மருத்துவக் கல்லூரியில்
இடம் கிடைத்தது.
சென்னை குன்றத்தூரில் சொந்தமாக வீடு இருந்தாலும்...'கிராமத்தி
லிருந்த நஞ்சை நிலத்தை விற்று வந்த பணத்தை வட்டிக்கு விட்டிருந்த
தாலும்... குடும்பச் சக்கரம் தங்கு தடையின்றி சுழன்றது.
படிப்பை முடித்து டிஸ்டிங்ஷனில் தேறியவளுக்கு ஹவுஸ் சர்ஜன்
முடித்த கையோடு... மிகப் பெரிய மருத்துவமனையில் வேலை
கிடைத்து விட்டிருந்தது.
அப்பா பத்மநாபன் அருண்ம மகளுக்காக லோன் போட்டு ஸ்கூட்டி
வாங்கி தந்திருந்தார்.
தினமும் அந்த ஸ்கூட்டியில் தான் சென்னை வடபழனியிலிருந்த
ஜெயா ஹாஸ்பிடலுக்கு சென்று வந்து கொண்டிருந்தாள்.
பிரபலமான ஜெயா ஹாஸ்பிட்லில்... எண்ணி ஆறே மாதங்களில்
மிதிலா.. சீப் டாக்டரிடமிருந்து கடை நிலை ஊழியர் வரை நல்ல
பெயரை சம்பாதித்து விட்டிருந்தாள்.
நர்ஸ், வார்டு பாய், நோயாளிகள், சக மருத்துவர்கள் என்று அனைவ
ரிடமும் சிரித்த முகத்துடன் பேசிப் பழகியதால்.... அவர்களது மனதில்
இடம் பிடித்து விட்டிருந்தாள்.
படிக்கும் காலத்திலும் சரி... வேலை பார்த்த பிரபல ஜெயா ஹாஸ்
பிடலிலும் சரி...
பார்த்த மாத்திரத்திலேயே அவளை மற்றவர்களுக்கு சட்டென்று
பிடித்துப் போய் விடும்.
அப்படியொரு முகராசி!
ஆனால்... அவளுக்கு வாய்த்த மாமியார் சொர்ணத்திற்கோ... அவ
ளைக் கண்டாலே பற்றிக் கொண்டு வந்தது. 'கண்டமனூர் அருகே உள்ள
மலைக்கிராமத்தில் அரண்மனை வீடு என்றாலே... சிறு குழந்தை கூட
இவர்களது கோட்டை போன்ற பெரிய வீட்டை சுட்டிக் காட்டி விடும்.
கம்பம், கம்பம் மெட்டு, மூணாறு, சுருளி, தேவாரம், அம்மா
கெஜம், சின்னமனூர் போன்ற பகுதிகளில் தேயிலை தோட்டங்களும்,
காபி, ஏலக்காய் தோட்டங்களும்... கண்டமனூரை சுற்றியிருந்த பகுதி
களில் அவர்களுக்குச் சொந்தமாய் ஏராளமான விவசாய நிலங்களும்
இருந்தன.



அருகாமையிலிருந்த தேனியிலும் பெரிய குளத்திலும் நிறுவனங்
களும் அலுவலகங்களும் இருந்தன.
மிராசுதாரர் குடும்பம் என்றால்... சுற்று வட்டாரத்திற்கே பிரசி
த்தம்...!
இத்தனை சொத்துக்களையும் ஆண்டு அனுபவிப்பதற்கு பல வரு
டங்கள் கழித்து... கறிவேப்பிலை கொத்தாய் பிறந்தவன் தான் மித்தி
ரன்.
கண்டமனூர் மிராசுதார் குடும்பத்தின் ஏகபோக வாரிசு!
அவனுக்கு பெரிய ஜமீன் குடும்பத்திலிருந்து பெண் எடுக்க
வேண்டும் என்று மனதில் கோட்டை கட்டி வைத்திருந்தாள் சொ
ர்ணம்.
வெள்ளியங்கிரி ஜமீன்தாரரின் மகளைப் பேசி முடிப்பதற்கு
ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள்.
மனதில் பல காலமாய் கட்டி வைத்திருந்த கோட்டை... பொல
பொலவென்று சரிந்து மண்ணோடு மண்ணாகும் என்று கனவிலும் கரு
தவில்லையே?
அவளது கனவைக் கலைத்து.... மனக் கோட்டையை இடித்து....
ஆசையில் மண்ணள்ளிப் போட்ட மிதிலாவை.... அவள் ஆலகால விஷ
மாய் வெறுத்தாள்.
"மித்திரனைக் கைப்பிடிக்க இவளுக்கு என்ன தகுதி? என்ற
எண்ணம் அவளது நெஞ்சில் ஆழமாய் வேரூன்றி இருந்தது.
அழகில் குறைந்தவளா? இல்லை....
ஓங்கி உயரமாய் தங்கத்தில் வார்த்தெடுத்த சிலைபோல் கண்களை
நிறைக்கும் பேரழகி தானே...?
படிப்பில் குறையா?
மெத்தப் படித்தவள். அதிலும் டாக்டர்..!
அப்புறம் என்ன....?
மித்திரன் அவளை காதலித்து தொலைத்து விட்டானே? "கட்
டினால் இவளைத் தான் கட்டுவேன். இல்லைன்னா... விஷத்தைக்
குடிச்சுட்டு நான் செத்துப்போவேன்..." என்று திட்டவட்டமாக கூறி
விட்டானே...?
இவள் கிடைக்காவிட்டால்... சாவதற்கும் துணிந்து விட்டானே?
எம்.பி.ஏ. படித்து முடித்தவன் இது காலம் வரை அம்மா கிழித்த
கோட்டைத் தாண்டி அறியாத அப்பாவி ஆயிற்றே...?

அவனை இந்தளவுக்கு மாற்றியது யார்....?

இந்த சண்டாளி மிதிலா தானே?

அவனை அந்த அளவுக்கு மயக்கி விட்டாளே....?

"என் வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்ட பரதேசி! நீ உருப்படுவியா?

இந்த அரண்மனை வீட்டை ஆள வந்த சின்ன எஜமானியா நீ.?

விட மாட்டேன். ... உன்னை நான் சும்மா விட மாட்டேன். உன்னோட ஜென்ம விரோதி நான் தான்! வாடி... வா...!

மருமகளாய் மிதிலா அந்த அரண்மனைக்குள் அடி எடுத்து வைக்கும் முன்னரே... சொர்ணம் மனதிற்குள்

சவால் விட்டு... அவளை சித்ரவதை செய்ய கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள் என்பது நிஜம்...!

சென்னையில் ஜெயா ஹாஸ்பிடலில் டாக்டராக வலம் வந்த மிதிலா... கண்டமனூரைச் சேர்ந்த மித்திரனை எப்படி சந்தித்தாள்?

அவர்களுக்குள் எப்போது காதல் மலர்ந்தது என்பது சுவாரஸியமான கதை தான்...!

## 2

அப்பா சிவநேசன் ஆஸ்துமா நோயாளி... சதா அறைக்குள்ளேயே இருமிய வண்ணம் அடைந்து கிடந்தார்.

மித்திரன் வெளிநாட்டில் படிப்பை முடித்து விட்டு வந்ததும்...அத்தனை சொத்துக்களையும் நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தான்.

பரம்பரை பணக்கார வீட்டு வாரிசு! பணத்திலேயே புரண்டு வளர்ந்தவர்கள் கட்டுப்பாடு ஏதும் இன்றி தறிகெட்டு திரிவார்கள் என்பது நியதி....!

ஆனால் மித்திரனோ நேர்மாறாக இருந்தான்.

கடமை கண்ணியம் கட்டுப்பாடு கொண்ட இளைஞனாக இருந்தான்.

குந்தி தின்றால் குன்றும் மாளும்

உடையவன் பார்க்காவிட்டால் பயிர் ஒரு முழம் கட்டை என்ற பழமொழிகளின் அர்த்தத்தை நன்கு உணர்ந்த வாலிபனாக இருந்தான்.

கண்ணும் கருத்துமாக நிர்வகித்ததோடு... ஒன்றைப் பத்தாக்கும்



முயற்சியில் முனைப்பாக களம் இறங்கி விட்டிருந்தான்.

மதுரை, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி போன்ற நகரங்களில் சாப்ட்வேர் நிறுவனங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்பினான்.

அதற்கான முயற்சியில் தீவிரமாய் ஈடுபட்டிருந்தான்.

சென்னையில் ஒருவாரகாலம் தங்கி ஆடிட்டர் மற்றும் உதவியாளர்களின் துணையுடன் வேண்டிய ஏற்பாடுகளை போர்க்கால அடிப்படையில் விரைந்து முடித்துவிட்டு.... அறையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த போது... பழைய நண்பன் ஒருவனின் ஞாபகம் வந்தது.

நாளைக்கு ஊருக்கு கிளம்ப வேண்டியிருக்குமே...! இன்றைக்கே நண்பன் முரளியை சந்தித்து வந்தால் என்ன? என்று தோன்ற டைரியைப் புரட்டி முகவரியை எடுத்து குறித்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

"ஹாய் மித்திரா! எப்படிடா இருக்கே?" என்றபடி கைகளைப் பற்றிய முரளியை இழுத்து அணைத்துக் கொண்டான் மித்திரன்.

"நல்லா இருக்ககேன்டா.... போன் பண்ணாம திடீர்னு வந்து நின்னு சர்ப்ரைஸ் குடுத்துட்டேனா...?"

"ஆமா... திகைச்சு தான் போயிட்டேன். ஒரு நிமிஷம் நீ தாமதமா வந்திருந்தா... நான் வெளியே கிளம்பியிருப்பேன்.. ஆஸ்பத்திரிக்கு புறப்பட்டுட்டிருந்தோம். நீ வந்துட்டே..."

"ஆஸ்பத்திரிக்கா? உன் உடம்புக்கு என்ன?"

"எனக்கொண்ணும் இல்லைடா.... அம்மாவுக்கு தான்... காலையிலேர்ந்து நல்ல ஜீரம்.... அவங்களை ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டுப் போகலாம்னு இருந்தேன்...

அப்புறமா போயிக்கிறோம்... என்ன சாப்பிடறே? காபியா? குளிர் பானமா? என் மனைவி தலைப் பிரசவத்துக்கு ஊருக்குப் போயிட்டா.., என்ன முரளி? அம்மா உடம்புக்கு முடியாம இருக்காங்க... நான் வந்த



"மன்னர் புறமுதுகிட்டு ஓடி வந்ததும் அதிர்ச்சி ஆகிவிட்டார்!"

"ஏன்?"

"மகாராணி யார் கூடவோ ஓடிப்போயிட்டாராம்!"

-என்.குணசீலன், பட்டுக்கோட்டை.

துக்காக.... ஆஸ்பத்திரிக்கு போறதை தள்ளிப் போடறியே? கிளம்புங்க முதல்லே...''

உரிமையாய் அதட்டினான் மித்திரன்.

''நீயும் எங்க கூட ஆஸ்பத்திரிக்கு வாயேன். கார்லே போகும் போது பேசிட்டே போகலாம் இல்லியா? மறுக்காதேடா''

கெஞ்சும் தொனியில் நண்பன் பேசவே.. மிதிரனால் மறுக்க முடிய வில்லை.

''ஓ.கே... என்னோட கார்லே போயிடலாம். திரும்ப உங்களைக் கொண்டு வந்து விட்டுட்டு... நீ போட்டு தர்ற காபியைக் குடிச்சுட்டே போறேன்... சரியா?''

சந்தோஷமாய் தலையாட்டிய முரளி.. தனது அம்மாவைக் கைத் தாங்கலாய் அறையிலிருந்து அழைத்து வந்தான்.

இருவரும் கலகலப்பாய் பழைய கதைகளைப் பேசிக் கொண்டு தான் காரில் பயணித்தனர்.

ஜெயா ஹாஸ்பிடலில்... புறநோயாளிகள் பிரிவு பகுதிக்குச் சென் றனர்.

தனது அம்மாவை இருக்கையில் அமர வைத்த முரளி ''டோக்கன் வாங்கிட்டு வந்திடறேன்டா...'' கூறிவிட்டு விரைந்தான்.

ஐந்தே நிமிடங்களில் டோக்கனுடன் வந்தவன்.. மித்திரனுடன் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தான்.

கலகலப்பாக பேசிக் கொண்டிருந்ததில்... பத்து நிமிடங்கள் கரைந் ததே தெரியவில்லை.

திடீரென்று முரளியின் செல்போன் செல்லமாய் சிணுங்கியது.

''வெளியில போய் பேசிட்டு வந்துடறேன் மித்திரா!'' என்றபடி அந்த டோக்கனை நண்பனின் கையில் திணித்து விட்டு வெளியேறி விட்டான்.

''ஏம்பா... மித்திரா நீ எப்போ கல்யாண சாப்பாடு போடப் போறேஎன்று கேட்ட முரளியின் தாயாரைப் பார்த்து இதமாய் புன்ன கைத்தான்.

''அததுக்கு நேரம் வரணும் இல்லையாம்மா ''

பேசியபடி எதிர்த்திசையில் பார்த்தவன்... வியப்பின் விளிம்பிற்கே சென்று விட்டான்.

ஆஸ்பத்திரியிலேயே தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளை கவ னித்து ரவுண்ட்ஸ் முடித்து விட்டு... புற நோயாளிகள் பிரிவை நோக்கி



வந்து கொண்டிருந்தாள் ஒரு அழகான தேவதை!

வெள்ளை கோட் அணிந்து ஸ்டெத்தஸ்கோப்பை கழுத்தில் தொங் கவிட்டுக்கொண்டு... நீல வண்ணக் காட்டன் புடவையில் நடந்து வந்த வளை கண் இமைக்காமல் பார்த்தான் மித்திரன்.

யார் இந்த தேவதை?

இந்த ஹாஸ்பிடலில் வேலை பார்க்கும் டாக்டர் போலிருக்கி றதே?

அப்பப்பா... எளிமையான தோற்றத்திலும் எப்பேர்ப்பட்ட அழகு டன் ஜொலிக்கிறாள்?

நடை உடை பாவனையில்... தான் ஒரு டாக்டர் என்ற மிடுக்கு சி றிதளவு கூட இல்லையே...?

மணந்தால் இப்படியொரு பெண்ணை மணக்க வேண்டும். ஏன் இவளையே மணந்தால் என்ன.

பார்த்த மாத்திரத்திலேயே அவளிடம் தன் மனதைப் பறி கொடுத்து விட்டான் மித்திரன்.

இவர்களைக் கடந்து அவள் அந்த கேபினுக்குள் புகுந்து கொண் டாள்.

மூடப்பட்ட கதவையே வெறித்தான் மித்திரன்.

மறுகணம்....

''டோக்கன்நம்பர் ஏழு'' என்ற அறிவிப்பு வந்ததும்...

சட்டென்று தன் கையிலிருந்த டோக்கனைப் பார்த்தான்.

இதில் நம்பர் ஏழு என்று இருக்கிறதே? உடனே நோயாளியை உள்ளே அழைத்துச் செல்ல வேண்டுமே? இந்த முரளி இன்னமுமா... போனில் கதையளந்து கொண்டிருக்கிறான்?

மீண்டும் ''டோக்கன் நம்பர் ஏழு'' என்ற அறிவிப்பு வரவே... சட் டென்று எழுந்து அந்த அம்மாவைக் கைத்தாங்ககலாய் பற்றியபடி உள்ளே அழைத்துச் சென்றான்.

அரை விட்ட மேஜைக்குப் பின்னால்... அந்த தேவதை அமர்ந்திருப் பாள் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

இவள் வேறொரு கேபினுக்குள் நுழைந்தாளே?

ஓ... அங்கிருந்து இந்த அறைக்கு வருவதற்கு வழி இருக்கிறது போலும்...!

இவளை மிக அருகாமையில் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் அமைந்திருக் கிறதே...?

உண்மையில் நான் அதிர்ஷ்டக்காரன்...!

சே... நானே ஒரு நோயாளியாக இருந்திருக்கக் கூடாதா? உள் மனம் ஏங்கியது. கால்கள் தரையில் படாமல் அந்தரத்தில் மிதப்பது போன்று இருந்தது. மித்திரனின் மனதிற்குள் மகிழ்ச்சி பிரவாகம் எடுத்துக் பொங்கியது.

அந்த அம்மாவின் நாடியைப் பிடித்தப் பார்த்து விட்டு.. நெருங்கி வந்து ஸ்டெத்தஸ் கோப்பால் பரிசோதித்துப் பார்த்தவள்... கடமையே கண்ணாக இருந்தாள்.

"காய்ச்சல் எத்தனை நாளாக இருக்கும்மா? உடம்பு கால் வலி அதிகமா இருக்கா?"

ஆளுக்கேற்றபடி குரலிலும் அவ்வளவு இனிமை..! காற்றில் தேனைக் கலந்து குயிலைப் பழித்த அந்த இனிய குரலைக் கேட்டு... மதி மயங்கிப் போய் நின்றிருந்தான்.

அந்த அம்மாவுக்கு ஊசி போட்டு விட்டு மருந்து சீட்டில் மளமள வென்று எழுதி... இவனிடம் நீட்டினாள்.

"இந்தாங்க சார்! இதுலே ரெண்டு நாளைக்கு மாத்திரைகள் எழுதி கொடுத்திருக்கேன். சாதாரண வைரஸ் காய்ச்சல் பயப்பட வேண்டாம்..."

அதுவரை இவளை விழுங்கி விடுவது போல் பார்த்துக் கொண்டிருந்தவன்... சட்டென்று சுதாரித்து சிரமப்பட்டு இயல்பாய் முகத்தை வைத்துக் கொண்டு... அவள் நீட்டிய பிரிஸ்கிரிப்ஷனை பவ்யமாய் வாங்கினான்.

"தேங்க்யூ டாக்டர்"

"இன்னிக்கு ஒருநாள் பிரெட்டும் பாலும் குடுங்க... நாளைக்கு கஞ்சி குடிக்கலாம்.. எப்பவுமே வெந்நீரை ஆற வச்சு குடிக்கிறது நல்லது..."

அந்த அம்மாளின் தோளில் தட்டிக்குடுத்து இதமாய் முறுவலித்தாள்.

"அது என்னமோ தெரியலைம்மா... உன்னைப் பார்த்ததுமே பாதி காய்ச்சல் போயிட்ட மாதிரி ஒரு உணர்வு...!

உனக்கு நல்ல கைராசிம்மா.... நீ தொட்டுப் பார்த்தவுடனே வியாதி பறந்துடுதே...?

ரெண்டு நாளைக்கு மருந்து எழுதிக் கொடுத்தேயில்ல? பாரேன்... எனக்கு இன்னிக்கு ராத்திரியே சரியாயிடும்னு தெரியுமா?"

அந்த அம்மாள் உரிமையுடன் பேசுவதை ஆச்சரியத்துடன் பார்த்துக்



கொண்டிருந்தான் மித்திரன்.

"அதுக்கு காரணம்... என்னோட கைராசியில்லைம்மா... உங்களோட நம்பிக்கை..!"

தன்னடக்கத்துடன் பேசியவளை இடைமறித்துப் பேசினாள் முதியவள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா... உன்னோட கைராசி தான் காரணம்...! எல்லா டாக்டர்களுக்கும் இந்த மாதிரி ஒரு கைராசி அமையாது தெரியுமா?

நான் மட்டுமில்ல... இந்த ஹாஸ்பிடலுக்கு வர்றவங்க கிட்டே கேட்டுக் பாரேன். நிறைய பேரு என்னை மாதிரி தான் சொல்றாங்க...

டாக்டர் மிதிலாவா? கைராசியான டாக்டர் ஆச்சே? அவங்க தொட்டுப் பார்த்து ஒரு வாட்டி மருந்து குடுத்தாங்கன்னா...

உடனடியா சரியாயிடுமே...?

சின்ன வயசுலேயே டாக்டர் மிதிலாவுக்கு அப்படியொரு கைராசி அமைஞ்சு போச்சுன்னு மத்தவங்க சொல்றதை பலவாட்டி நான் கேட்டிருக்கேன்..."

முத்துப்பல் வரிசை தெரிய பளீரென புன்னகைத்தாள் மிதிலா..

"எல்லாத்துக்குமே மனசு தான் காரணம்! இவளைப் பார்த்துட்டா... நமக்கு சரியாயிடும்கிற நம்பிக்கை... அந்த நம்பிக்கையில உடம்புல இருக்கிற வியாதி சீக்கிரமா தீர்ந்துடுது... அதுதான் நிஜம்...!"

"நீ ரொம்ப தன்னடக்கமா பேசறேம்மா..."

"உங்க எல்லாருடைய அன்புக்கும் நான் பாத்திரமாயிருக்கேனே? அதுக்கு கடவுளுக்கு தான் நன்றி சொல்லணும்..."

கை கூப்பினாள் மிதிலா.

"அப்போ நா வரட்டுமா?" எழுந்து கொண்டு விடைபெறத்தனித்

**"மரியாதையாய் உன் கையில் இருக்கிற சூட்கேஸை கொடுத்திடு..."**

**"அப்ப இதில் இருக்கிற வெடி குண்டையெல்லாம் என்ன பண்றதாம்?"**

**-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிபட்டி**



தபடி கேட்டாள் அந்த அம்மாள்.

"ஊஹும்.. வராதீங்க.. நீங்க நலமா ஆரோக்கியமா இருக்கணும். இருப்பீங்க.... அடிக்கடி இங்க வரணும்னு ஆசைப்படக் கூடாது. சரியா?"

அந்த அம்மாள் மனம் விட்டு கலகலவென்று சிரித்து விட்டாள் மித்திரனுக்கும் சிரிப்பு பீரிட்டது.

"அப்பாடி... சிரிக்க வச்சுட்டியே? நான் இந்த மாதிரி மனசு விட்டு சிரிச்சு ரொம்ப காலமாச்சு... சரி... நாங்க கிளம்பறோம்...

அம்மாடி! உன்னோட நல்ல மனசுக்கு நீ அமோகமா இருக்கணும்..."

மனதார வாழ்த்தியதற்கு... மரியாதையுடன் கைகளைக் கூப்பினாள் மிதிலா..

அறையை விட்டு வெளியேறும் முன்... திரும்பிப் பார்த்து அந்த மோகன ரூபத்தை விழிகளில் நிறைத்துக் கொண்டு அரை மனதோடு சென்றான் மித்திரன்.

அந்த அம்மாளின் மீதே புன்னகையுடன் பார்வையைப் பதித்திருந்த மிதிலா... இவனை... இவனது நேசம் கோர்த்த பார்வையை கவனிக்கத் தவறிவிட்டாள்.

நண்பன் முரளியின் வீட்டிற்கு மீண்டும் காரில் சென்று அவன் தந்த காபியைப் பருகி விட்டு... வெகுநேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அறைக்குத் திரும்பினான்.

பேச்சு வாக்கில் அவனது அம்மாவிடம் மனம் தாளாமல் கேட்டே விட்டான்.

"எம்மா.... அந்த டாக்டரை உங்களுக்கு ரொம்ப நாளா தெரியுமா.?"

கிட்டத்தட்ட ஒன்றரை வருஷமா தெரியும். எனக்கு பூஞ்சை உடம்பு தம்பி! அடிக்கடி இருந்தாப்பல இருந்து உடம்புக்கு முடியாம போயிடும்.

அப்பப்போ ஆஸ்பத்திரிக்குப் போய் வர்றதால் பழக்கமாயிடுச்சு. அந்தப் பொண்ணு இங்க வேலைக்குச் சேர்ந்ததிலிருந்து... எனக்கு அவளைத் தெரியும்..."

"ஓ. அப்படியா?"

"டாக்டருங்கிற பந்தா இல்லாம.... உரிமையா என்னை அவ அம்மான்னு தான் கூப்பிடுவா.., பதிலுக்கு நானும் உரிமை எடுத்துக்



கிட்டு மிதிலான்னு பேர் சொல்லிக் கூப்பிட்டு பழகிட்டேன்...

எலுமிச்சை போட்டு துடைச்சு வச்ச உற்சவர் சிலை மாதிரி எவ்ளோ அழகாயிருக்கா, ஹூம்...!

இந்த தங்க விக்கிரகத்தை கட்டிக்க... யாருக்கு குடுத்து வச்சிருக்கோ... தெரியலையே....?" என்று கூறியபடி அறைக்குள் புகுந்து கொண்டாள்.

அந்த கடைசி வரி மட்டும் திரும்பத் திரும்ப... அவனது செவிகளில் எதிரொலித்தாற்போல் இருந்தது.

இரவெல்லாம் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தான்.

மறுநாள் ஊருக்குச் செல்ல வேண்டும் என்று ஏற்கனவே எடுத்திருந்த முடிவை மாற்றிக் கொண்டு... அம்மாவுக்கு காலையில் போன் செய்தான்.

"என்னப்பா மித்திரா? கிளம்பி வந்துட்டிருக்கியா?" ஆர்வமாய் மறுமுனையில் கேட்டாள் சொர்ணம்.

"இல்லம்மா உடம்பெல்லாம் அடிச்சுப் போட்ட மாதிரி இருக்கும்மா. காய்ச்சல் வேற... அதான் பிரயாணத்தைத் தள்ளிப் போட்டுட்டேன்"

பொய்மூட்டையை தயக்கத்துடன் அவிழ்த்து விட்டான் மித்திரன்.

"அடக்கடவுளே! ஆஸ்பத்திரிக்கு போய் உடம்பை கவனி மித்திரா! நல்லா ஓய்வெடு. ஐயோ நானும் உன்கூடவே வர முடியாம போச்சே"

பதறினாள் சொர்ணம்.

"நீ என் கூட வந்துட்டா அப்பாவை யாரு கவனிச்சுப்பாங்க? ஆயிரம் ஆட்படை இருந்தாலும் நீ கிட்டக்க இருந்து கவனிக்கிறதுக்கு ஈடாகுமா?

எனக்கு சரியாயிடும். இன்னிக்கு ஆஸ்பத்திரிக்கு போய் சிகிச்சை எடுத்துக்கிறேன். நீ கவலைப்படாம இரும்மா

"மருந்து மாத்திரையை மறக்காம போட்டுக்கிட்டு நல்லா படுத்து தூங்கு. எல்லாத்தையும் இழுத்துப்போட்டு இராப்பகலா மும்முரமா இருந்துட்டியேப்பா? அதனால தான் இப்படி ஆயிடுச்சு. திருஷ்டி நல்லா பட்ருச்சு போலிருக்கு " பச்சாதாபத்தில் தழுதழுத்தாள்.

"சரிம்மா காய்ச்சல் விட்டதும் நான் பறந்து வந்துடறேன். எதைப்பத்தியும் விசனப்படாம இரு. சரியா? "

அவசரமாய் பேச்சை முடித்தவனுக்கு இருப்பு கொள்ளவில்லை. மிதிலா அவன் மனதில் விஸ்வரூபமெடுத்து ஆக்கிரமித்து இருந்தாள்.

காதல் மனதுக்குள் புகுந்து விட்டதால் அவனுக்கு இறக்கை கட்டிப் பறக்க வேண்டும் போலிருந்தது.

இத்தனைக்கும் இது ஒருதலைக்காதல்!

இதற்கே இத்தனை சக்தியா?

அவளும் என்னைக் காதலித்து விட்டால் எப்படி இருக்கும்?

அப்படி மட்டும் நடந்து விட்டால் இந்த உலகத்திலேயே அதிர்ஷ்டசாலி நானாகத்தான் இருப்பேன்.

அவளை மீண்டும் சந்திக்க வேண்டுமே?

ஜெயா ஹாஸ்பிடலுக்கு சென்று வாசலிலேயே காத்திருந்து தூரத்திலிருந்தாவது தரிசனம் செய்து விடலாமா?

ஹூகூம் அது போதாதே!

அவளைக் கிட்டத்தில் பார்க்க வேண்டும்!

பார்த்துப் பேச வேண்டும். அவளது அழகை கண்குளிரப் பார்த்து அவளது இனிய குரலை செவி குளிர கேட்க வேண்டும் என்று மனம் ஏங்கித் தவிக்கிறதே!

சாதாரணமாக வலியச் சென்று பார்த்து பேசினால் என்னவாகும்?

என்னை மட்டமான ஆசாமி என்று தவறாக எடை போட்டு விடுவாளோ?

அழகான பெண்களை கண்டால் வழிந்து பேசும் ரகம் என்று தரை மட்டமாக நினைத்துக் கொள்வாளோ?

என்ன செய்வது? எப்படி சந்தர்ப்பத்தை உருவாக்குவது? மூளையை கசக்கிக் கொண்டு யோசித்தான்.

உருப்படியாய் ஒரு யோசனையும் உள்ளுக்குள் உதிக்கவில்லை.

மனதில் வெறுப்பு அலையடிக்க அந்த ஐந்து நட்சத்திர ஹோட்டல் அறையின் பால்கனியைத் திறந்து கொண்டு வெளியில் வந்து நின்றான்.

கருமேகங்கள் சூழ்ந்து பகலிலேயே இருட்டி விட்டாற்போன்று மழை வர ஆயத்தமாயிருந்தது.

பளிச்சென்று மின்னல் வெட்டியதைப் போல் மித்திரனுக்குள் அந்த யோசனை உதித்தது.

சிறு வயதிலேருந்தே மழையில் நனைந்து விட்டால் போதும் அவனுக்கு ஜலதோஷமும் தலைவலியும் காய்ச்சலும் படை எடுத்து வந்து அவனைப் படாத பாடு படுத்தி விடும்.

கிட்டத்தட்ட ஒரு வாரத்திற்கு அவனைப் படுத்தியெடுத்து படுக்கையில் சாய்த்து விடும்.



நல்ல சந்தர்ப்பம் வாய்த்து விட்டது என்ற மகிழ்ச்சியில் மனம் துள்ளிக் குதித்தது.

மழை தூற ஆரம்பித்து வேகம் கொண்டு வலுத்தது.

சொட்ட சொட்ட நனைந்து விட்டு வெகு நேரம் கழித்து நடுங்கியபடி உடைமாற்ற உள்ளே சென்றான்.

அவன் எதிர்பார்த்தது போலவே காய்ச்சலும் இருமலும் ஜலதோசமும் அன்று ச [illegible] நள் அவனை முற்றுகையிட்டன.

## 3

கரை காணாத காதல் கண்களில் மிதக்க..

பொங்கி வந்த இன்ப உணர்வோடு மிதிலாவின் அறைக்குள் புகுந்த மித்திரனுக்கு ஏமாற்றம் தான் காத்திருந்தது.

கட்டுக்கொள்ளாத பூரிப்புடன் முகமெங்கும் பிரேமை முகிழ்க்க அவளை விழுங்கி விடுவது போன்று பார்த்தவனைக் கண்டதும் மிதிலா உஷாராகி விட்டாள்.

முதல் நாள் அந்த அம்மாளுடன் அவன் வந்ததையே நினைவில் வைத்துக் கொள்ளாததைப் போல் செயல்பட்டாள்.

அறிமுகமே இல்லாத ஒருவனை அப்போது தான் பார்ப்பவளைப் போன்று ஏறிட்டாள்.

'' எஸ்... என்ன சார் செய்யுது?''

'' காய்ச்சல் ''

'' எத்தனை நாளா? ''

'' இப்போ தான் ஐ மீன் மதியத்துக்கு மேல தான் திடீர்னு ''

'' ஓ ''

டெம்பரேச்சரை செக் செய்து விட்டு நிமிர்ந்தாள்.

''நூத்தி மூணு இருக்கு. காய்ச்சல் மட்டும் தானா? தலைவலி, உடம்பு கால் வலியும் இருக்கா? ''

''இருமல், சளி, தலைவலியும் இருக்கு''

முரளியின் அம்மாவைப் பற்றியும் நேற்று தான் அவள் கூடவே வந்தது பற்றியும் ஏதாவது மிதிலா விசாரிப்பாள் என்று எதிர்பார்ப்புடன் அவளது முகத்தையே ஊன்றிப் பார்த்தான்.

'' மாத்திரை எழுதித் தர்றேன். தொடர்ந்து மூணு நாள் போட்டுக்கங்க. இருமலுக்கு டானிக் இரவு நேரத்துல மட்டும் எடுத்துக்கங்க ''

அவள் பேசி முடிப்பதற்குள் அவசரமாய் குறுக்கிட்டான்.

" மேடம் தலைவலி ஜாஸ்தியா இருக்கு. காய்ச்சல்லே கண் எரிச்சல். ஒரு இன்ஜெக்ஷன் போட்டுருங்களேன் பிளீஸ் "

கெஞ்சும் தொனியில் பேசியவனை ஒரு கணம் ஏறிட்டாள்.

ஒன்றும் பேசாமல் சிரிஞ்சில் மருந்தை ஏற்றி அவனது இடது கையில் ஊசியைப் போட்டாள்.

கொஞ்சம் கூட வலியே தெரியாமல் லாவகமாய் ஊசி போட்டு விட்டு பஞ்சினால் அந்த இடத்தை தேய்த்து விட்டாள்.

"மூனு நாள் கழிச்சு வந்து பார்க்கவா டாக்டர்?"

"நோ நோ தேவைப்படாது மூனு நாள்ல சரியாயிட்டா அப்புறம் என்னத்துக்கு வரணும்?"

மீண்டும் அவன் மனதில் ஏமாற்றம் முற்றுகையிட்டது.

"உன்னைப் பார்க்கணும். உன்னைப் பார்க்காம என்னால இனி ஒரு நாள் கூட இருக்கவே முடியாதே. எஸ். நீயில்லாத வாழ்க்கையை என்னால நெனச்சுக் கூடப் பார்க்க முடியலை. இன்னுமா புரியலை மிதிலா? ஐ லவ் யூ ஸோ மச் டார்லிங். சத்தியமா என் உயிரினும் மேலா உன்னை நான் நேசிக்கிறேன் " என்று சொல்லி விட நாக்கு துடித்தது.

தொண்டை வரை ஓடி வந்த வார்த்தைகளை வெகு சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான்.

அவள் நீட்டிய பிரிஸ்கிரிப்ஷனை வாங்கியவனுக்கு ஒரு பக்கம் உள்ளூர ஏமாற்றம் அலையடித்தாலும் இன்னொரு பக்கம் மகிழ்ச்சி குமிழியிட்டது.

இந்த மட்டுமாவது இவளை நேரில் இத்தனை கிட்டத்தில் பார்த்து விட்டோமே

அதுவும் இந்த அழகு தேவதையின் மெல்லிய விரல்கள் மென்மையாக ஸ்பரிசித்து மிருதுவாக வலியே தெரியாமல் ஊசி ஏற்றினாளே!

அந்த தருணத்தில் மனதில் குற்றாலச் சாரல் அடித்ததே? ஐஸ்கிரீம் மழை சிலுசிலுவென வழிந்தாற் போலிருந்ததே!

போதும் இந்த அரிய பாக்கியம் கிட்டியதே பெரிய விஷயம்

எல்லாவற்றையும் விட ஒன்று மட்டும் தெளிவாய் புரிகிறது. இவள் மிகவும் கண்ணியமானவள். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள். நல்ல விதமாக வளர்க்கப்பட்டிருக்கிறாள்.

இந்தக் காலத்தை சேர்ந்த இளம் பெண்... அதுவும் ஒரு டாக்டர்.. பிரபல மருத்துவமனையில் பணிபுரிபவளாக இருந்தாலும் கட்டுக்



கோப்பாக கறாராக நடந்து கொள்கிறாள்.

வாலிபர்களிடம் வெகு அளவோடு நறுக்குத் தெறித்தாற் போல் பேசுகிறாள்.

பிடித்திருக்கிறது. மிகவும் பிடித்திருக்கிறது.

மனதில் இவள் மீது காதல் மட்டுமல்ல, மரியாதையும் ஏற்பட்டு இவள் கோபுரமாய் உசந்து விட்டாள். இன்னொரு முறை இவளைப் பார்ப்பதற்கு இங்கு வரக்கூடாது. வந்தால் என் கவுரவம் போய் விடும்.

இரண்டொரு நாளில் ஊருக்குப் போய் சேர வேண்டியது தான்.

ஐயோ ஊருக்குப் போக வேண்டும் என்றாலே... நெஞ்சம் கனக்கிறதே!

இவள் என்னவள். இந்த அழகு தேவதையைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாதே?

ஒரே நாளில் இவளைப் பார்த்த மாத்திரத்தில் அடியோடு நான் மாறிப் போனேனே?

இது ஒருதலைக்காதல் தான்..

இந்தக் காதல் நிறைவேறுமா? ஊகூம் ஒரு சதவீதம் கூட அதற்கு வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லையே?

இது நடக்காத காரியம் என்று அப்பட்டமாய் புரிந்தாலும் என் மனதை நான் மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

மணந்தால் இவளைத் தான் மணக்க வேண்டும். இல்லையெனில் காலம் முச்சூடும் இப்படியே பிரம்மச்சாரியாகவே இருந்து விடப்போகிறேன்.

வீணாக மனதைத் தொலைத்து விட்டு காலம் முழுவதும் கட்டைப் பிரம்மச்சாரியாக இருப்பதில் என்ன லாபம்?

அம்மா என்னை விட்டு வைப்பாளா?



'அவர் பைனான்ஸ் கம்பெனி நடத்துகிறார்...''

''அவரின் மனைவி டான்ஸ் ஸ்கூல் நடத்துகிறாள்''

''அப்ப ரெண்டு பேரும் ஓடி, 'ஆடி' சம்பாதிக்கிறாங்க னு சொல்லுங்க?''

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை.

சிறுவயதிலிருந்தே வைராக்கியம் எனக்கு ஜாஸ்தி ஆயிற்றே! இவளை என் மனதில் இதய சிம்மாசனத்தில் காதல் தேவதையாக அமர வைத்து விட்டேனே?

என் மனதிலிருந்து இவளை இவளது ஞாபகத்தை யாராலும் தூக்கி எறிய முடியாது.

எறியவும் விடமாட்டேன். இதுவரை மனம் உருக கடவுளிடம் எதற்காகவும் நான் வேண்டிக் கொண்டதில்லை.

இப்போது வேண்டிக்கொள்கிறேன்!

கடவுளே! கருணை காட்டு! இவளுக்கு கணவனாகும் பாக்கியத்தை எனக்கு தரணும்! இது சாத்தியப்படாத விஷயம் தான்.

ஆனால் உண்மையான காதலுக்கு ஒரு சக்தி இருக்கும் என்று புத்தகத்தில் வாசித்திருக்கிறேனே.

இது ஒருதலைக்காதலாய் இருந்தாலும் உண்மையான காதல் தான்.

எனது உண்மையான காதல், இந்த ஆத்மார்த்தமான நேசம் இவளை என்னிடம் சேர்த்து வைக்கும் என்று ஆணித்தரமாக நம்ப வேண்டியது தான்!

நம்பிக்கை தானே வாழ்க்கை!

நீண்ட பெருமூச்செறிந்தபடி மிதிலாவை ஏக்கத்துடன் ஒரு பார்வை பார்த்து விட்டு வெளியேறினான்.

அவனது நம்பிக்கை வீண்போகவில்லை.

வாழ்க்கையே விதி வசத்தில் தானே இருக்கிறது? உண்மையாகவே அவனது காதலுக்கு சக்தி இருந்ததா? அல்லது விதி மிதிலாவை எஸ்டேட்டுக்கே அனுப்பி வைத்ததா? என்று தெரியவில்லை.

எஸ்டேட்டில் அப்படியொரு சூழலில் அவளை மீண்டும் சந்திக்கப் போகிறோம் என்று அவன் கனவிலும் கருதவில்லை என்பது நிஜம்!

## 4

மிதிலாவுக்கு தான் ஒரு டாக்டராக வேண்டும். எளிய மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்று சிறு வயதிலிருந்து கட்டுக்கடங்காத ஆவல்!

அவ்வப்போது கிராமங்களிலோ அல்லது மலைக்காட்டிலோ தன்னார்வ தொண்டு நிறுவனம் நடத்தும் மருத்துவ முகாம்களில் மிதிலா



ஆர்வத்தோடு கலந்து கொண்டாள்.

இவளது நல்ல எண்ணத்தை புரிந்து கொண்ட பெற்றோர்கள் மறுப்பேதும் சொல்லாமல் தாராளமாய் அனுப்பி வைத்தார்கள்.

இந்த முகாம்களில் கலந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே விடுப்பே எடுக்காமல் தனது கேஷுவல் லீவை சேமித்து வைத்து முகாம்களுக்கு செல்லும் சந்தர்ப்பத்தில் அந்த லீவை பயன்படுத்திக் கொள்வாள்.

ஜெயா மருத்துவமனை நிர்வாகமும் இதுவரை எந்த ஆட்சேபனையும் தெரிவித்ததில்லை என்பதால் மிதிலா உற்சாகத்துடன் முகாம்களுக்கு அடிக்கடி சென்று வந்தாள்.

"மேடம்! போடிமெட்டுக்குப் பக்கத்துல ஒரு எஸ்டேட்டுக்கு நெருங்குண்டம்னு பேரு. அந்தப் பகுதியில ஒரு வித விஷக்காய்ச்சல் பரவிட்டிருக்காம். நாம்ப அங்க போய் பாதிக்கப்பட்டவர்களை கவனிக்கிறோம். அதே சமயத்துல ஒருத்தர் பாக்கி விடாம எல்லோருக்கும் தடுப்பு ஊசியும் போடணும்னு பிளான் பண்ணியிருக்கோம்.

இந்த வாட்டி ரெண்டு வாரத்துக்கும் மேலா முகாம் அங்க நீடிக்கும்னு தோணுது.

அக்கம், பக்கத்துல இருக்கிற எஸ்டேட்களுக்கு அந்த விஷக்காய்ச்சல் பரவ வாய்ப்பு இருக்கிறதால நாம சுற்று வட்டாரத்துல ரெண்டு மூணு இடங்கள்ளே முகாமிடப் போகிறோம்.

உங்களுக்கு அவ்ளோ நாள் லீவு கிடைக்குமா மேடம்? நீங்க வருவீங்களா?" போனில் தொடர்பு கொண்டு கேட்டார்கள்.

"கண்டிப்பா வருவேன். நல்ல விஷயத்துக்காக அங்கே போறதுக்கு குடுத்து வச்சிருக்கணுமே?"

இதுவரைக்கும் இவ்ளோ நாள் நான் லீவு எடுத்ததில்லை. இதான் முதல் முறை! முன் கூட்டியே இதைப்பத்தி லீவு கேட்டா நிர்வாகத்துல அனுமதி தருவாங்கன்னு நான் நம்பறேன் நூறு சதவீதம் நான் வர்றேன் சார்!"

பேசிவிட்டு செல்போனை அணைத்தவளுக்கு இனம் புரியாத மகிழ்ச்சி பொங்கியது.

இதுவரை நிறைய கிராமங்களுக்கு சென்று வந்திருக்கிறாள்.

ஒரே ஒருமுறை தான் மருத்துவ முகாமுக்காக குன்னூர் எஸ்டேட்டிற்கு சென்றிருக்கிறாள். மூன்றாவது நாளே முகாம் முடிந்து ஊர் திரும்பி விட்டாள்.

அந்த மூன்று நாட்களில் மிதிலாவுக்கு எஸ்டேட்டை ஆசை தீர சுற்றிப் பார்க்க சந்தர்ப்பமே வாய்க்கவில்லை.

அவளுக்கு எஸ்டேட்டின் இயற்கை வனப்பை சில்லென்று விழிகளால் அள்ளிப்பருக வேண்டும் என்று தீராத ஆசை.

''கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டவில்லை'' என்பதைப் போன்று குன்னூர் எஸ்டேட்டுக்குச் சென்றிருந்தும் எதையுமே சுற்றிப் பார்க்க முடியவில்லையே என்ற குறை அவளுக்கு.

''கடமையை சரிவர செய்து விட்டு வந்தோமே அது போதும்'' என்று தன்னைத் தானே திருப்திப் படுத்திக் கொண்டிருந்தாள்.

இப்போது நெடுங்குண்டம் எஸ்டேட் பகுதியில்...

இரண்டு வாரங்களுக்கு மேலாக தங்கப் போகிறோமே

இந்த வாட்டியாவது எஸ்டேட்டை சுற்றிப் பார்க்க கண்டிப்பாக சந்தர்ப்பம் கிடைத்து விடும்.

ஸ்வெட்டர், ஸ்கார்ப் என்று எஸ்டேட்டுக்கு தேவையான இத்யாதிகளை மறக்காமல் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டியது தான்.

சிறுகுழந்தை போல குதூகலப்பட்டாள் மிதிலா.

நெடுங்குண்டம் எஸ்டேட்டிற்கு செல்வதற்கு வழக்கம் போல் பெற்றவர்கள் அவளுக்கு பச்சைக் கொடி காட்டி விட்டார்கள்.


பணிபுரியும் மருத்துவமனையும் அனுமதி வழங்கி விட்டது. நெடுங்குண்டம் எஸ்டேட்டில் மருத்துவ முகாமில் காலை எட்டு மணி முதல் மாலை 5 மணி வரை நோயாளிகளை கவனிக்கவும் மற்றவர்களுக்கு தடுப்பு ஊசி போடவும் நேரம் சரியாக இருந்தது.

ஐந்து மணிக்கு மேல் இலேசாக மேகம் கறுத்து மழை தூறத் தொடங்கி விடுவதால் மிதிலாவால் எங்கும் காலாற நடந்து சுற்றிப்

''டேய்... ஒழுங்கா தூங்கிடு...
இல்லைனா அம்மா வந்து...''
''அடிப்பாங்களா?''
''அடிச்சா பரவாயில்லையே
தாலாட்டுப்பாடுவாள்...ஜாக்கிரதை...''
-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி







பார்க்க முடியவில்லை.

ஐந்தரை மணிக்கே இருட்டும் கவிழ ஆரம்பித்தது. உடன் பணிபுரியும் டாக்டர்களும், நர்சுகளும் வேலை நேரம் முடிந்ததும் தாங்கள் தங்கியிருக்கும் அறைகளில் முடங்கி விட்டனர்.

அவளுடன் வெளியில் வருவதற்கு யாரும் தயாராகவில்லை.

'' நாங்க வரலைப்பா. குளிரு நடுக்கி எடுக்குது. இதுல மழை வேற தூறுது. நனைஞ்சோம்னா விறைச்சு சாக வேண்டியது தான் '' என்று மறுத்து விட்டனர்.

'' சென்னையில சதா வெந்து சாகறோம். அருமையான கிளைமேட். சிலாகிச்சு ரசனையோட இதை அனுபவிக்க கொடுத்து வச்சிருக்கணுமே. சரி நான் போறேன் ''

குடையை எடுத்து விரித்துக் கொண்டு வெளியில் ஒரு நாள் கிளம்பி விட்டாள்.

எஸ்டேட்டில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் முதியவர் ஒருவர் அந்த சரிவில் ஏறும்போது எதிர்ப்பட்டார்.

''முகாமிற்கு வந்திருக்கிற டாக்டரம்மா தானே தனியா எங்கம்மா போறே?''

''வந்து அஞ்சாறு நாளாச்சு. இன்னிக்காவது கொஞ்சம் தூரம் எஸ்டேட்டுல நடந்து சுத்திப் பார்க்கலாம்னு''

அவள் பேசி முடிப்பதற்குள் அவசரமாய் குறுக்கிட்டார்.

''வயசுப்பொண்ணு அந்தி சாயற நேரத்துல... அதுவும் இந்தப் பகுதியில தனியா போனா ஆபத்து தாயி''

''ஆபத்தா அப்படி என்ன ஆபத்து வரும்கிறீங்க ஐயா? புரியும்படியா சொல்லுங்களேன் ''

சிரித்தபடி பணிவாய் கேட்டாள் மிதிலா.

''என்ன இப்படி கேட்டுட்டே தாயி சமீபகாலமா சிறுத்தைங்க, காட்டு எருமைங்க, சமயத்துல யானைங்க நடமாட்டம் ஜாஸ்தியா இருக்கு தாயி

எதிர்ப்பட்ட ஆட்களை விட்டு வைக்கிறதில்லை. காட்டு மிருகங்களால மட்டுமில்ல உன்னைப் போல அழகான குமரிப் பொண்ணுங்களுக்கு மனித மிருகங்களாலும் ஆபத்து காத்திருக்கு தாயிது.

என்ன தாயி முழிக்கிறே? காலிப்பசங்க மூக்கு முட்டக் குடிச்சுப் போட்டு அலைவானுங்க தாயி எதுக்கு வீணா வம்பை விலை குடுத்து வாங்கணும்? ''



'' உங்க அக்கறைக்கு நன்றி ஐயா! வந்தது வந்துட்டேன். இதோ இந்த சரிவில இறங்கி அங்க காட்டு புஷ்பங்கள் பூத்திருக்கு பாருங்க அதைக் கிட்டத்துல போயி பார்த்து ரசிச்சுட்டு நான் திரும்பிப் போயிடறேன் ''

'' பார்த்து பத்திரமா போயிடு தாயி ''

'' சரிங்க ஐயா '' சிறிது தூரம் நடந்து சேலைக் கொசுவத்தை தூக்கி இடுப்பில் செருகிக் கொண்டாள். அந்த சரிவில் நிதானமாய் இறங்கினாள்.

காட்டு ரோஜாக்களும், டேலியாக்களும் விதவிதமான வண்ணங்களில் பூத்து மலைக்காற்றுக்கு அழகாய் தலை அசைத்துக் கொண்டிருந்தன. தூறலும் நின்று விட்டதால் குடையை மடக்கினாள்.

செண்டு செண்டாய் பூத்து கண்களை ஈர்த்த காட்டு வெள்ளை ரோஜாக்களை ஆசையாய் வருடி விட்டு ஒரேயொரு பூவை மெதுவாக பறித்துக் கொண்டாள்.

'' ஊருக்குப் போறதுக்கு முன்னாடி ஒருநாள் காலை நேரத்துல வந்து நிதானமாக ரசிக்கணும் ''

தனக்குத் தானே பேசியபடி மேட்டின் மீது மீண்டும் ஏறினாள்.

கையிலிருந்த பெரிய மலரையே பார்த்தபடி நான்கடி நடந்தவள்,

தற்செயலாய் ஏறிட்டபோது அவளுக்கு தூக்கி வாரிப்போட்டது.

இருபதடி தூரத்தில் பாதையை மறித்தபடி ஒற்றை யானை நின்று கொண்டிருந்தது.

''யானை கூட்டமா வந்தா நாம பயப்படத் தேவையில்லை ஆனா ஒத்தை யானையா வந்துட்டா ஆபத்து அதுவும் காட்டு யானையா இருந்தா நாம தனியா மாட்டிக்கிட்டா அவ்ளோ தான். நமக்கு கஜேந்திர மோட்சம் தான் '' என்று அப்பா பத்மநாபன் எப்போதோ கூறியது ஞாபகத்திற்கு வந்தது.

''தனியா வந்தது தப்பாப் போச்சே!'' அதிர்ச்சியில் அவளால் அலறக் கூட முடியவில்லை. கையில் இருந்த குடையும், பூவும் நழுவி விழுந்தன.

உடம்பெங்கும் கிலி கிளை விட்டுப் படர்ந்தது.

## 5

காட்டு யானை தும்பிக்கையால் பெரிய மரக்கிளையை ஒடித்தது.

திகிலில் மிதிலாவின் நாக்கு உலர்ந்தது.

யானை என்னை பார்த்திருக்குமோ?

பின்னால் ஓடிவிடலாமா? ஓடினால் துரத்த ஆரம்பித்து விடுமே? யானை அசுர வேகத்தில் ஓடி வந்து விடுமே? நான் சிக்கி விடுவேனே?

பயந்து ஓடினால் துரத்தும். அதைச் சீண்டாமல் அமைதியாக சென்று விட்டால் அதுவும் சாதுவாக இருக்கும். என்று படித்திருக்கிறேனே?

என்ன செய்வது?

யானை மேட்டின் மீது வெகு சுலபமாய் ஏறி விடும் என்பார்களே?

சரிவில் இறங்குவதற்கு அது பயப்படும். மெதுவாய் தான் இறங்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேனே?

மெதுவாய் சரிவிலேயே இறங்கி விட வேண்டியது தான்.

காலடி ஓசை கேட்காத வண்ணம் மெல்ல வந்த வழியே பின்னோக்கி நடந்து அந்த சரிவில் இறங்கி விட்டாள். இருள் வேகமாய் கவிழ ஆரம்பித்தது.

வேறு பாதை வழியாக செல்வதற்கும் அவளுக்கு வழி தெரியாதே?

தெரியாத பாதையில் நடந்து வழி தவறி விட்டால் அதுவும் பெரிய சிக்கலாகி விடுமே?

அந்த முதியவரின் எச்சரிக்கையை மீறியது எவ்வளவு பெரிய பிசகு?

வந்த வழியே அப்படியே திரும்பிச் சென்றிருந்தால் இந்த பிரச்சனை வந்திருக்குமா?

அந்த காட்டுயானை எப்போது போய் தொலையும் என்று தெரியவில்லையே? அது அந்த இடத்திலேயே இரவு முழுவதும் உலாவிக் கொண்டிருந்தால் என்ன செய்வது?

இருட்டில் அத்துவானக் காட்டில் தன்னந்தனியாக தூறலிலும், குளிரிலும் இங்கேயே கிடக்க வேண்டியது தானா?

பயத்திலா? குளிரிலா? என்று தெரியவில்லை.

ஏகத்திற்கும் உடம்பு வெடவெடவென்று நடுங்குகின்றதே? அப்படியே விடியும் வரை இதே இடத்தில் நின்று தாக்கு பிடிக்கவும் முடியாதே?

வேறுவகையான ஆபத்து வரவும் வாய்ப்பிருக்கிறதே? சிறுத்தை போன்ற வேறு ஏதாவது காட்டு மிருகத்தின் கண்ணில் அக்ப்பட்டால் கதை கந்தல் தான்.

அதுகூட பரவாயில்லையே?



குடிகாரர்கள் யாராவது பார்த்து விட்டால் ஐயையோ!

உயிருக்கும் மேலான பெண்மைக்கே ஆபத்து வந்து விடுமே. கடவுளே என்னைக் காப்பாத்து.

அழுகை முட்டிக் கொண்டு வந்தது!

திகிலில் அவளது இதயத் துடிப்பு முரசாய் அதிர்ந்தது. அந்த திகிலிலும் சிறு நிம்மதி ஜனித்தது நிஜம்!

"அம்மாடி" நல்ல காலமாய் யானை விரட்டிக் கொண்டு வரவில்லை.

அதனிடமிருந்து நான் தப்பி விட்டேன். யானையிடமிருந்து தப்பி விட்டாலும் இப்போது வேறு ஆபத்தில் மாட்டிக் கொள்ளக்கூடாதே?

மரக்கிளைகளை படபடவென்று முரட்டுத்தனமாய் யானை முறிக்கும் சத்தம் அவளுக்கு வெகு துல்லியமாய் கேட்டது.

திடீரென்று மிகப்பெரிய ஹாரன் சப்தம் ஒலித்தது. யாரோ வேண்டுமென்றே ஹாரன் ஒலியை இடைவிடாமல் எழுப்பினார்கள். கூடவே நூற்றுக்கணக்கான மனிதர்கள் ஒரு சேர மிகப்பலமாய் தாரை தப்பட்டை ஒலிகளை எழுப்பி கூச்சலிடும் சப்தமும் அந்த அமானுஷ்ய நேரத்தில் காதைப் பிளப்பதாக இருந்தது.

மிதிலா ஒன்றும் புரியாமல் பேந்த பேந்த விழித்தபடியே இருந்தாள்.

பக்கத்திலிருந்த பெரிய மரத்தின் அடிவேர்கள் கூட அந்த இருளில் அரவங்களாய் நெளிவதைப போன்று பிரம்மையை ஏற்படுத்தி பீதியை கிளப்பியது.

சிறிது நேரத்தில் மரக்கிளைகள் பலமாய் முறிபடும் சப்தம் நின்றது.

ஆனால் இடைவிடாமல் ஹாரன் சப்தமும் அந்த ஆட்கள் எழுப்பிய



"இது பழைய டிக்கெட்... செல்லாது...?"

"உங்க ரயில் மட்டும் என்ன புதுசா? பழைய ரயிலுக்கு பழைய டிக்கெட்டே போதும்!"

-எம்.அசோக்ராஜா,
அரவக்குறிச்சிப்பட்டி

தாரை தப்பட்டை மற்றும் கூச்சலிடும் சப்தமும் சிறிது நேரம் நீடிக்கத் தான் செய்தது.

மிதிலா துணிவைத் திரட்டிக் கொண்டு சரிவின் மீது ஏறி விட்டாள். தூரத்தில் யானை வேறொரு மேட்டின் மீது வேகமாய் ஏறிச் செல்வது தெரிந்தது.

பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

சற்று தூரத்தில் ஒரு கார் ஹெட் லைட் வெளிச்சத்தைப் பாய்ச்சிய படி ஹாரன் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தது.

தாரை தப்பட்டை ஒலி எழுப்பிய ஆட்களின் கூச்சலையும் அந்த காரிலிருந்து தான் வருகிறது என்பதைப் புரிந்து கொண்டாள் மிதிலா.

யானையை விரட்டுவதற்காகத் தான் டேப்பில் இப்படி சப்தத்தை பதிவு செய்து வைத்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டவள். கீழே கிடந்த குடையை எடுத்துக் கொண்டு தயங்கி நின்றாள்.

யானை தான் சென்று விட்டதே விடு விடுவென்று நடந்து சென்று விடலாம் தான்.

ஆனால் வழியில் வேறொரு சிறுத்தை போன்ற மிருகம் வந்து விட்டால்?

பயத்தில் உடம்பு வெடவெடவென்று இன்னமும் நடுங்குகின்றதே!

அந்த காரில் இருப்பவரிடம் உதவி கேட்டால் என்ன?

அந்த நபர் நல்லவராய் இருப்பாரென்று என்ன நிச்சயம்?

ஒருவேளை சபல புத்திக்காரனாய் இருந்து விட்டால் ஆபத்து ஆயிற்றே?

எந்தப் புற்றில் எந்த பாம்பு இருக்கிறது என்று யாராலும் சொல்ல முடியாதே?

யாரையும் நம்பி மோசம் போய் விடக்கூடாது.

பேசாமல் துணிந்து விடுவிடுவென்று போய் விட வேண்டியது தான். என்று முடிவு செய்து ஓட்டமும், நடையுமாக விரைந்தாள்.

கார் வேகமாய் நகர்ந்து அவளருகே சரக்கென்று நின்றதும் மிதிலாவுக்கு சப்த நாடியும் ஒடுங்கிப் போனது. கார் கதவு படக்கென்று திறந்தது.

கடவுளே வேறொரு ஆபத்தில் மாட்டிக்கிட்டேனே எப்படியாச்சும் காப்பாத்துங்க!

உலர்ந்த கீழுதட்டை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள்.



ஒரு பெண்ணுக்கு துணிவு தான் துணை! என்ன வந்தாலும் அதை சமாளிக்கும் மனோதிடத்தை வரவழைத்துக் கொள்ள வேண்டியது தான்.

கையிலிருந்த குடையை இறுகப் பிடித்துக் கொண்டாள். கையில் ஆயுதம் இருக்கும்போது நான் ஏன் பயப்பட வேண்டும்? ஆயுதமே இல்லாவிட்டாலும் பெண்கள் தங்கள் கை விரல் நகங்களை ஆயுதங்களாக பயன்படுத்த வேண்டும் என்று மகாத்மா காந்தியடிகளே கூறியிருக்கிறாரே?

கண நேரத்தில் ஓராயிரம் எண்ண அலைகள் எழும்பி இதயத்தில் மோதின.

காரிலிருந்து வெளிப்பட்ட ஆஜானுபாகுவான உருவத்தைக் கண்டதும் திகைத்துப் போய் விட்டாள்.

"ஹலோ மிஸ் மிதிலா! சாரி டாக்டர் மிதிலா நீங்க எங்கே இங்கே?"

"நான் மித்திரன். ரெண்டு வாட்டி சென்னையில உங்க ஆஸ்பத்திரிக்கு நான் வந்திருக்கேன். ஞாபகமிருக்கா?

பரிச்சயமான நபர்தான்... கையிலிருக்கிற ஆயுதத்தை கொஞ்சம் கீழே இறக்கறீங்களா? பார்த்தா... பயமா இருக்கு"

அவளையும் அறியாமல் அவளது வலதுகரம் குடையை ஏந்தியபடி தோள்பட்டை வரை உயர்ந்திருந்தது.

அழகு முகத்தில் பீதியும் கோபமும் அதுவரை தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

அவனைப் பார்த்ததும் அவன் பேச்சைக் கேட்டதும் தான் தன்னிலை உணர்ந்தவளாய்... சட்டென்று கையைத் தழைத்தாள்.

கோபத்திற்கு பதிலாய் திகைப்பு தோன்றியதோடு... அந்த அகன்ற விழிகளில் லேசான அசட்டுக்களையும் மிதந்தது.

"சாரி! யாரோ? என்னவோ?ன்னு நெனச்சு நான் பயத்துல." மிடறு விழுங்கினாள்.

"பரவாயில்ல. கார்லே ஏறுங்க.. என்னை நம்பி தாராளமா என் கார்லே வரலாம். தயக்கம் வேணாம். நாம தாமதிக்கிற ஒவ்வொரு விநாடியும் ஆபத்து தான்... அதே யானை திரும்ப வந்தாலோ அல்லது கூட்டமா வந்தாலோ பிரச்சனை தானே?

அந்தி சாய்ஞ்சுட்டா போதும் வன விலங்குகள் சகஜமா இங்க நடமாட ஆரம்பிச்சுடும்..." என்றபடி முன் பக்கத்து கதவைத் திறந்து

வைத்தான்.

மறுக்கத் தோன்றாமல் சட்டென்று ஏறிக் கொண்டு ''தேங்க் யூ சார்! நீங்க மட்டும் வராம இருந்திருந்தா. நான் என்ன கதி ஆயிருப்பேனோ? நெனச்சாலோ பகிர்னு இருக்கு.''

யானையின் பிளிறல் சத்தம் திடுமென அந்தப் பிரதேசத்தையே கிடு கிடுக்க வைத்தது.

மறுகணமே அந்தப் பிளிறல் சத்தம் எதிரொலித்தது.

அறியாமல் வீலென்று அலறியபடி விழிகளை மூடியபடி காரை கிளப்பிக் கொண்டிருந்த மித்திரனின் தோள் மீது சாய்ந்து விட்டாள்.

## 6

ஒரு காட்டு யானையின் பிளிறல் சப்தத்தைக் கேட்டதும் எங் கெங்கோ இருந்த ஏழெட்டு யானைகள் பீதியுடன் சொல்லி வைத்தாற் போல் பிளிறின.

பிளிறல் சப்தமும் அதன் எதிரொலி சப்தமும் சேர்ந்து அண்டசரா சரத்தையே கிடுகிடுக்க வைத்தாற்போலிருந்தது. மித்திரன் வேகமாய் காரை ஓட்டிக் கொண்டு போனான்.

பயத்தில் அலறி தனது தோள் மீது சாய்ந்தவளிடம் பயப்படாதீங்க மிதிலா! இந்த மாதிரி சம்பவங்கள் எஸ்டேட்டுல தினமும் நடக்கிறது தான். அதனால தான் ஜாக்கிரதையா தாரை தப்பட்டை சப்தத்தையும் ஆட்கள் கூட்டமா கத்தற சப்தத்தையும் 'ரிகார்ட்' பண்ணி வச்சிருக் கேன்.

அதைக்கேட்டா கும்பலா ஆட்கள் வர்றாங்க போலிருக்குன்னு யானைகள் கொஞ்சம் மிரளும். நாம தப்பிச்சுக்கலாம்...'' என்று மலைப் பாதையின் மீதே பார்வையைப் பதித்தபடி பேசினான்.

சுதாரித்து நகர்ந்து அமர்ந்தவள், ''அஞ்சாறு நாளா எங்கேயும் வெளியில போகலை. இன்னிக்கு தான் சுத்திப் பார்க்க ஆசைப்பட்டு வந் தேன். அப்பப்பா...! இன்னிக்கே இப்படியொரு அனுபவமா? வழியில ஒரு பெரியவர் என்னைப் பார்த்து எச்சரிக்கை பண்ணினாரு... அவரு சொன்னது போலவே நடந்துடுச்சே...? என்றபடி அவனை ஏறிட்டாள்.

''சமீப காலமா பட்டப்பகலேயே காட்டு மிருகங்கள் எஸ்டேட் பக்கமா வந்துடுது. தேயிலை செடியோட அடிவேர்கள் இனிப்பா சாப்



பிடறதுக்கு நல்லாயிருக்கும் போலிருக்கு கொத்தா அடி வேரோட செடி களை பிடுங்கி சாப்பிட வந்துடுது. சிறுத்தைகளோட நடமாட்டமும் இங்க ஜாஸ்தி தான்...''

''யானைங்க தேயிலைச் செடிகளை விரும்பி சாப்பிட வரும்னு செ ால்றீங்க? சிறுத்தைகள் ஏன் இந்த பக்கம் வருதாம்...?'' அப்பாவியாய் விழிகள் விரியக் கேட்டாள்.

''எஸ்டேட்டுல வேலை செய்யற தொழிலாளர்களை அடிச்சுக் கொன்னு தனக்கு இரையாக்கிக்கலாம்னு வருது. அதேசமயம் ஆடு, மாடுங்க நிறைய மேயும். அவைகளை அப்பப்போ தங்கள் பசிக்கு இரையாக்கிடுது...''

''யானை அப்போ யாரையும் கொல்லாதுல்ல?''

''ஒத்தை யானை வந்தா... தன்னோட பாதுகாப்புக்காக எதிர்ப்பட்ட வங்களை துவம்சம் பண்றதுண்டு... அடிக்கடி இந்த மாதிரி மிதிபட்டு இறந்து போனவங்களும் உண்டு...''

''சே! கேட்கவே பயங்கரமா இருக்கு. அழகான பிரதேசம். அருமை யான கிளைமேட்... ஆனா கூடவே ஆபத்தும் நிறைஞ்சிருக்கு.

இந்த நேரத்துல உங்களை இங்க சந்திப்பேன்னு நான் கனவுல கூட நெனக்கலை...''

''இங்க... சுத்து வட்டாரங்கள்லே நமக்கு எஸ்டேட்ஸ் நிறைய இருக்கு. வீடு கண்டமனூர் பக்கத்துல மலைக்கிராமத்து எஸ்டேட்லே இருக்கு. அப்பப்போ நேரடியா எல்லா இடங்களுக்கும் போய் கவனிச் சுக்கிடறதுண்டு.

அந்தி சாயறதுக்குள்ளே திரும்பிடணும்னு அம்மாவோட உத்தரவு அதை நான் மீறினதே இல்ல. இன்னிக்கு என்னவோ எப்படியோ கால தாமதம் ஆயிடுச்சு.



''ஏன் வேலைக்காரியை அடிச்சீங்க...?''

''என்னை என் மனைவி அடிச்சதைப் பார்த்துட்டு, கை தட்டி ரசிச்சாளே!''

-எம்.அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி

இந்த 'நெடுங்குண்டத்துல' கூட நமக்கு கெஸ்ட் ஹவுஸ் இருக்கு. இருட்டிட்டா கெஸ்ட் ஹவுஸ்லேயே தங்கிட்டு விடிஞ்சதும் போலாம்னு நெனச்சுட்டே வந்தேன்.

தூரத்துல ஒத்தை யானை கண்ணுல பட்டதும் உஷாராகி ஹாரன் சத்தத்தை எழுப்பினேன்.

தற்செயலா பார்த்தா ஹெட்லைட் வெளிச்சத்துல சரிவுல இருந்து நீங்க ஏறி வந்தீங்க.

கனவுல கூட நீங்க நெனச்சுப் பார்க்காம இருந்திருக்கலாம். ஆனா சத்தியமா நான் நெனச்சுட்டே இருந்தேன் தெரியுமா? அதனால இந்த இடத்துல உங்களைப் பார்த்துட்டு நான் 'ஸ்டன்' ஆகவே இல்ல...

"நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு... எனக்கு புரியவே இல்லையே?"

"முரளியோட அம்மாவை உங்க ஹாஸ்பிடலுக்கு அழைச்சுட்டு வந்தப்போ... எப்போ நீங்க என் கண்ணுல பட்டீங்களோ? அப்பவே நான் என் மனசைப் பறி கொடுத்துட்டேன்.

ரெண்டு நாள் தான் உங்களை நான் பார்த்திருக்கேன். ஆனா ஜென்ம ஜென்மமா பலகாலம் பழகி வந்தாப்போல் ஒரு உணர்வு!

கட்டினால் இந்தப் பெண்ணைத்தான் கட்டணும்னு நான் முடிவே பண்ணிட்டேன். நேர்ல அப்போ எனக்கு சொல்றதுக்கு தைரியம் வரலை.

தினமும் என் கனவிலும் நனவிலும் உங்க உருவம் தான் கண்ணுல தெரியுது. அதனால நிஜமாவே நீங்க சரிவுல ஏறி வந்தப்போ அது வழக்கம்போல பிரமைன்னு நெனச்சேன்.

கிள்ளிப் பார்த்தேன். வலிச்சது. அப்புறம் தான் இது நிஜம்னு நம்பினேன்.

என் காதல் உண்மையானது. உண்மையான காதலுக்கு ஒரு சக்தி இருக்கும். அது காதலை ஜெயிக்க வைக்கும்னு நான் கேள்விப்பட்டிருக்கேன்.

எப்போ நீங்க எதிர்பாராம எங்க ஏரியாவுக்கே வந்தீங்களோ? அப்பவே எனக்கு நம்பிக்கை வந்திருச்சு.

அதான் துணிஞ்சு என் மனசைத் திறந்து சொல்லிட்டேன். என்னடா... கார்லே உட்கார்ந்ததும் கண்டபடி பேசறானே?ன்னு தப்பா நெனக்க வேணாம்.

நான் சொன்னதெல்லாம் சத்தியம்.! நீ எனக்கு கிடைக்கலேன்னா.



அந்த வாழ்க்கையை என்னால நெனச்சுக்கூடப் பார்க்க முடியலை.

இதோ இந்த டைரியைப் பிரிச்சு வாசிச்சுப் பாரேன். கடந்த நவம்பர் மாதம் இருபத்திமூணாம் தேதி முதன்முறையா நான் உன்னைப் பார்த்தேன்.

அதிலிருந்து நேத்து வரைக்கும் கிட்டத்தட்ட மூனு மாசமா என்னோட மன உணர்வுகளைக் கொட்டி எழுதியிருப்பேன். இதை வாசிச்சா என்னோட காதல் ஆத்மார்த்தமானதுன்னு உனக்கு கண்டிப்பா புரியும்.

ஐ லவ் யூ ஸோ மச் மிதிலா! நமக்கு பேர் கூட ரொம்பப் பொருத்தமா அமைஞ்சிருக்கு பாரேன். 'மித்திரன்- மிதிலா நிஜமா சொல்றேன். இது பூர்வ ஜென்ம பந்தம்னு நான் நம்பறேன்.

முதல்லே வாசிச்சுப் பாரேன். அப்புறமா நிதானமா உன்னோட பதிலைச் சொல்லு... சத்தியமா... நீ எனக்கு கிடைக்கலேன்னா... உன் நினைவுகளோடவே வாழ்ந்து முடிச்சுடுவேன். வேறொரு பெண்ணுக்கு இந்த இதயத்துல இடமில்லை..."

இடது கையை நீட்டி அந்த டைரியை எடுத்து நீட்டினான். தயக்கத்துடன் அதை வாங்கி அந்தக் குறிப்பிட்ட தேதியைப் புரட்டினாள்.

மளமளவென்று ஒவ்வொரு பக்கமாகப் புரட்டி பார்வையால் அவனது மன உணர்வுகளை உள் வாங்கினாள்.

நிஜம் தான்... அவன் சொன்னது அத்தனையுமே வாஸ்தவம் தான்...

பார்த்த மாத்திரத்தில் மனதைப் பறிகொடுத்து விட்டு அவளைத் தன் இதய சிம்மாசனத்தில் காதல் தேவதையாக அமர வைத்து ஆராதனை செய்து கொண்டு இருப்பதைப் புரிந்து கொண்டாள்.

வாசித்து முடித்ததும் அவன் தன்னைப் பற்றியும், தனது குடும்பத்தைப் பற்றியும் விவரமாக எடுத்துக் கூறினான்.

மிதிலாவுக்கு பேச்சே வரவில்லை.

ஸ்தம்பித்துப் போய் அமர்ந்திருந்தாள்.

அவனை மறுப்பதற்கோ நிராகரிப்பதற்கோ காரணம் ஏதும் கிடைக்கவில்லையே...?

கடைசியாக அவளை உரிமையுடன் ஒருமையில் விழித்து பேசிய விதம் பிடித்திருந்தது.

நிதானமாக அவன் பேசிய விதம்...

அவனது விழிகளில் ததும்பிய ஆத்மார்த்தமான காதல் அவனது

கண்ணியமான பேச்சு...

சற்று முன்னர் பயந்து அலறி அவனது தோளில் அவள் சாய்ந்த போது கூட. நாகரீகமாய் சுண்டுவிரல் கூட அவள் மீது படாமல் கண்ணியம் காத்த விதம். எல்லாமே அவளது இதயத்தை தொட்டு விட்டன என்று தான் சொல்ல வேண்டும்.

"உங்க வீட்டு முகவரி போன் நம்பர் எல்லாமே வேணும். முறைப்படி உங்க வீட்டுக்கு வந்து அம்மா, அப்பாவை பொண்ணு கேட்கச் சொல்றேன். நீ தங்கியிருக்கிற இடம் எங்கேயிருக்கு மிதிலா?"

அவள் மெல்லிய குரலில் கூறினாள்.

அந்த இடத்தருகே வந்து காரை நிப்பாட்டினான்.

"நாளைக்கு சந்திக்கலாம். குட்நைட்! வரட்டுமா மிதிலா?"

"நாளைக்கு முகாம் மாலை ஐந்து மணிக்கு தான் முடியும்..."

"ஓகே... முகவரி போன் நம்பரை நாளைக்கு வாங்கிக்கிறேன். இந்த நெடுங்குண்டம் எஸ்டேட் கெஸ்ட் ஹவுஸுலேயே இரவுலே தங்கலாம்னு இருந்தேன். முடிவை மாத்திக்கிட்டேன். நான் எங்க வீட்டுக்கே போறேன். ஏன்னா வீட்டுல அம்மாகிட்டே சொல்லி நம்ம கல்யாணத்துக்கு சம்மதம் வாங்கணுமில்லியா? அதானே ரொம்ப முக்கியம்"

"... நீங்க ஒரே பிள்ளை. இதுக்கு அவங்க சம்மதிப்பாங்களா?" மிதிலாவின் குரலில் கவலை தொனித்தது.

"கஷ்டம் தான். ஆனா சம்மதிக்க வச்சுடுவேன். இனி வெளியில தனியா எங்கேயும் கிளம்பிடாதே... நான் கார்லே எல்லா இடத்தையும் உனக்கு சுத்திக் காட்டறேன்...

பை... ஸீ யூ மிதிலா!"

அவனது கார் கண்ணிலிருந்து மறையும் வரை... பார்த்துக் கொண்டே நின்றிருந்தாள்.



"டாக்டர் எனக்கு காதே கேட்க மாட்டேங்குது"

"பரவாயில்லை நான் சொல்ற பீஸை மட்டும் காதிலே சத்தமாக சொல்லிடறேன்"

-ஆர்.கவுரி, தாஞ்சாவூர்



இன்னமும் அந்த டைரி அவளது கையில் தான் இருந்தது. திகைப்பில் மூழ்கிப் போனவளாய்... அதை அவனிடம் திரும்பிக் கொடுக்க மறந்து விட்டிருந்தாள்.

தன் அறைக்குள் சென்று அடைக்கலமானவள்... ஆவலாய் அந்த டைரியைப் புரட்டினாள்.

நிறைய இடங்களில் 'ஸ்ரீராமஜெயம்' எழுதுவதைப் போல... இவளது பெயரை கிறுக்கித் தள்ளியிருந்தான் மித்திரன். அவளது அழகிய இதழ் கடையில் குறு நகை பூக்க... மிருதுவா அவனது கையெழுத்தை வருடினாள்.

சுத்தமாய் இரவு முழுவதும் தூக்கமே எட்டிப்பார்க்கவில்லை. மறுநாள்...!

# 7

மிதிலாவின் இதயத்தில் முழுவதுமாக ஆக்கிரமித்து விட்டிருந்தான் மித்திரன்.

அவனது குரல் சதா அவளது செவிகளில் எதிரொலித்துக் கொண்டிருந்தது.

நிதானமாக யோசித்து உன் பதிலைச் சொல்லு மிதிலா! என்று கூறிய மித்திரன்... அவள் அந்த டைரியை வாசித்து முடித்ததும்... 'அவளுக்கு விருப்பம் இருக்கிறதா?' என்று எதையுமே கேட்கவில்லை.

நேராக 'உங்க வீட்டு முகவரி, போன் நம்பர் குடு. அம்மா, அப்பாவை வீட்டுக்கு வந்து முறைப்படி பொண்ணு கேட்க சொல்கிறேன் என்றாரே...?

"உனக்கு இஷ்டமா?" என்று ஒரு வார்த்தை கூட கேட்காமல் தன் விருப்பம்போல் அடுத்தக்கட்ட நடவடிக்கைகளில் இறங்கி விட்டானே...?

இதென்ன அத்துமீறல்?

சரி... அப்படி அவர் பேசும்போது. எனக்கு ஏன் மறுக்கத் தோன்றவில்லையாம்...?

எல்லாவற்றுக்கும் மேலாக... 'இதுக்கு உங்க வீட்டுல சம்மதிப்பாங்களா?' என்று என்னையும் அறியாமல் கேட்டுத் தொலைத்து விட்டேனே?

எப்படி இருந்தவள்... இப்படி மாறி விட்டேன்?

காதல்... மனதில் புகுந்து விட்டால் இப்படி ஆளை அடியோடு மாற்றிப் போட்டு விடுகிறதே?

நினைத்துப் பார்த்தபோது... அடிக்கடி அவளுக்கு சிரிப்பு தான் வந்தது.

மறுநாள் மாலையில் நான்தே முக்காலுக்கு காரில் முகாமுக்கே வந்து விட்டான் மித்திரன்.

கடைசியாக இருந்த நோயாளிக்கு மருந்து தந்து அனுப்பி விட்டு நிமிர்ந்தாள்.

''வாங்க'' முகம் மலர ஏறிட்டாள்.

நான்கு விழிகளும் நேசமாய் மோதிக் கொண்டன.

''எனக்கும் தடுப்பூசி போட்டு விட்டுடேன். நானும் இங்க தானே இருக்கேன்? இந்த ஏரியாவுல வேகமா நோய் பரவிட்டு இருக்கே? அதான்...''

''ஷ்யூர்''

அவனைப் பார்த்ததும் பரவசத்தில் நாணத்தில்... அவளது கன்னக்கதுப்புகள் குங்குமமாய் சிவந்து போயின.

ஊசி போட்டு முடித்ததும்...

''அவ்ளோ தானே? உன்னோட வேலை முடிஞ்சுடுச்சுல்ல? என் கூட கிளம்பி வா...! இருட்டறதுக்குள்ளே சில இடங்களைக் காட்டறேன்.

மறுப்பேதும் சொல்லாமல் மற்றவர்களிடம் சொல்லி விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறிக் கொண்டாள்.

''மிதிலா! ஏதாச்சும் பேசேன்''

''டைரி என்கிட்ட தான் இருக்கு...! குடுக்க மறந்துட்டேன்''

''என் இதயமே உன்கிட்ட தான் இருக்கு. உயிர் அங்கே... வெறும் உடம்பு தான் இங்க இருக்கு. டைரி இருக்கட்டும் தப்பில்ல...''

அவளுக்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டாள்.

''டைரியை வாசிச்சு முடிச்சதும்... எனக்கு விருப்பமா? இஷ்டமா?ன்னு ஒரு கேள்வி கூட கேட்காம... நீங்க பாட்டுக்கு வீட்டுக்கு பொண்ணு கேட்க வர்றோம்னு சொன்னீங்களே? இது உங்களுக்கே அத்துமீறலா படலையா?''

''அத்துமீறல்னா சொல்றே? சின்ன திருத்தம்... அது உரிமை''

''அந்த உரிமை எப்படி வந்துச்சாம்?''

''டைரியை வாசிச்சு முடிச்சதும்... யதார்த்தத்தை உண்மையான



நிலவரத்தைப் புரிஞ்சுக்கிட்டு... அமைதியா உட்கார்ந்திருந்தே...

இந்த அழகான முகத்துல திகைப்பு, பிரமிப்பு இருந்துச்சே தவிர... கோபம் கடுகத்தனை கூட எட்டிப்பார்க்கலை. எல்லாத்துக்கும் மேலா... நாம இப்படியா உருக உருக இவரால காதலிக்கப்பட்டுட்டு இருக்கோம்?னு ஒரு சின்ன பரவசம்...

சிலாகிப்பு முகத்துல மின்னல் வெட்டற மாதிரி தோன்றியதைப் பார்த்துட்டேன்.

அந்த கணத்துலேயே... நான் உன் மனசுல வந்துட்டேன்னு புரிஞ்சுக்கிட்டேன். அந்த நொடியிலேயே ஒரு உரிமை வந்துடுச்சு போதுமா?

இதைக்கேட்டதும் மிதிலாவின் முகத்தில் அசடு வழிந்தது.

''அப்பப்பா... கில்லாடி தான் நீங்க... வீட்டுல அம்மா சம்மதம் தந்துட்டாங்களா?''

''எங்கே... நேத்து பெரிய பிரளயமே உண்டாயிடுச்சு. கடைசியில ஐயா தான் ஜெயிச்சேன்...''

''எப்படி? எப்படி சம்மதிச்சாங்க?''

''பாலிடால் பாட்டிலை கையோடு கொண்டு போயிருந்தேன். கடைசி அஸ்திரமா அதை உபயோகிச்சேன். நீ சம்மதிக்கலைன்னா நான் உயிரோட இருக்க மாட்டேன்னு... ஒரு போடு போட்டேன். பிளான் ஒர்க் அவுட் ஆயிடுச்சு...

வைராக்கியம், பிடிவாதம் எனக்கு ஜாஸ்தி! சொன்னதை செஞ்சுடுவான்னு பயந்து போய் ஒத்துக்கிட்டாங்க...

என்னோட ஆத்மார்த்தமான காதல் ஜெயிச்சுடுச்சு. காதல் கை கூடிடுச்சு... சந்தோஷத்துல இறக்கை கட்டிப் பறக்கிற மாதிரி இருக்கு.

ஐ லவ் யூ மிதிலா! நான் உங்கிட்ட கேட்கப் போறது ஒண்ணே ஒண்ணு தான். செய்வியா?''

''சொல்லுங்க... கண்டிப்பா செய்றேன்...''

''நம்ம கல்யாணத்துக்கு அப்புறம்... என் அம்மாவை நீ அத்தையா பார்க்கக்கூடாது. பெத்த தாயார் மாதிரி பாசம் காட்டணும். அவங்க மனசு கோணாதபடி நடந்துக்கணும்.

பாவம்... அவங்க ஏதேதோ கற்பனைக்கோட்டை கட்டி வச்சிருந்தாங்க... எனக்காக நம்ம காதலுக்காக இறங்கி வந்து சம்மதிச்சிருக்காங்க...

நேத்து நான் போட்ட போடுல... ரொம்பவே நொறுங்கிப் போயிட்டாங்க... இனிமே... எதுக்காகவும் எப்பவும்... அவங்க மனம் நோகும்ப

காதல்... மனதில் புகுந்து விட்டால் இப்படி ஆளை அடியோடு மாற்றிப் போட்டு விடுகிறதே?

நினைத்துப் பார்த்தபோது... அடிக்கடி அவளுக்கு சிரிப்பு தான் வந்தது.

மறுநாள் மாலையில் நான்தே முக்காலுக்கு காரில் முகாமுக்கே வந்து விட்டான் மித்திரன்.

கடைசியாக இருந்த நோயாளிக்கு மருந்து தந்து அனுப்பி விட்டு நிமிர்ந்தாள்.

''வாங்க'' முகம் மலர ஏறிட்டாள்.

நான்கு விழிகளும் நேசமாய் மோதிக் கொண்டன.

''எனக்கும் தடுப்பூசி போட்டு விட்டுடேன். நானும் இங்க தானே இருக்கேன்? இந்த ஏரியாவுல வேகமா நோய் பரவிட்டு இருக்கே? அதான்...''

''ஷ்யூர்''

அவனைப் பார்த்ததும் பரவசத்தில் நாணத்தில்... அவளது கன்னக்கதுப்புகள் குங்குமமாய் சிவந்து போயின.

ஊசி போட்டு முடித்ததும்...

''அவ்ளோ தானே? உன்னோட வேலை முடிஞ்சுடுச்சுல்ல? என் கூட கிளம்பி வா...! இருட்டறதுக்குள்ளே சில இடங்களைக் காட்டறேன்.

மறுப்பேதும் சொல்லாமல் மற்றவர்களிடம் சொல்லி விடைபெற்றுக் கொண்டு காரில் ஏறிக் கொண்டாள்.

''மிதிலா! ஏதாச்சும் பேசேன்''

''டைரி என்கிட்ட தான் இருக்கு...! குடுக்க மறந்துட்டேன்''

''என் இதயமே உன்கிட்ட தான் இருக்கு. உயிர் அங்கே... வெறும் உடம்பு தான் இங்க இருக்கு. டைரி இருக்கட்டும் தப்பில்ல...''

அவளுக்கு சிரிப்பு வந்தது. அடக்கிக் கொண்டாள்.

''டைரியை வாசிச்சு முடிச்சதும்... எனக்கு விருப்பமா? இஷ்டமா?ன்னு ஒரு கேள்வி கூட கேட்காம... நீங்க பாட்டுக்கு வீட்டுக்கு பொண்ணு கேட்க வர்றோம்னு சொன்னீங்களே? இது உங்களுக்கே அத்துமீறலா படலையா?''

''அத்துமீறல்னா சொல்றே? சின்ன திருத்தம்... அது உரிமை''

''அந்த உரிமை எப்படி வந்துச்சாம்?''

''டைரியை வாசிச்சு முடிச்சதும்... யதார்த்தத்தை உண்மையான



நிலவரத்தைப் புரிஞ்சுக்கிட்டு... அமைதியா உட்கார்ந்திருந்தே...

இந்த அழகான முகத்துல திகைப்பு, பிரமிப்பு இருந்துச்சே தவிர... கோபம் கடுகத்தனை கூட எட்டிப்பார்க்கலை. எல்லாத்துக்கும் மேலா... நாம இப்படியா உருக உருக இவரால காதலிக்கப்பட்டுட்டு இருக்கோம்?னு ஒரு சின்ன பரவசம்...

சிலாகிப்பு முகத்துல மின்னல் வெட்டற மாதிரி தோன்றியதைப் பார்த்துட்டேன்.

அந்த கணத்துலேயே... நான் உன் மனசுல வந்துட்டேன்னு புரிஞ்சுக்கிட்டேன். அந்த நொடியிலேயே ஒரு உரிமை வந்துடுச்சு போதுமா? இதைக்கேட்டதும் மிதிலாவின் முகத்தில் அசடு வழிந்தது.

''அப்பப்பா... கில்லாடி தான் நீங்க... வீட்டுல அம்மா சம்மதம் தந்துட்டாங்களா?''

''எங்கே... நேத்து பெரிய பிரளயமே உண்டாயிடுச்சு. கடைசியில ஐயா தான் ஜெயிச்சேன்...''

''எப்படி? எப்படி சம்மதிச்சாங்க?''

''பாலிடால் பாட்டிலை கையோடு கொண்டு போயிருந்தேன். கடைசி அஸ்திரமா அதை உபயோகிச்சேன். நீ சம்மதிக்கலைன்னா நான் உயிரோட இருக்க மாட்டேன்னு... ஒரு போடு போட்டேன். பிளான் ஒர்க் அவுட் ஆயிடுச்சு...

வைராக்கியம், பிடிவாதம் எனக்கு ஜாஸ்தி! சொன்னதை செஞ்சுடுவான்னு பயந்து போய் ஒத்துக்கிட்டாங்க...

என்னோட ஆத்மார்த்தமான காதல் ஜெயிச்சுடுச்சு. காதல் கை கூடிடுச்சு... சந்தோஷத்துல இறக்கை கட்டிப் பறக்கிற மாதிரி இருக்கு.

ஐ லவ் யூ மிதிலா! நான் உங்கிட்ட கேட்கப் போறது ஒண்ணே ஒண்ணு தான். செய்வியா?''

''சொல்லுங்க... கண்டிப்பா செய்றேன்...''

''நம்ம கல்யாணத்துக்கு அப்புறம்... என் அம்மாவை நீ அத்தையா பார்க்கக்கூடாது. பெத்த தாயார் மாதிரி பாசம் காட்டணும். அவங்க மனசு கோணாதபடி நடந்துக்கணும்.

பாவம்... அவங்க ஏதேதோ கற்பனைக்கோட்டை கட்டி வச்சிருந்தாங்க... எனக்காக நம்ம காதலுக்காக இறங்கி வந்து சம்மதிச்சிருக்காங்க...

நேத்து நான் போட்ட போடுல... ரொம்பவே நொறுங்கிப் போயிட்டாங்க... இனிமே... எதுக்காகவும் எப்பவும்... அவங்க மனம் நோகும்ப

டியா நாம நடந்துக்கக் கூடாது.

அவங்க எமோஷனல் டைப்! கோபம் ஜாஸ்தி வரும்.

ஆனா... என் மேல அளவு கடந்த பாசம் கொண்டவங்க. அவங்க எப்பவாச்சும் உணர்ச்சிவசப்பட்டு கோபத்துல ரெண்டொரு வார்த்தை கடுமையா உன்னைப் பேசினாலும்... அதை நீ பொருட்படுத்தக்கூடாது.

உன்னைப் பெத்த தாயார் கோபமா பேசிட்டாங்கன்னா... நீ எப்படி பொறுமையா அனுசரிச்சுப் போவியோ... அதே மாதிரி அம்மாகிட்டே நடந்துக்கணும்.

நான் உன்கிட்டே இதை மட்டும் எதிர்பார்க்கிறேன். நான் எதிர்பார்க்கிறபடி நீ நடந்துப்பியா மிதிலா?

"அது என் கடமையாச்சே?"

"குட்! அதே சமயத்துல நானும் உங்க வீட்டுல.. உன்னோட அப்பா அம்மாவுக்கு மூத்த மகன் மாதிரி நடந்துப்பேன். நான் சொன்ன வாக்கை எப்பவும் தவற மாட்டேன் மிதிலா"

"ரொம்ப சந்தோஷங்க... அத்தை கோபப்பட்டு என்ன பேசினாலும் சரி... பொருட்படுத்த மாட்டேன். பெத்த மகள் மாதிரி அவங்களை நான் கவனிச்சுப்பேன்..."

உளப்பூர்வமாக வாக்கு கொடுத்து விட்டாள் மிதிலா.

அன்றிலிருந்து இன்று வரை...

திருமணமாகி கிட்டத்தட்ட ஓராண்டு ஆகப் போகிறது.

இதுவரை... மாமியார் எத்தனை சுடு சொற்களால் அவளை நோகடித்தாலும் சரி... எளக்காரமாக அவமானப்படுத்தினாலும் சரி...

பொறுமையாக சகித்துக் கொண்டு போய் விடுவாள் மிதிலா.

இவள் பொறுமையாக இருக்க இருக்க... சொர்ணத்திற்கு பற்றிக் கொண்டு வந்தது.

மிதிலா உயிருக்கும் மேலாக தனது டாக்டர் தொழிலை மதிக்கிறாள் என்பதை நிச்சயதார்த்தத்தின்போதே... பேச்சு வாக்கில் தெரிந்து கொண்டாள் சொர்ணம்.

"சின்னவயசிலேர்ந்தே எங்க பொண்ணுக்கு டாக்டராகணும்னு ஆசை... சிரத்தையா லட்சியமா நெனச்சுப் படிச்சு மெரிட்டிலே தேறினா...

ஆசைப்பட்டபடியே டாக்டராயிட்டா... அவளுக்கு சேவை மனப்பான்மையும் ஜாதி தான்..."



மகளைப் பற்றி மிகவும் பெருமையாக கூறினாள் தாய் தெய்வநாயகி.

"அது மட்டுமில்ல சம்மந்தி! எங்க குடும்ப ஜோஸியரு இவ ஜாதகத்தைப் பார்த்துட்டு... ஒரே வீட்டுல புதனும் சுக்கிரனும் இருக்காங்க... இதைப் போல யாருக்கும் அமையாது.

புதன் கல்விக்கு அதிபதி... இந்த கிரகத்துக்கு உரிய தெய்வம் மகாவிஷ்ணு. சுக்கிரன் செல்வத்துக்கு அதிபதி... இந்த கிரகத்துக்கு உரிய தெய்வம் மகாலட்சுமி.

மகாலட்சுமி கடாட்சம் இருந்தாலே அமோகமா இருப்பாங்க. இங்க... மகாலட்சுமியும் மகாவிஷ்ணுவும் சேர்ந்து இருந்தா எவ்வளவு பெரிய விஷயம்?

உங்க பொண்ணு படிப்பிலேயும் ஓகோன்னு வருவா... பிற்காலத்துல மிகப்பெரிய இடத்துலேர்ந்து... அதாவது நீங்க நெனச்சுக்கூட பார்க்காத பெரிய குபேர குடும்பத்திலேர்ந்து இவளுக்கு வரன் வாய்க்கும்.

இந்த ஜாதகப்படி... கண்டிப்பா பெரிய அரண்மனையில தான் இவ ஓஹோன்னு வாழுவாள்னு அடிச்சு சொன்னாரு சம்மந்தி!

அதே மாதிரியே... எங்க பொண்ணு உங்க வீட்டுக்கு மருமகளா போறா..."

அப்பா பத்மநாபன் பவ்யமாய் சிவநேசனின் அருகே அமர்ந்தபடி சிலாகித்துப் பேசினார்.

"எங்க வீட்டுக்கு வரப்போற மருமகள் ஒரு டாக்டர்னு நெனச்சா... எங்களுக்கும் ரொம்பவே பெருமையாத்தானிருக்கு..." என்று கூறிவிட்டு சிரித்தார் சிவநேசன்.

தற்செயலாய் எதிரில் அமர்ந்திருந்த மனைவி சொர்ணத்தை ஏறிட்டார்.

"ஏன் அந்த பேஷண்ட் ரொம்ப குஷியா இருக்காரு"

"நாளைக்கு டாக்டர் லீவாம். நர்ஸ் மட்( தான் இருப்பாங்களாம்"

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்



மனைவியின் விழிகளில் கோபக்கனல் வீசுவதைப் பார்த்ததும்... பெட்டிப்பாம்பாய் அடங்கி விட்டார்.

அதற்கு மேல் அடக்கியே வாசித்தார்.

டாக்டர் தொழிலை உயிரா மதிக்கிறியா? உன்னோட உயிர் அதிலேயா இருக்கு... வா! என் வீட்டுக்கு வா... அந்த உயிரை எடுத்துடறேன்... கறுவிக் கொண்டாள் சொர்ணம்.

## 8

திருமணமாகி இங்கு வந்த ஒரே மாதத்தில்... தனது சட்டத்தை அமல்படுத்தி விட்டாள் சொர்ணம்.

"தோ பாரு... நேத்து என் புள்ளைகிட்டே கிளினிக் வச்சுகுடுங்க. இந்த மலைக்கிராமத்துல வேலை செய்யிற தொழிலாளர்களுக்கும், மத்தவங்களுக்கும் வைத்தியம் பார்க்கணும்னு ஆசையா இருக்குன்னு... சொன்னியாமே?"

"ஆமா அத்தே! நான் அவர்கிட்டே சொன்னேன் தான். வீட்டுல சமையல் முதல் கொண்டு எல்லா வேலைகளையும் கவனிச்சுட்டு... அப்புறமா தான் கிளினிக் போவேன் அத்தே...!" பயத்துடன் பவ்யமாய் பதிலளித்தாள்.

"அட... கிளினிக் திறந்து... அதுக்கு எந்த நேரத்துல போறதுன்னு முடிவே பண்ணிட்டியாக்கும்?

இந்தக் குடும்பத்துக்குன்னு ஒரு கவுரவம் இருக்கு. மரியாதை இருக்கு. அரண்மனை வீட்டு சின்ன எஜமானியா ஆயிட்டே. அது உன்னோட அதிர்ஷ்டம்னு... உன்னைப் பெத்தவங்க பெருமையா சொல்லிக்கிறாங்க...

ஆனா... உண்மை அது இல்ல... இந்த அழகைக்காட்டி எம் புள்ளைக்கு சொக்கிப் பொடு போட்டு மயக்கி இந்த வீட்டுக்கு தந்திரமா அடியெடுத்து வச்சவ நீ!

பெத்த புள்ளையோட மனசை நோகடிக்க கூடாதுன்று... வேற வழியில்லாம உன்னை இந்த வீட்டுக்கு மருமகளாக்கி இருக்கேன்.

அரண்மனை வீட்டு எஜமானியை ரொம்ப அபூர்வமாகத்தான் வெளியில ஜனங்க பார்க்க முடியும்.

கோவில் குளத்துக்கு முக்கியமான விசேஷங்களுக்கு கவுரவமா அவரு கூடவே போயிட்டு... வீட்டுக்கு திரும்பிடுவேன். தனியா எங்



கேயும் போனதேயில்ல... வந்த மருமகள் நீ! தினமும் கிளம்பி கிளினிக் போனா... நல்லாவா இருக்கும்?

நீ கண்ட கண்ட நோயாளிகளைத் தொட்டு ஊசி போட்டு வைத்தியம் பண்ணிட்டு... இந்த வீட்டுக்குள்ளே நுழைவியா?

அருவருப்பா இருக்கு. நெனச்சாலே அருவருப்பா இருக்கு.

என்னால் இதை அனுமதிக்க முடியாது. நீ திறமையான டாக்டரா இருக்கலாம்.

இப்போ இந்த வீட்டு மருமகள்

இந்த ஸ்தானம் தான் உனக்கு முக்கியம்... இதை நீ மதிக்கிறதா இருந்தா... கிளினிக் பேச்சையே நீ எடுக்கக்கூடாது.

"பெத்தெடுத்த பிள்ளையால சிலருக்கு தோள் வலி... சிலருக்கு இதய வலின்னு பழமொழி இருக்கு. அது என் விஷயத்துல உண்மையாயிடுச்சு.

மித்திரன் எப்போ... உன்னைத்தான் கட்டிக்கணும்னு என்கிட்ட வந்து சொன்னானோ? அப்பத்துலே என் நெஞ்சு வலிச்சுட்டே இருக்கு.

இந்த வலி... தீரவே தீராது. பேசாம நீ ஆஸ்துமா நோயாளியா கிடக்கிற உன் மாமனாரையும் என்னையும் கவனிச்சுட்டு... வீட்டோட அடங்கிக்கிட...

மீறி நடந்தா... வேதனையில நான் ஒரேயடியா செத்துடுவேன். இந்தப் பழியும் பாவமும் உன்னை சும்மா விடாது..."

"ஐயோ அத்தே...! உங்களுக்கு இஷ்டமில்லேன்னா... அந்தக்காரியத்தை நான் செய்யவே மாட்டேன். இனிமே கிளினிக் பேச்சையே எடுக்க மாட்டேன்..."

பணிவாய் பேசி விட்டு அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள் மிதிலா.

இதயம் பாறாங்கல்லாய் கனத்து வலித்தது.

பொங்கிப் பொங்கி அழுகை வந்தது.

கீழ் தட்டை அழுந்தக் கடித்து முட்டிக் கொண்டு வந்த அழுகையை அடக்கியபடி சமையல் செய்தாள்.

மிதிலா அந்த வீட்டிற்கு அடியெடுத்து வைத்ததும்...

அதுவரை பலகாலமாய் சமையல் வேலையை செய்து வந்த கை நிறைய பணத்தைக் கொடுத்து... ஊருக்கு அனுப்பி வைத்து விட்டாள் சொர்ணம்.

மூன்று வேளையும் வித விதமாய் சமைத்துப் போடும் வேலையை மருமகளின் தலையில் கட்டி விட்டாள் இடையிடையே...

"கீரை சூப் வச்சு ஆத்தி எடுத்திட்டு வா...!"

"மாதுளம் பழ ஜூஸ் வேணும். மாமாவுக்கு ஓட்ஸ் கஞ்சி தரணும்.

காலையில தினமும் எழுந்ததும் வாழைத்தண்டு சாறு எனக்கு தந்துடு மாமாவுக்கு பார்லியை வேக வச்சி தண்ணியை மறக்காம குடுத்துடணும்...

இந்த வீட்டுக்கு சதா விருந்தினர்கள் வந்துட்டே இருப்பாங்க. அவங்க முகம் கோணாம தடபுடலா நல்லா கவனிச்சு அனுப்பறது எங்க வழக்கம்.

மருமக வந்ததும் எல்லாமே மாறிப் போச்சுன்னு பேச்சு வந்துடப்படாது. காபி டிபன் சாப்பாடு. எதுவா இருந்தாலும் நிறைவா திருப்தியா பரிமாறி கவனிச்சு வழியனுப்பணும் இது உன் கடமை..."

மாமியார் எந்த உத்தரவிட்டாலும் சரி...

மிதிலாவிடமிருந்து "சரிங்க அத்தே..." என்ற பதில் தான் வரும்.

டாக்டர் தொழிலை மாமியார் மூட்டை கட்ட வைத்து விட்டாள் என்ற துக்கத்தை மிதிலாவால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

இரவில் கணவன் மித்திரனுக்கு தெரியாமல்... மறுபுறம் திரும்பி கண்ணீர் உகுத்துக் கொண்டிருந்தாள்.

மாலையில் வீடு திரும்பியதுமே... மனைவியின் வாடிய முகத்தையும்... அந்த அழகு முகத்தில் படிந்திருந்த சோகத்தையும் பார்த்ததுமே அவன் புரிந்து கொண்டிருந்தான்.

இரவில்... மனைவியின் தோளில் கை வைத்து தன் பக்கம் திருப்பினான்.

"அழறியா மிதிலா? மை காட்! என்ன சின்னக்குழந்தை மாதிரி அழுதுட்டிருக்கே...? கிளினிக் ஆரம்பிக்கக்கூடாதுன்னு அம்மா தடாசட்டம் போட்டுட்டாங்களா? இன்னும் கொஞ்சம் காலம் போகட்டும்... அம்மா வயசானவங்க... காலப்போக்குல அவங்க மனசு கண்டிப்பா மாறும்...

மிதிலா! ஐ லவ் யூ டா... உன்னைப் பார்த்ததுமே நான் மனசைப் பறிகொடுத்தேனே? அதுக்கு உன் அழகு மட்டும் காரணம் இல்ல... உன்னோட டாக்டர் புரொபசன். உன்னோட திறமை எல்லாமும் தான்.

என் மனசார உன்னை... ஒரு டாக்டரோட திறமையை முடக்கிப் போடுவேனா? கொஞ்சம் காலம் பொறு... கிளினிக் என்ன? பெரிய ஹாஸ்பிடலே கட்டி தந்துடறேன்... பிராமிஸ்!"



அவளது புறங்கையில் மென்மையாக முத்தமிட்டான். அவனது விழிகளை ஊடுருவினாள்.

கலங்கிய கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

மித்திரன் இவளை உள்ளங்கையில் வைத்து தான் தாங்கினான்.

இவளது குடும்பத்தாரிடம் பாசமும், மரியாதையும் காட்டி பாந்தமாய் தான் நடந்து கொண்டான்.

உருக உருக இவளிடம் காதல் மழை பொழிபவன் அவன். இவனுக்காக இவனது காதலுக்காக நேசத்துக்காக... எதை வேண்டுமானாலும் தாங்கிக் கொள்ளவும் அவள் தயாராக இருந்தாள்.

"என்னை... என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கை இருக்குல்ல மிதிலா?"

"என்னங்க இப்படி கேட்டுட்டீங்க? உங்களை உங்க வார்த்தையை நான் நம்பலைன்னா... நான் என்னையே நம்பலைன்னு அர்த்தம்..."

மெல்ல முணு முணுத்தவளை வாத்சல்யத்துடன் இதமாய் அணைத்துக் கொண்டான்.

"இது போதும்டா செல்லம்...! ஐ லவ் யூ...! மூணுவேளையும் நீயே சமைச்சுட்டுருக்கே... கஷ்டமா இருக்கா?"

"சேச்சே... அப்படியெல்லாம் இல்லைங்க... பொண்ணா பிறந்துட்டு சமைக்கிறது கஷ்டம்னு சொன்னா... அது மகாகேவலம்னு நான் நினைக்கிறேன்..."

"உன்கிட்ட எனக்கு பிடிச்ச குணமே இது தான்... படித்தவள்னு துளி பந்தா தலைகாட்டாம நடந்துக்கிறே... பேசறே... பாரு! ஐ லைக் இட்! காசி என்னைத்தூக்கி வளர்த்தவரு... சின்ன எஜமானி உன் மேலயும் மரியாதை காட்டாராரு... நீ சதா அடுப்படியிலேயே கிடக்கிறேன்னு... தனியா என் கிட்ட சொன்னாரு... கனகம்மாவை கூடமாட ஒத்தாசைக்கு



"அம்மா என்னோட ஹோம் ஒர்க்யெல்லாம் செஞ்சுட்டீங்களா?"

"செஞ்சுட்டேன்பா"

"இல்லைன்னா நான் தானே டீச்சர்கிட்டே அடி வாங்கனும்"

-ஆர்.கவுரி, தாஞ்சாவூர்

வச்சுக்கோ மிதிலா! வீட்டு வேலைக்கு இன்னொரு ஆளைப் போட்டுக்கலாம். காசி கிட்டே நான் சொல்லியிருக்கேன்...''

''பரவாயில்லைங்க... இதெல்லாம் சின்ன விஷயம்! இதைப்பத்தி ஏன் கவலைப்படறீங்க?''

''இல்ல... காசி சொன்னதை வச்சுப் பார்த்தா... அம்மா சதா உன்னை கரிச்சுக் கொட்டிட்டே இருக்காங்களாமே? விருந்தாளிங்க முன்னாடி வேணும்னே அவமானப்படுத்தற மாதிரி பேசறாங்களாமே?

கேட்டதிலேர்ந்து எனக்கு மனசு சரியில்ல... என்னை நம்பி வந்தவள் நீ... அம்மா கிட்டே இதைப் பத்தி கண்டிச்சு பேசிடலாம்னு இருக்கேன்...

நம்ம வீட்டு வேலையாளு... மனசு கேட்காம என்கிட்டே வந்து சொன்னாருன்னா... அம்மா அந்த அளவுக்கு உன்னை துவேசிக்கிறாங்கன்னு... நான் நல்லா புரிஞ்சுக்கிட்டேன்...''

''வேணாங்க... எதுவும் அவங்களை நீங்க கேட்க வேணாம். கணவனுக்கு நல்லா தலையணை மந்திரம் ஓதி.. அவனுக்கு தூபம் போட்டு அனுப்பிட்டாள்னு... என் மேல அவங்களுக்கு கோபம் இன்னமும் ஜாஸ்தியா தான் ஆகும்...

நீங்க சொன்ன மாதிரி காலப் போக்குல அவங்க என்னைப் புரிஞ்சுப்பாங்க... அது வரைக்கும் நான் காத்திட்டிருப்பேன்.

அவங்க மாறலைன்னாலும் பாதகமில்ல... அத்தை யாரு? உங்களைப் பெத்தவங்க... அவங்களை சத்தியமா நான் அம்மாவா தான் மதிக்கிறேன்...''

''கிரேட்! தேங்க் யூடா... என் மனசுல உன் மேல இருக்கிற காதலும் மதிப்பும் நாளுக்கு நாள் உயர்ந்துட்டே தான் போகுது... உன்னை அடைய நான் குடுத்து வச்சிருக்கணும்.

''நானும் தான்...''

அவனது மார்பில் சாய்ந்து விழிகளை மூடியபடி மெல்ல முனுமுனுத்தாள் மிதிலா. விதி சிரித்தது. இந்த இருவரிடையே மிகப் பெரிய பிளவை ஏற்படுத்த சதிவலை பின்னத் தொடங்கியது.

## 9

அன்று... மிதிலாவுக்கு பிறந்த நாள்...!





சென்ற வாரம் சென்னைக்கு வியாபார விஷயமாகச் சென்றபோது ஆசையாய் கரு நீல வண்ணத்தில் பனாரஸ் பட்டுப் புடவையும் ரூபியும் எமரால்டும் கலந்த அழகிய நெக்லஸும் வாங்கி வந்திருந்தான் மித்திரன்.

கணவன் ஆசை ஆசையாய் பரிசளித்ததை அணிந்து.. அவன் முன் வந்து நின்றாள். அவளது கழுத்தில் நெக்லஸை அணிவித்தான்.

"என்னை ஆசீர்வாதம் பண்ணுங்க" கால்களைத் தொடப்போனவளின் புஜத்தைப் பற்றி நிறுத்தினான்.

"தீர்க்க ஆயுளோட இரு"

"என்னங்க நீங்க? தீர்க்க சுமங்கலியா இருன்னு வாழ்த்துங்க"

"சரி... தீர்க்க சுமங்கலியா தீர்க்காயுசோட இரு! ஆமா... என்ன? வர வர உன் அழகு கூடிட்டே போகுது?"

"சும்மா இருங்க.." சிணுங்கினாள்.

"வெளியில எங்காவது பிக்னிக் போயிட்டு வரலாமா?"

"வேண்டாம். வேணும்னா கோயிலுக்கு போயிட்டு வரலாம்..."

"சரி.. உடனே கிளம்பு"

"அத்தை இன்னமும் எந்திரிக்கலையே? அவங்க எழுந்ததும் சொல்லிட்டுப் போலாமா?"

"அவங்க எந்திரிக்கிறதுக்குள்ளே... நாம போயிட்டு வந்துடலாமே? தேனியில நம்ம நிறுவனத்துல இன்னிக்கு ஆடிட்டிங் இருக்கு... நான் பத்தரைக்கு அங்கே இருந்தாகணும்... சீக்கிரமா வா"

அவசரப்படுத்தியதும்... மறுக்கத்தோன்றாமல் அர்ச்சனைக் கூடையுடன் அவனது காரில் ஏறி விட்டாள்.

நிம்மதியாய் மனம் உருக சேவித்து விட்டு... விரைவிலேயே வீடு திரும்பி விட்டனர்.

இவளை இறக்கி விட்ட கையோடு... அவசரமாய் கிளம்பி விட்டிருந்தான் மித்திரன்.

இவளது வருகைக்காக ஆங்காரமாய் காத்திருந்தாள் சொர்ணம்.

அந்த அழகிய பட்டுப்புடவையும்... கழுத்தில் பளிச்சென்று கண்களைப் பறித்த நெக்லஸும்... அவளது விழிகளை உறுத்தின.

"என்ன விசேஷம்? எங்க போயிட்டு வர்றே?"

"இ... இன்னிக்கு என்னோடபிறந்த நாள்... கோவிலுக்குப் போயிட்டு வந்தோம்..."

"என் கிட்ட ஒரு வார்த்தை கூட சொல்லாம கிளம்பிப் போயிட்டி



யாக்கும்? இது என்ன சத்திரம் சாவடியா?

வீட்டுல பெரியவங்க கிட்ட சொல்லி அனுமதி வாங்கணும்னு உனக்கு ஏன் தோணலை?

எங்க கிட்ட சொல்லி... ஆசீர்வாதம் வாங்காம... கார்லே கோவிலுக்கு போனியாக்கும்? தூத்தேறி!

எந்த நேரத்துல... என் குடும்பத்துக்கு வேட்டு வைக்கணும்னு ஜனிச்சினியோ...? நீ பிறக்கணும். நான் காலத்துக்கும் அழணும்னு விதி இருக்கே...?

சந்தோஷமா சிங்காரிச்சுட்டு நிக்கிறே? உனக்கு இது சந்தோஷமான நாளா இருக்கலாம்... எனக்கு இது துக்க நாள்.

ஆமா...கேடு கெட்ட துக்கிரி பிறந்த துக்க நாள். என்னோட பாவம் உன்னை சும்மா விடாது. என் வயிறெரிய சொல்றேன்.

நீ துக்கிச்சு துக்கிச்சு ஒரு நாள் கதறத் தான் போறே... நான் பார்க்கத் தான் போறேன்... நாசமா போவே..."

இரு கை விரல்களையும் சேர்த்து படபடவென்று நெட்டி முறித்தாள். மிதிலாவுக்கு அழுகை வெடித்துக் கொண்டது.

"அத்தே..! நீங்க எந்திரிச்சதும் உங்க கிட்ட சொல்லிட்டு கோவிலுக்கு போகாலம்னு தான் நான் சொன்னேன். உங்க பிள்ளை தான்..." தழுதழுத்தபடி பேசியவளை இடைமறித்தாள் சொர்ணம்.

"அவனைத் தான் நீ மயக்கி கைப்பொம்மையா ஆக்கி வச்சிருக்கியே...? உன் இஷ்டப்படி ஆட்டி வைக்கிறே... தலை கீழா எம் புள்ளையை ஒரேயடியா மாத்திட்டியே?

வக்கத்த குடும்பத்துலேர்ந்து வந்த பிச்சைக்காரிக்கு பட்டும் நெக்ல

"டேய் உங்க அம்மாவுக்கு சண்டை போடனுமா எங்க அம்மா கிட்டே வந்து கத்துக்கச் சொல்டா"

"ஏண்டா?"

"ஏன்னா, எங்க அம்மா போட்ட சண்டையில ஒரு தடவை கூட எங்க பாட்டி ஜெயிச்சதில்லே"

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்



ஸம் வாங்கிப் போட்டு அழகு பார்க்கிறானே...? எப்படி இருந்த என் கிட்டே ஒரு வார்த்தை கேட்கிறானா? அவனைச் சொல்லி குத்த புள்ளை... இப்படி மாறிப் போயிட்டானே? அவனுக்கு மில்லை... பாவி... சண்டாளி! மாத்திட்டியே...? இன்னும் அவனுக்கு தாபம் போட்டு... மொத்தமா என்கிட்டேயிருந்து பிரிச்சு கூட்டிட்டுப் போகலாம்னு தானே திட்டம் போட்டிருக்கே?''

''ஐயோ... அப்படியெல்லாம் இல்லே அத்தே'' தேம்பினாள் மிதிலா.

முன் பக்கத்து தோட்டத்தில் நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த காசிக்கு... மனம் பதைத்தது.

''பாவம்! சின்ன எஜமானிக்கு இன்னிக்கு பிறந்தநாளு போலிருக்கு. நல்ல நாளன்னிக்கு வாழ்த்தி ஆசீர்வாதம் பண்ணாம... ராட்சசி! இந்தம்மா சபிக்குதே?''

கறிவேப்பிலை பறிக்க வந்த மனைவி கனகம்மாவிடம் குமுறினான்.

''ஈவு இரக்கமில்லாத ஜென்மம்... இந்தப் பொண்ணு.. பாவம் அப்பாவி... அரக்கி கிட்ட வந்து மாட்டிக்கிட்டு சித்ரவதை படுதே?... எட்டூருக்கு கேட்கும்படி திட்டித் தீர்க்கிறாளே?

புருஷன் கூட சேர்ந்து கோவிலுக்குப் போயிட்டு வந்தது ஒரு குத்தமா? அந்த நாள்லே சீவி சிங்காரிச்சு காசு மாலை ஒட்டியாணம்னு நடமாடும் நகைக்கடை மாதிரி அத்தனையையும் அள்ளிப்போட்டுக்கிட்டு எஜமான் கூட... ஜோடியா கோவிலுக்கும் மத்த எடங்களுக்கும் இந்த ராட்சசி சுத்தி வரலையா?

இதுக்கு ஒரு நியாயம்.. மருமகளுக்கு ஒரு நியாயமா? எனக்கு உடம்பு முடியாம கிடந்தப்போ.. மகராசி வீடு தேடி வந்து வைத்தியம் பார்த்துச்சே? ஹூம்...! பாவம்..

இந்தப் புண்ணியவதிக்கு எப்போ விடிவு காலம் பிறக்குமோ தெரியலையே?''

கனகம்மாவும் தன் பங்குக்கு புலம்பினாள்.

''வாய் செத்த பொண்ணு! படிச்ச பொண்ணு மாதிரியா இருக்கு? இதுவே இந்தக் காலத்து மருமகளா வாய்ச்சா... இந்த சொர்ணம்மாவை கோர்ட்டுக்கு இழுத்துட்டு தான் மறுவேலை பார்க்கும்...

மாமியார் கொடுமைன்னுஒரு புகார் குடுத்தா போதும்... காலத்துக்கும் கம்பி எண்ணிட்டு உள்ளேயே கிடக்க வேண்டியது தான்...



பொறுமையா சகிச்சுட்டுப் போகப் போக... இந்தப் பொம்பளை ஏறி மிதிக்கிறாளே...?

இவ தான் நாசமா போவா...'' மெல்லிய குரலில் பேசிய படியே பற்களை நறநறத்தான் காசி.

மவுனமாக கண்ணீர் வகுத்தபடியே வேகமாய் மாடியேறினாள் மிதிலா.

புடவையைக் களைந்து விட்டு கழுத்தில் மித்திரன் ஆசையாய் அணிவித்த நெக்லஸை கழற்றி பீரோவில் வைத்து விட்டு... சாதாரண கைத்தறி புடவையை சுற்றிக் கொண்டாள்.

நடுத்தர குடும்பத்தில் பிறந்தவள் தான்... ஆனாலும் அம்மாவும் அப்பாவும் இவளது பிறந்த நாளன்று வீட்டில் பாயாசம் வைத்து புதுத்துணி எடுத்துக் கொடுத்து... குடும்பத்துடன் சந்தோஷமாய் கோவிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து... தங்களால் இயன்ற எளிய பரிசுப் பொருளை வாங்கி இவளுக்குத் தருவது வழக்கம்...!

இத்தனை வருடங்களில் பிறந்த நாளும் அதுவுமாய்... இவள் யாரிடமும் எந்த வகைச் சொல்லும் வாங்கியதில்லை.

பிறந்த நாளில் மட்டுமல்ல...எந்த நாளிலும் இவளைக் கண்டு யாருமே கடுமையாய் பேசியதே இல்லையே...?

படுக்கையில் தொப்பென்று குப்புற விழுந்து குமுறிக்குமுறி அழுதாள்.

அத்தனை வேலைக்காரர்களும் சொர்ணம் வசை மாரி பொழிந்ததைக் கேட்டு விட்டிருந்தனர்.

அந்த அவமானத்தைத் தான்.. மிதிலாவால் தாங்கவே முடியவில்லை.

இதுவரை மிதிலா தன் கஷ்டத்தை பிறந்த வீட்டிற்கு தெரியப்படுத்தியதே இல்லை.

தெரிந்தால் அம்மாவும் சரி... அப்பாவும் சரி தாங்க மாட்டார்கள். பெரிய குபேர குடும்பத்தில் தங்கள் மகள் வாழ்க்கைப்பட்டு சீரும் சிறப்புமாய் இருப்பதாக...அவர்கள் அக்கம் பக்கத்தினரிடமும உறவினர்களிடமும் சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் நிம்மதியை வீணாய் ஏன் கெடுக்க வேண்டும்?

விஷயம் தெரிந்தால்.. கவலைப்பட்டு கண்ணீர் விடுவார்கள். தூக்கத்தைத் தொலைத்து விட்டு பாசத்தால் துடியாய் துடிப்பார்கள்.

மனம் பதறுவார்கள். இது தேவையா? அவர்களாவது நிம்மதியாக

இருக்கட்டும்.

இங்கு... இந்த வாழ்க்கையில் மாமியார் தானே பிரச்சினை செய்கி றார்.

என்னவர்.. மித்திரன்.. என் மேல் உயிரையே வைத்திருக்கிறாரே? அது போதாதா? அவருக்காக.. எத்தனை கஷ்டங்கள் வந்தாலும்.. நான் பொறுத்துக் கொள்வேன்!

தன்னைத்தானே வழக்கம் போல் சமாதானம் செய்து கொண்டாள்.

வெகு நேரம் சோகத்தில் படுக்கையில் விழுந்து கிடந்தாலும்.. அதற்கும் திட்டு விழுமே...?

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மெல்ல எழுந்த போது... அவளது செல்போன் ஒலித்தது.

அப்பாவின் நம்பர் திரையில் ஒளிர்ந்தது.

ஆர்வமாய் எடுத்து "ஹலோ" என்றாள்.

"அம்மாடி! மிதிலா நல்லாயிருக்கியா? பிறந்த நாள் வாழ்த்துகள் ராஜாத்தி... இதோ.. அம்மா பேசறாடா..."

அப்பா, அம்மா இருவரின் குரல்களைக் கேட்டதும்...புண்பட்ட இதயத்திற்கு மயிலிறகால் மருந்து போட்டாற் போலிருந்தது.

மீண்டும் விழிகளில் மளுக் கென்று கண்ணீர் குளம் கட்டியது. அடுத்து... தங்கை வெண்ணிலா, தம்பி அமுதன் பாசமாய் பேசினார் கள்.

துக்கம் பந்தாய் எழும்பி தொண்டையை அடைத்தது.

சிரமப்பட்டு அழுகையை அடக்கிக் கொண்டு கலகலப்பாய் பேசி விட்டு செல்போனை வைத்தாள்.

மறுபடியும் செல்போன் சிணுங்கியது.

இந்த முறை மித்திரன் அழைத்தான்.

"ஹலோ.. என்னங்க?"

"உன் பிறந்த நாளும் அதுவுமா உன் கூடவே இன்னிக்கு முழுக் கவும் இருக்கணும்னு ஆசை... இந்த ஆடிட்டிங் வேலை வந்து கெடுத்து டுச்சு, மனசுக்கு கஷ்டமா இருக்கு மிதிலா..."

"வேலை தானேங்க முக்கியம்? நான் எங்கே போயிடப் போறேன்? இதுக்குப் போய் ஏன் வருத்தப்படறீங்க...?"

"மனசு கேட்கலை மிதிலா! இதைத்தான் மிஸ் பண்ணிட்டேன். அடுத்த மாசம் நம்ம வெட்டிங்டே வருதுல்ல...?

அதை எப்படியெல்லாம் கொண்டாடணும்னு... இப்பவே பிளான்



பண்ணி வச்சுட்டேன். உனக்கு மிகப் பெரிய பரிசு ஒண்ணு தந்து அசத் தப்போறேன்...

இப்போ என்னோட அன்பான முத்தத்தை வாங்கிக்கோ..."

மறுமுனையில் முகம் சிவக்க... "போதும்...! போனை வச்சுட்டு ஆபீஸ் வேலையை கவனிங்க... பை...!" என்றாள்.

"என்ன நீ? ஆசையா போன்பண்ணினா.. கட் பண்றதிலேயே குறியா இருக்கே? ஏதாச்சும் பேசேன்..."

"எனக்கு பரிசு எல்லாம் வேணாங்க... அன்பு மழை பொழிஞ்சுட்டி ருக்கீங்க.. இதை விட ஒரு பொண்ணுக்கு வேற என்ன வேணும்? நீங்க தான் எனக்கு கிடைச்ச பெரிய பரிசு. அதனால... பரிசு எதுவும் தரவே வேணாம்...."

"ஊகூம்... தந்தே தான் திருவேன்..."

"என் பேச்சைக் கேட்டா... நான் உங்களுக்கு விலை மதிக்க முடியாத பரிசை தருவேன்..."

"எப்போ? இன்னிக்கா?" ஆர்வமாய் கேட்டான்.

"இல்ல.. நம்ம 'வெட்டிங் டே' அன்னிக்கு... இன்னும் மூணு வாரம் தானே இருக்கு...?"

"சரி.. நான் ஒத்துக்கிறேன். இப்போ நான் தந்ததை மரியாதையா திரும்பித் தந்துடு..."

"எ... எதை?"

"மறந்துட்டியா? போன்ல முத்தம் தந்தேன் இல்ல? திருப்பிக் குடு..."

"சீ... என்னது இது? ஆபீஸ்லே தலைக்கு மேல வேலை வெச்சுக் கிட்டு விளையாடறீங்க... வேலையை கவனிங்கப்பா..." சிரித்தபடி



"மன்னர் ஏன் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டும் வயிரை பிடித்துக் கொண்டும் இருக்கிறாம்?"

"அது ஒண்ணுமில்லை காஞ்சிபுரத்திலிருந்து ஒரு படை வருகிறதாம்!"

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்.

போனை அணைத்தாள்.

அடுத்து அவளுக்கு நிற்க நேரமில்லை.

டிபன் வேலையை முடித்ததும்... மதிய சாப்பாட்டிற்கான ஏற்பாடுகளை கவனித்தாள்.

சமையலை முடித்து விட்டு மதியம் இரண்டு மணிக்கு மேல் தான் வழக்கம் போல் அவளுக்கு சிறிது நேரம் ஓய்வு கிடைத்தது.

படுக்கையில் சாய்ந்தவள்... அசந்து போய் மூன்றரை மணி வரை தூங்கி விட்டாள்.

வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து கிழே வந்த போது... அங்கு வீட்டில் அனைவரும் காணவில்லை. அரண்மனை வீடே வெறிச்சோடிப் போயிருந்தது.

தோட்டத்துப் பக்கம் சென்று பார்த்தாள். யாருமே இல்லை. ஆறு மணி வாக்கில் அனைவரும் திரும்பினார்கள்.

"எங்கே போயிட்டீங்க கனகம்மா?"

அடுக்களையில் தேயிலைத் தண்ணீரை கொதிக்க வைத்த படி கேட்டாள்.

இஞ்சியைத் தட்டியபடியே... கனகம்மா தகவலைச் சொல்ல ஆரம்பித்தாள். அதைக் கேட்டதும்....

அதிர்ச்சியில ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டாள் மிதிலா.

## 10

எல்லையம்மன் கோவிலுக்குப் போயிருக்கீங்களா சின்னம்மா? இந்த மலைக் கிராமத்தோட எல்லையில இருக்கே...?"

"உம்... ரெண்டு மூணு வாட்டி போயிருக்கேன். போன மாசம் கூட குடும்பத்தோட போனோமே?"

"அந்தக் கோவிலுக்கு முன்னாடி பெரிய ஆலமரம் இருக்கே? அந்த ஆலமரத்து மேடையில உட்கார்ந்து தான் தீர்ப்பு சொல்வாங்க..."

"ஓ.. பஞ்சாயத்து தீர்ப்பா? இன்னிக்கு அதுக்கு தான் எல்லாருமே கிளம்பிட்டீங்களா?"

"ஆமா சின்னம்மா... கிராம ஜனங்க அத்தன பேரும் திரண்டு வந்துடுவாங்க.."

"இன்னிக்கு என்ன விசாரணை?"

"கோவில் பூசாரி அம்மனோட நகையைத் திருடிட்டாருன்னு ஒரு



வழக்கு... பூசாரி திருடவே இல்லைன்னு அழுது ஆர்ப்பாட்டம் பண்றாரு.. ஒரு சாரார் பூசாரி தான் குற்றவாளின்னு அடிச்சு பேசறாங்க..."

"கடைசியில என்ன தீர்ப்பு சொன்னாங்க?" மணக்க மணக்க இஞ்சி டீயை தயாரித்தபடி கேட்டாள்.

"நாளைக்கு பொழுது சாயற நேரத்துல பெரிய அண்டாவுல அம்மன் கோவில் வாசல்லே கூழ் காய்ச்சுவாங்க... கூழ் கொதிக்கும் போது..

பூசாரி அண்டாவுக்குள்ளே வலதுகையை விடணும். வலது கைக்கு எந்த சேதாரமும் ஆகலைன்னா... பூசாரி நிரபராதின்னு அர்த்தம்...! கை வெந்து போச்சுன்னா...

பூசாரி தான் நகையை திருடியிருக்காருன்னு அர்த்தம்...." "ஐயோ... இது என்ன ரொம்பக் கொடுமையா இருக்கே? இந்தக் காலத்துல இப்படியொரு பஞ்சாயத்தா? இதென்ன மூட நம்பிக்கை? கொதிக்கிற அண்டாவுக்குள்ளே யாரு கையை விட்டாலும்... கை வெந்து தானே போகும்?

வெந்து போயிட்டா திருட்டுப்பட்டம் கட்டறாங்களே? சுத்தக் காட்டு மிராண்டித் தனமா இருக்கே? இந்த மாதிரி விசாரணைகளும் பேசாம..போலீஸ் ஸ்டேஷனை அணுகலாமே... அதை விட்டுட்டு... இப்படி மிருகத்தனமான தீர்ப்பை நம்பிட்டிருக்காங்களே?

இந்தக் காலத்துல இப்படி யெல்லாம் கூட நடக்குதா? விஞ்ஞானத்துலே முன்னேறி எங்கேயோ போயிட்டிருக்கோம். இன்னமும் இந்த மலைக்கிராமம் போன யுகத்துலேர்ந்து மீண்டே வரலை போலிருக்கே..."

அதிர்ச்சியிலிருந்து அவளால் மீள முடியவில்லை.

"மெதுவா பேசுங்க சின்னம்மா...! இந்தப் பஞ்சாயத்துல ஏழெட்டு பெருந்தலைகள் கூடி தான் பேசி முடி வெடுத்து தீர்ப்பு சொல்லுவாங்க.. அதுல உங்க மாமனாரும் ஒருத்தரு...

நீங்க பேசறதைக் கேட்டா... பெரியம்மா இது தான் சாக்குன்னு மறுபடியும் உங்களைக் கண்டபடி ஏச ஆரம்பிச்சுடுவாங்க.

அந்தம்மாவுக்கு சதா உங்களை வஞ்சுக்கிட்டே இருக்கணும் அப்போ தான் ராத்திரிக்கு நிம்மதியா தூக்கம் வரும் போலிருக்கு... ஆண்டாண்டு காலமா இப்படிதான் நடந்துட்டிருக்கு... என்னமோ தெரியலை... பத்து பதினொரு மாசமா.... பஞ்சாயத்துக்கு எந்த விசாரணையும் வராம இருந்துச்சு. இப்போ பாவம்... பூசாரி மாட்டிக்கிட்டாரு.

நீங்க புதுசா வந்த மருமகள்... அதான்... வெவரம் தெரியலை, அதி

லேயும் நீங்க வந்ததிலிருந்து எந்தப் பஞ்சாயத்தும் நடக்கலையா? அதனால இந்த விஷயம் உங்களுக்கு இன்னிவரைக்கும் தெரியாம இருந்திருக்கு...

நாளைக்கு பஞ்சாயத்துக்கு... நீங்களும் வர்றீங்களாமா? பட்டணத்துல பிறந்து வளர்ந்த பொண்ணு நீங்க... இதையெல்லாம் பார்த்திருக்க மாட்டீங்கல்ல?நேர்ல வந்து தான் பாருங்களேன்....''

''ஐயையோ...! நான் வரலைப்பா... இந்த மாதிரி கொடுமை நடக்கிறதை கண்கூடா பார்க்கிற தைரியம் எனக்கில்லை. கேட்கும் போதேதமனசெல்லாம் பதறுதே? அழகான மலைக்கிராமத்துல... இப்படியொரு அக்கிரமம் நடக்குதே...?''

திட்டவட்டமாய் மறுத்து விட்டாள் மிதிலா.

மறுநாள்... பஞ்சாயத்துக்கு சென்றவர்கள்... ஆறரை மணி வாக்கில் தான் வீடு திரும்பினார்கள்.

சுடச்சுட தயாரித்து வைத்த இஞ்சி டீயை மாமனார் மாமியாருக்கு தந்துவிட்டு... அடுக்களைக்குள் வந்தாள்.

''என்னாச்சு கனகம்மா?''

''அந்தக் கூத்தை ஏம்மா கேட்கிறீங்க? இப்படி நடக்கும்னு யாருமே எதிர்பார்க்கலை...''

''பூசாரியோட கை வெந்து போனதால... அவரு தான் குற்றவாளின்னு சொல்லிட்டாங்களா? அநியாயம்... யாரு கையை விட்டாலும் கைவெந்து தானே போகும்?''

''அதனால் தான்... எப்படியும் திருட்டுப் பழி நம்ம மேல விழப் போகுதுன்னு பயந்துக்கிட்டு... பூசாரி அரளி விதையை சாப்பிட்டு உசுரை விட்டுட்டாரும்மா...''

''அடக்கடவுளே...! அநியாயமா ஒரு உயிரைக் கொன்னுட்டாங்களே?''

''கூட்டத்துல என்ன பேசிக்கிட்டாங்க...தெரியுமா? எப்படியும் குட்டு வெளிப்பட்டுரும்னு பயந்து போயி பூசாரி தற்கொலை பண்ணிக்கிட்டாருன்னு... பேசிக்கிறாங்க?''

''ஈவு இரக்கமே இல்லாத ஜனங்க... காட்டுவாசிகள் மாதிரி நடந்துக்கிடறாங்களே?''

பச்சாதாபத்தில் அவளது கண்கள் கலங்கின.

''பாவம்! அந்தப் பூசாரியோட குடும்பம் எப்படி கதறிட்டு இருக்கோ?



ஐயோ... எனக்கு தலை சுத்தற மாதிரி இருக்கு.. படபடன்னு வருது..நான் கொஞ்ச நேரம் என்னோட ரூம்லே இருந்துட்டு வர்றேன்...''

அவளையும் அறியாமல் தாரை தாரையாய் கண்ணீர் வடிந்த வண்ணம் இருந்தது.

அன்றிரவு மித்திரனிடம் இதைப் பற்றி இவள் புலம்பினாள். ''என்னங்க இது? அநியாயமா இருக்கே? எப்போ இதுக்கெல்லாம் முடிவு வரப்போகுது?''

''காலம் காலமா இதுலே ஊறிப் போயிட்டாங்க... இது மலைக்கிராமம்... இங்கே இது சகஜம்...

இதுக்குப் போய்... நீ ஏன் விசனப்படறே? புதுசா இப்பத்தான் கேள்விப்பட்டதால.. உனக்கு பகீர்னு இருக்கு... எங்களுக்கு இது சர்வ சாதாரணம்...

வீணா மனசைப் போட்டு குழப்பிக்காம... இயல்பா இருக்கப் பாரு.. அம்மா பார்த்தாங்கன்னா..அப்புறம் இதுக்கும் சத்தம் போடப் போறாங்க...''பேசிவிட்டு,

மும்முரமாய் லேப்டாப்பில் மூழ்கிவிட்டவனை...திகைத்துப் போய் பார்த்தாள் மிதிலா.

அன்றிரவு முழுவதும் ஒரு பொட்டு கூட தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தாள்.

முகம் அறியாத அந்த பூசாரியையும் அவனது குடும்பத்தையும் நினைத்து... மனம் பாறாங்கல்லாய் கனத்தது.

விதி சிரித்தது... இவளுக்கும் இப்படியொரு நிலைமையை ஏற்ப

''திருட்டுத் தொழிலை விட்டுட்டேன் என்று சொன்னே மறுபடியும் ஏண்டா திருடவந்தே?''

''உங்க கணவர் தாம்மா இந்த ஒரு முறை மட்டும் அவர் வீட்டிலே திருடிக் கொடுக்கச் சொன்னார்?''

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்



டுத்த தருணம் பார்த்தது.

# 11

ஒரு வாரம் கடந்திருக்கும்.

"மலைப் பாதையில கொண்டை ஊசி வளைவுலே ஒரு கார் மரத்துமேல மோதி விபத்து நடந்திடுச்சாம்...

காரை ஓட்டிட்டு வந்த ஆளு... ரத்த வெள்ளத்துல பேச்சு மூச்சு இல்லாம கிடக்கிறான்... எல்லா ஜனங்களும் வேடிக்கை பார்த்துட்டு வந்தாங்க..

நானும் போய் பார்த்தேன். நம்ம பஞ்சாயத்துல இருக்கிற பெருந்தலைகள் எல்லாருமா... போலீசுக்கு போன் போட்டு வரவழைச்சாங்க...

மலைக்கிராமமே அல்லோல கல்லோலப் பட்டுட்டு இருக்கு...

முண்டாசை அவிழ்த்தபடி பவ்யமாய் மிதிலாவிடம் கூறினான் காசி.

"நீங்களும் பார்த்திங்கல்ல? விபத்துக்குள்ளான மனிதர் யாரு?"

"பார்த்தேன் சின்னம்மா! ஆனா... அந்த ஆளை யாருக்குமே தெரியலை... ஆளு புதுசா வந்திருக்கான் போலிருக்கு...வயசு கிட்டத்தட்ட முப்பத்தஞ்சுக்குள்ளே தான் இருக்கும்.

பார்க்க பெரிய எடத்தைச் சேர்ந்தவன் மாதிரி ஜம்முனு இருக்கான். குடிச்சுப்போட்டு காரையோட்டி விபத்து நடந்துச்சோ?... என்னவோ.. யார் கண்டா?

ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டு அந்த ஆளை ஏத்திக்கிட்டு போனாங்க... போலீஸ் அந்தக் காரையும் காருக்குள்ளே கிடந்த அந்த ஆளோட சூட்கேஸையும் ஆராய்ஞ்சுட்டு இருந்தாங்க...

ஊர்ப்பெரியவங்க சேர்ந்து போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போயிருக்காங்க..."

"பாவம்..."

"பெரிய ஐயா கிட்டே வெவ்வரம் சொல்லணும். அவருக்கு ஆஸ்துமா தொந்தரவால... வெளியில அவ்வளவா நடமாட்டம் இல்லாட்டியும்... இந்த மாதிரி சமாச்சாரங்களை காதுல போட்டு வைக்கணும். இல்லேன்னா...திட்டுவாரு..."

தோளில் கிடந்த துண்டை இடுப்பில் கட்டிய படி உள்ளே விரைந்



தான் காசி.

யோசனையுடன் மெல்ல நடந்து... கொடியில துவைத்த துணிகளை உலரப் போட்டாள்.

ஒரு மணி நேரம் நகர்ந்திருக்கும்.

பெரிய கேட்டில் ஹாரன் சப்தம் பலமாய் கேட்டது.

மலைக்கிராமத்துப் பெரியவர்கள் ஏழெட்டு பேர் ஜீப்பில் வந்திருந்தார்கள்.

மாடியில் பால்கனியிலிருந்து சப்தம் கேட்டதும் எட்டிப் பார்த்தாள் மிதிலா.

தோட்டத்தைக் கடந்து அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்தார்கள்.

மிதிலாவைப் பார்த்ததும்... அவர்கள் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றனர்.

"என்னது இது? என்னைப் பார்த்ததும்... சொல்லி வச்சாப்பல சட்டுன்னு எல்லாரும் நின்னுட்டாங்க...

அவர்களுக்குள் பார்த்துக்கொண்டும்... சீரியஸாய் ஏதோ முணுமுணுக்கிறாங்க?

ஒருத்தர் முகமும் சரியில்லையே?

இந்த மலைக்கிராமத்தில் ஏதோ அசம்பாவிதம் நடந்தாற்போல் முகத்தை வச்சுட்டிருக்காங்க...?

மறுபடியும் அண்ணாந்து பார்த்துட்டு தயங்கிப் போய் உள்ளே நடக்கிறாங்க...

இவர்கள் பார்க்கிற பார்வையைப் பார்த்தால் வயிற்றில் புளியைக் கரைக்கிறதே?

கீழே இறங்கிப் போவதற்கு சற்றே தயங்கினாள்.

வந்தவர்களை வரவேற்று அவர்கள் பருகுவதற்கு ஏதாவது தர வேண்டியது என் கடமையாயிற்றே?

எனக்கு ஏதோவொரு கெடுதல் நேரப் போகிறது என்று உள்மனம் கூறுகிறதே...?

இனம் புரியாத பயம் இதயத்தை ஆக்கிரமிக்கிறதே?

நெஞ்சம் படபடக்க கீழே இறங்கிச் சென்று... அவர்களுக்கு டீ தயாரித்து ட்ரேயில் வைத்துக் கொண்டு.. ஹாலுக்கு வந்தாள்.

"சுத்தி வளைக்காம விஷயத்துக்கு வாங்க"

சொர்ணம் அதட்டலாய் அவர்களைப் பார்த்துப் பேசினாள்.

''சொல்லுங்க.. இன்னிக்கு ஒரு கார் விபத்துக்குள்ளாயிடுச்சு. காரை ஓட்டிட்டு வந்தவன் பலமா அடிபட்டு ஆஸ்பத்திரியில பேச்சு மூச்சு இல்லாம கிடக்கான்.

ஏன்... அவனைப் பத்தியே பேசிட்டிருக்கீங்க? அவன் யாரு? எந்த ஊருங்கிற விவரம் தெரியலைங்கிறீங்க..

சரி... என்னத்துக்கு எல்லாருமா கூடி வந்து அவனையே பேசிட்டிருக்கீங்க...?''

ஊசிப் பட்டாசாய் பொரிந்தாள் சொர்ணம்.

''நாங்க போலீஸ் டேஷன் லேர்ந்து தான் வர்றோம்.

அந்த ஆளோட உடைமைகளை ஆராய்ஞ்சு பார்த்தாங்க. கடைசியா போலீஸ்.. அவனோட செல் ஃபோனை எடுத்துப் பார்த்தாங்க.

அதுலே... புளூடூத்லே உங்க மருமகளோட படம் இருக்கு. அதாவது உங்க மருமகளும் அந்த ஆளும் நெருக்கமா நின்னு எடுத்துக்கிட்ட போட்டோக்கள்...

போலீஸ் கிட்டே எதையும் மறைக்கக் கூடாதுல்லியா?

இந்தப் பொண்ணை எங்களுக்கு தெரியும்னு சொல்லிட்டோம். உங்க குடும்ப விவரமெல்லாம் கேட்டாங்க...

அப்புறம்... நாங்களே உங்க மித்திரனுக்கு போன் போட்டு விஷயத்தைச் சொல்லி... ஸ்டேஷனுக்கு வரச் சொன்னோம்.

செல்போன்ல இருக்கிற நம்பரைப் பார்த்து... அந்த ஆளோட வீட்டுக்கும் போலீஸ் தகவல் அனுப்பிடுச்சு. அந்த நபர் சென்னை வாசி போலிருக்கு. அவனோட குடும்பத்தார் நாளைக்கு வந்து சேர்ந்துடுவாங்களாம்.

செல்போன்ல இந்த பொண்ணோட போட்டோ இருக்கிறதால்... போலீஸ் இங்க வரும் வந்து உங்க மருமக கிட்டே சொல்லிட்டுப் போலாம்னு வந்தோம்...''

''என்னது? என் மருமக கூட அந்த ஆளு நெருக்கமா நின்னு போட்டோ எடுத்திருக்கானா? அடக்கடவுளே...!இதென்ன கூத்து.. என்னங்க.. நம்ம குடும்பத்தை சந்தி சிரிக்க வச்சுட்டாளேங்க...?

ஐயோ...! இத்தனை பேரும் அந்த அசிங்கத்தைப் பார்த்துட்டு வந்து... வீட்டுப் படியேறி வந்து சொல்லும்படியா செஞ்சுட்டாளே?

போச்சு...நம்ம குடும்பத்து மானம் காத்துல பறந்துடுச்சு. குடும்ப கவுரவத்தை குழி தோண்டிப் புதைச்சுட்டாளே?''

இது தான் சாக்கு என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்தாள் சொர்ணம்.

டிரேயுடன் நடந்து வந்த மிதிலாவுக்கு... அதிர்ச்சியில் உடல் வெடவெடவென்றுநடுங்கியது.

மாமியார் அத்தனை பேருக்கு முன்னிலையில் இவளை கேவலமாகப் பேசியதும்... கையிலிருந்து டிரே நழுவியது.

டமார்...

வந்தவர்கள் அவளை ஒரு மாதிரியாக ஏறிட்டுப் பார்த்து விட்டு... சொல்லிவைத்தாற்போல் வெளியேறி விட்டனர்.

''வரட்டும்.. எம் புள்ளை வரட்டும்.. இப்படியொரு மானம் கெட்டவளை எங்கிருந்து புடிச்சுட்டு வந்தே?ன்னு கேள்வி கேட்கிறேன்...

கண்டவன் கூட கூத்தடிச்சுட்டு... எம் மகனைப் பார்த்ததும்... மயக்கி கைக்குள்ளே போட்டுக்கிட்டு இந்த வீட்டுக்கு வந்துட்டியா?

அவனை விட.. எம் புள்ளை பணக்காரன்னு தெரிஞ்சதும்... அவனை விட்டுட்டு இவளைப் பிடிச்சுட்டியா?''

நாக்கில் நரம்பில்லாமல் வரம்பு மீறி பழி போட்டு பேசினாள் சொர்ணம்.

நடப்பதெல்லாம் கனவா? நனவா? என்ற ஐயப்பாடு மிதிலாவுக்கு முளைத்தது.

கடவுளே.. இது கனவாக இருக்கக்கூடாதா?

மனம் நப்பாசைபட்டது.

மாமியார் தூற்றியதைக் கேட்டதும் அழுகை வெடித்தது.

''அ...அத்தே! அந்த ஆளு யாருன்னே எனக்கு தெரியாது. நான் இது வரைக்கும் யார் கூடவும் சத்தியமா போட்டோ எடுத்துக்கிட்டதில்ல....''

தேம்பினாள்.



''மந்திரியாரே மன்னருக்கு மதிய உணவு தயாராயிடுச்சா?''

''மன்னர் போருக்கு பயந்து எதிரிநாட்டு மன்னருடன் விருந்து சாப்பிட போகிறாராம்''

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்

"சீ... அத்தேன்னு... உன் வாயால என்னைக் கூப்பிடாதே! அதுக்கு உனக்கு அருகதை கிடையாது.

நீ சொல்றதை நான் நம்பத் தயாரா இல்ல..

மெடிக்கல் க்காலேஜில படிச்சவ நீ.. பெரிய பிரபலமான ஆஸ்பத்திரியில டாக்டரா வேலை வேற பார்த்திருக்கே...

அந்த சமயத்துல.. இந்த மாதிரி எத்தனை ஆம்பிளைகளை மடக்கிப் போட்டியோ...? யார் கண்டது?

என்னமோ... நாலு சுவத்துக்குள்ளேயே வளர்ந்து வெளி உலகத்தையே பார்த்தறியாத அப்பாவி மாதிரி பேசறே...

தலை நிமிர்ந்து கவுரவமா வாழ்ந்த எங்களை... இப்படி தலை குனிய வச்சுட்டியேடி... விளங்குவியா?"

இதற்கு மேல் இவளிடம் பேசிப் பயனில்லை என்ற ரீதியில்.. அழுது கொண்டே ஓட்டமும் நடையுமாக மாடியேறி தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

கதறி அழுதவள்... கணவனின் வருகைக்காக காத்திருந்தாள்.

"அவர் வரட்டும். கண்டிப்பா அவர் இதை நம்ப மாட்டாரு. எனக்கு ஆதரவா என் பக்கம் நிற்பாரு...

எனக்கு ஆறுதல் சொல்வாரு... இந்தப் பிரச்சினையை அவரால் தான் தீர்க்க முடியும்..." என்று தனக்கு தானே சமாதானம் செய்து கொண்டிருந்தாள் மிதிலா. ஆனா ல்... அவளது நம்பிக்கையை தவிடு பொடியாக்கி விட்டான் மித்திரன்.

## 12

மித்திரனின் கார் சப்தம் கேட்டதுமே... மாடியிலிருந்து இறங்கி வந்துவிட்டாள் மிதிலா.

அழுதழுது முகம் சிவந்து கண்கள் வீங்கிப்போயிருந்தன. அவன் காரை நிறுத்திவிட்டு.. நிதானமாய் உள்ளே வந்தான்.

சொர்ணம் அவனைக்கண்டதும்.. கோவென்றி கதறி அழுதாள்.

"மித்திரா! சந்தி சிரிக்க வச்சுட்டாளே.. உன் மானத்தை இப்படியா கப்பலேத்தி விடுவாள்?"

அவனது கையைப் பிடித்தபடி அழுதாள்.

தாடை இறுக மவுனமாய் நின்றான் மித்திரன். மிதிலா நேர் எதிரே



சென்று நின்றபடி... அவனது விழிகளை ஊடுருவினாள்.

பார்வையை வேறுபுறம் வெறுப்பாய் திருப்பிக்கொண்டான்.

"அந்த போட்டோக்களை நான் நேர்ல பார்த்துட்டுதான் வர்றேன். போடோக்கள் மட்டுமில்ல..

சின்ன வீடியோ கிளிப்பிங்கும் இருந்துச்சு..

எல்லாத்தையும் பார்த்து முடிச்சதும்.. இந்த பூமி அப்படியே ரெண்டா பிளந்து என்னை விழுங்கிடக்கூடாதா?ன்னு தோணுச்சு.

அவமானத்துல கதறணும்னு போல இருந்தது..." மித்திரன் இப்படி பேசியனும்.. மிதிலாவுக்கு தூக்கி வாரிப்போட்டது..

'இவரா இப்படி பேசுகிறார்? கடைசியில் இவரும் சேர்ந்து என் நெஞ்சில் நெருப்பை அள்ளிக்கொட்டி விட்டாரே?

அவளுக்கு பகீர் என்றிருந்தது.

"எ.. என்னங்க நீங்களா... இப்படி சொல்றீங்க? கடைசியில நீங்களும் இவங்க கூட சேர்ந்துகிட்டு.. என்னை.. என் மனசைக் கொன்னுட்டீங்களே? சொல்லுங்க... பிளீஸ்.. சும்மா விளையாட்டுக்கு தானே இப்படியெல்லாம் பேசறீங்க? விளையாடாதீங்க ப்ளீஸ்.. ஆயிரம் பேர் கூட என்னை லட்சம் வார்த்தைகள் ஏசி பழிபோட்டுப் பேசட்டும்.

நான் கலங்க மாட்டேன். நீங்க சொல்லப்போற ஒரு வார்த்தைக்காகத்தான் நான் உயிரைப்பிடிச்சுட்டு நிக்கறேன்.. சொல்லுங்க...

நீங்க அதை நம்புறீங்களா? அவனது கையை மெல்லப்பிடித்துக் கொண்டு கேட்டாள்.

சட்டென்று கையை உருவிக்கொண்டான்.

அவளது முகத்தைப் பார்க்கவே பிடிக்காதவன் மாதிரி.. எங்கோ அவனது பார்வை நிலைத்திருந்தது.

"எல்லாத்தையும் நான் கண்ணார பார்த்து தொலைச்சுட்டு தானே வர்றேன்? நம்பாம.. நம்பிதானே ஆகணும்?

ஆதாரம் ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்கே?"

துடிக்கத்துடிக்க ஆணி வேரோடு பிடுங்கி தூக்கி தூர எறிந்து விட்டாற் போல..இருந்தது.

அதிர்ச்சியில் ஆடிப்போய் விட்டாள்.

"ஆதாரம் ஸ்ட்ராங்கா இருக்கா? ஓஹோ... அப்படீன்னா அந்த போட்டோக்களை உண்மைன்னு நம்பறீங்க.. நான்.. என்னை என் வார்த்தையில.. உங்களுக்கு நம்பிக்கை இல்லாம போயிடுச்சுல்ல..?

"கண்ணுல விளக்கெண்ணெய் விடாத குறையா.. அவ்ளோ நேரமா

உத்துப்பார்த்து.. அது நீதான்னு ஊர்ஜிதம் ஆனதுக்கு அப்புறம்?.. நம்பாம எப்படி இருக்க முடியும்''

முகத்தில் அடித்தாற் போல் பேசினான்.

அவனுக்கு அவளிடம் பேசுவதற்கே.. எட்டிக்காயாக கசந்து தொலைத்தது.

தப்பித்தவறி கூட...அவளது அழுது வீங்கிப்போன கண்களை... அந்த சோகம் படர்ந்த முகத்தை ஏறிட்டுப் பார்க்கவே இல்லை.

''ஊர்ஜிதம்கிறீங்க.. ஆதாரம்கிறீங்க.. இதைப்போல ஆயிரம் ஆதாரங்களைக் கொண்டு வந்து.. உங்கள் மேல யாராச்சும் பழி போட்டு பேசினாங்கன்னா.. நான் என்ன பண்ணியிருப்பேன் தெரியுமா?

சத்தியமா அதை நான் நம்பவே மாட்டேன்.. இன்னும் சொல்லப் போனா... அதைக் காதுலேயே வாங்க மாட்டேன் ஏன்னா.. நான் அந்தளவுக்கு உங்க மேல உயிரையே வச்சிருக்கேன்.

இவ்வளவு தானா? நீங்க என் மேல வச்சிருந்த காதலுக்கு அந்த நேசத்துக்கு.. அர்த்தமே இல்லாம போச்சே?

என் மேல நீங்க வச்சிருக்கிற நம்பிக்கை இவ்ளோ தானா...?

உருக உருக காதலிச்சீங்க.. நீ கிடைக்கலேன்னா அப்படியொரு வாழ்க்கையை என்னல நெனச்சுக்கூட பார்க்க முடியலைன்னு சொன்னீங்களே?

இது பூர்வ ஜென்ம பந்தம்னு.. நெக்குருக நெஞ்சுருக பேசினீங்களே?

உங்க மிதிலாவைப் பார்த்தா.. இப்படியெல்லாம் பேசுறீங்க..''

இப்படி ஆயிரம் கேள்விகளை அவனிடம் சுடச்சுட கேட்க வேண்டும் போலிருந்தது நா கேட்கத் துடித்தது சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

மவுனமாக கண்ணீர் உகுத்தபடி மெல்ல நடந்தாள். மாடியேறப் போனவள். மறுகணமே பின் வாங்கினாள் அடுக்களைக்கு அருகில் உள்ள உக்கிரான அறைக்குள் புகுந்தாள்.

சுவரோரமாய் சாய்ந்து அப்படியே சரிந்து அமர்ந்தாள். தேற்றுவாரின்றி தேம்பித்தேம்பி அழுதாள்.

பழைய தட்டுமுட்டு சாமான்கள் போட்டு வைக்கப்பட்ட ஒடுக்கமான அறை அது...!

ஒரு ஜன்னல் கூட இல்லாமல்.. கும்மிருட்டாக இருந்தது.

பகல் நேரத்தில் கூட லைட்டை போட்டால் தான் வெளிச்சம்



இருக்கும்.

சுண்டெலிகளும் பெருச்சாளிகளும் துள்ளிக்குதித்து தாண்டவமாடும் அறை அது.

குப்பென்று புழுக்கமான வாடை வீசியது.

தணலின் அருகில் நின்றிருந்தாள் போல். வியர்த்துக்கொட்டியது.

''நான் தப்பு பண்ணிட்டேன்மா.. உன் மனசை நோகடிச்சு இவ தான் வேணும்னு அடம்புடிச்சு.. இவளுக்கு தாலிகட்டின பாவத்துக்கு தான்... கடவுள் எனக்கு இப்படியொரு அவமானத்தைத் தேடி தந்திருக்காரு...''

மித்திரன் தழுதழுத்தபடி அம்மா சொர்ணத்திடம் ஸ்பஷ்டமாய் பேசியது.. மிதிலாவின் செவிகளில் விழத்தான் செய்தது.

நேற்று வரை செவிகளை பட்டு போல் தடவிய மென்மையான குரல்தான்.

இன்று... அவன் சொன்னதைக் கேட்டதும்... செவிகளில் ஈட்டி பாய்ந்து விட்டாற் போல் புழுவாய் துடிதுடித்துப் போனாள்.

உள்ளத்தில் உலை கொதித்தது.

அவமானத்தில்.. இப்படியே இந்த நிமிடமே உயிரை விட்டு விடலாம் போல் தோன்றியது.

இதெல்லாம் போதாதென்று அரண்மனை வீட்டிற்குள் போலீஸ் ஜீப் புகுந்தது.

'ஐயையோ! போலீஸ் ஜீப் வருதேடா? நம்ம வம்சத்துல யாருமே போலீஸ் ஸ்டேஷன் வாசப்படியை மிதிச்சதில்ல...

நீ பாவம் படியேறி... அவமானப்பட்டு வந்து நிக்கிறே...எங்கிருந்துடா பிடிச்சே? இப்படியொரு பீடையை இப்போ பாரு... நம்ம வீட்டுக்கே போலீஸ் வருதே..? கடவுளே... விளக்கேத்த வந்தவ... நம்ம வம்



''தலைவருக்கு நெஞ்சுவலி அடிக்கடி வருதே ஏன்?''

''அலுவலர்கள் யாராவது சோதனைக்கு வந்தால் நெஞ்சுவலி தானாக வருகிறது''

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்

சத்தோட கவுரவத்தையே விளங்காம பண்ணிட்டாளேடா...''

வேண்டுமென்றே பெருங்குரலெடுத்து அழுதாள் சொர்ணம்

''தவமாய் தவமிருந்து பெத்தேனே? இந்த ஒண்டிப்புள்ளையோட வாழ்க்கை இப்படியா அவலமாகிப்போகணும்? காசு பணம் போனாக் கூட பாதகமில்லை.. கவுரவமும் மானமும் போச்சுன்னா.. திரும்ப வருமா?

கடவுளே! எம்புள்ளை இப்படி கதி கலங்கி அழுது நான் பார்த்ததே இல்லையே?

இந்தக் கன்றாவியை பார்க்கணும்னு... என் தலையில எழுதி இருக்கே? மித்திரா மித்திரா...! ஐயோ...உனக்கா இந்த கதி வரணும்?

இனி... எப்படிடா வெளியில நீ தலைகாட்ட முடியும்?

ஐயோ... போலீஸ்காரங்க என்னத்துக்கு இங்க வர்றாங்க?''

புலம்பினாள் சொர்ணம்.

மருமகள் மிதிலா வசமாக எக்குத்தப்பாக மாட்டிக்கொண்டு விட்டாள்.

இனி இதையே சாக்காக வைத்துக்கொண்டு மித்திரனிடமிருந்து அவளைப்பிரித்து.. இந்த வீட்டிலிருந்து ஒழித்துக்கட்ட வேண்டும்.

இவளுக்கு ஒரு முடிவு கட்டியே தீர வேண்டும்.

இந்த நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விடவே கூடாது.

இதற்குத்தானே.. ஒரு வருட காலமாக காத்துக்கொண்டிருந்தேன்.

விடுவேனா? இந்த மிதிலாவின் கதையை முடிக்காமல் விடமாட்டேன்...''

உள்ளூர கறுவிக்கொண்டாள் சொர்ணம்.

ஜீப் வரும் சப்தம் கேட்டதும்.. மிதிலாவின் மேனி, பயத்தில் வெட வெடன்னு நடுங்கியது.

திகிலில் நா உலர்ந்தது.

## 13

''உங்க மிசஸ், மிதிலாவை நான் கொஞ்சம் என்கொயரி பண்ணணும். அவங்களை வரச்சொல்றீங்களா?''

இன்ஸ்பெக்டர் கேட்டதும் வேறு வழியின்றி தயக்கமாக தலையசைத்தான் மித்திரன்.



மனதில் உற்சாகம் ஊற்றெடுக்க.. நாலே எட்டில் உக்கிராண அறைக்குச்சென்றாள்.

அறைவாசலில் நின்றபடி இளக்காரமாய் மருமகளை நோட்டமிட்டாள்.

''ஏய்.. வெளியில வாடி! இன்ஸ்பெக்டரு வந்திருக்காரு. வந்து..அவங்க கேட்கிறதுக்கு ஒழுங்கா உண்மையைச் சொல்லு..''

தள்ளாடியதுபடியே மெல்ல அந்த அறையை விட்டு வெளியில் வந்தாள்.

கரும்பச்சை வண்ணக்காட்டன் புடவை அணிந்து சோகமே உருவாக வந்தவளை..இன்ஸ்பெக்டர் ஏற இறங்கப்பார்த்தாள்.

''இதே பாருங்க மேடம்! நான் நெனச்சிருந்தா..உங்களை ஸ்டேஷனுக்கு வரவழைச்சு விசாரிச்சிருக்க முடியும்.

அஞ்சாறு வருஷத்துக்கு முன்னால.. ஒரு கூரை கொட்டகையில தான் ஸ்டேஷன் செயல்பட்டு வந்தது. நல்ல கான்கிரீட் கட்டிடம் கட்டி தந்து உதவி செஞ்சாரு பெரிய ஐயா!

அந்த நன்றிக்கடனுக்காக தான்..அவங்க வீட்டு மருமகளை.. இந்த மாதிரி பெர்ஸனலா கவுரவமா விசாரிக்க முடிவு செஞ்சு இங்க வந்தேன்..

இதோ இந்த செல்போனைப் பாருங்க..நிதானமா போட்டோக்களையும் வீடியோ கிளிப்பிங்ஸையும் பார்த்துட்டு அப்புறமா..நான் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்லுங்க..''

அவர்நீட்டிய செல்போன் விரல்கள் நடுங்க வாங்கிப்பார்த்தாள் மிதிலா

'யாரிவன்? இவனை நான் முன்னே பின்னே பார்த்ததே இல்லையே?

இவன் அருகில் நிற்கும் பெண் யார்? நானா? அடக்கடவுளே..!

கண்ணாடியில் என் உருவத்தைப் பார்த்தது போல... அச்சு அசலாக இருக்கிறதே?

இவளது தோள் மீது கையைப் போட்டபடி போஸ் கொடுத்திருக்கிறானே?

பட்டனை அழுத்திப்பார்த்தாள்.

விதவிதமான மாடர்ன் உடை அணிந்து பார்க்கில், பீச்சில், படகில், வள்ளுவர் கோட்டத்தில்.. என்று பல இடங்களில் இந்தப்பெண் இவனுடன் நெருக்கமாய் நிற்கிறாளே?

இது எப்படி சாத்தியம்?

ஒருவேளை.. பெரிய குபேரக்குடும்பத்தில் நான் வாழ்க்கைப்பட்டது பிடிக்காமல்.. பொறாமையால் யாரோ செய்த சூழ்ச்சியாக இருக்குமோ?

நவீன டெக்னாலஜியை பயன்படுத்தி முகத்தை மாற்றி அமைத்து.. என்னைப்போலவே.. போட்டோ எடுத்து விட்டார்களோ?

யார் சதி செய்திருப்பார்கள்?

எனக்கும்.என் குடும்பத்தாருக்கும் யாரிடமும் பகையே கிடையாதே?

யாரிடமும் விரோதம் வளர்த்துக்கொண்டதே இல்லையே? இல்லை.. இது சதிச்செயலாக இருக்க முடியாது.

எங்கோ ஓரிடத்தில் ஏதோவொரு குழப்பம் நடந்திருக்கிறது. அது என்னவென்று புரியவில்லையே?

இதென்ன? அடிக்கடி இந்தப்பெண் பரதநாட்டிய உடையில் இருக்கிறாளே?

சேலையை விட்டால் சுடிதார். இதைத்தவிர நான் இதுவரை எந்த மாடர்ன் உடையையும் பரதநாட்டிய உடையையும் அணிந்ததே இல்லையே..

விழிகளில் நீர்த்திரையிட்டு பார்வையை மங்கலாக்கியது.

கண்ணைக்கசக்கி விட்டுக்கொண்டு திகிலுடன் மீண்டும் பார்த்தாள்.

"இதோ இந்த பட்டனை அழுத்தி வீடியோ கிளப்பிங்ஸையும் பாருங்க.."

இன்ஸ்பெக்டர் சுட்டிக்காட்டிய பட்டனை அழுத்தினாள்.

"தித்தித்தை.. தித்தித்தை..

தீம் தரிகிட தித்தித்தை..

குழலூதி மனமெல்லாம் கொள்ளை கொண்ட பின்பும் குறையேதும் எனக்கேதடி.. சகியே...!

பாடல் கணீரென்று பின்னணியில் ஒலித்ததும்.. பாதங்களில் சலங்கை சப்திக்க வெகு நளினமாய் ஒய்யாரமாய்.. விதவிதமான பாவங்களை அழகிய முகத்தில் வெளிப்படுத்தியபடி சுழன்று சுழன்று.. கை தேர்ந்த நாட்டியத்தாரகை போன்று அற்புதமாய் நடனமிட்டாள் அந்தப் பெண்.

நடனம் முடிந்ததும்.. பலத்த கரவொலி எழும்புகிறது.



ஜல் ஜல் என்று சலங்கை கொஞ்ச.. அவள் தனியறைக்குள் நுழைகிறாள்.

கூடவே இவனும் நுழைந்து..ஆளுயுர ரோஜா மாலையை அணிவிக்கிறான்.

அவள் மோகனமாய் 'க்ளுக் என்று சிரிக்கிறாள்.

உரிமையாய் அவன் தோளில் சாய்கிறாள்.

"உன் கலைக்கு நான் அடிமை" என்கிறான் அவன்.

"அப்படியா? உங்களுக்கு நான் அடிமை" என்று பதில் கூறி இவள் முறுவலிக்கிறாள்.அவள் பேசியது கொஞ்சலாக இருந்தது.

இருவருமே சேர்ந்தாற்போல் கலகலவென்று சிரிக்கிறார்கள்.

அவளது குரலில் மட்டும்தான் வித்தியாசம்...!

மற்றபடி உருவத்தில் அப்படியே.. மிதிலாவைப் போன்றே இருந்தாள்.

இன்னும் சொல்லப்போனால்.. மிதிலாவுக்கே தன் கண்களை நம்ப முடியவில்லை.

மிதிலாவின் இதயம் மலைபோல் கனத்துவலித்தது.

என்ன பதில் சொல்லப்போகிறேன் நான்?

சொன்னாலும் நம்ப மாட்டார்களே?

எப்படி...? எப்படி...? நிரூபிக்கப் போகிறேன்..

திகிலுடன் நாக்கு உலர.. பரிதாபமாய் இன்ஸ்பெக்டரை ஏறிட்டாள்.

"சொல்லுங்க மேடம்? இவருக்கும் உங்களுக்கும் என்ன தொடர்பு? இவரைப்பத்தின விவரங்களைச் சொல்லுங்க...

இவரை எத்தனை வருஷங்களா உங்களுக்குத் தெரியும்?"

"இறந்து போன என் கணவர் நேற்று இரவு கனவில் வந்தார்டி"

"என்ன சொன்னார்?"

"உன் கையால சமைத்து சாப்பிட வேண்டும் என்றார்டி!!"

-ஆர்.கவுரி,தஞ்சாவூர்



"சார்! சத்தியமா சொல்றேன்.. இந்த ஆளை இப்ப..இந்த செல் போன்ல தான் முதல் முதலா பார்க்கிறேன்..

இந்த போட்டோவுல இருக்கிற பெண் நானில்லை.

எனக்கு பரதநாட்டியமே தெரியாது..உருவ ஒற்றுமை அதிசயமா அப்படியே அச்சு அசலா என்னைப்போலவே இருக்கு.. ஒத்துக்கிறேன்.. அது நானில்லை.

அப்புறம் எப்படி அந்த ஆளைப்பத்தின விவரங்களைச் சொல்ல முடியும்?

உங்களைக் கையெழுத்து கும்பிடறேன்.. இதுல ஏதோ குழப்பம் இருக்கு..தயவு செய்து அதைக்கண்டு பிடிங்க..

நீங்க எத்தனை முறை கேட்டாலும் இது தான் என்பதில்.." விசும்பிய படி பேசினாள் மிதிலா..

"எப்படி அழிச்சாட்டியமா பேசறா பாருடா.. அச்சு அசலா இவ போட்டோக்கள் இருக்கு.. நானில்லைன்னு சாதிக்கிறாளே? இவ பெரிய கைகாரி தான்டா.. இன்ஸ்பெக்டர் இவளை இழுத்துட்டுபோயி..கேக்கிற விதத்துல கேளுங்க" தூண்டிவிட்டாள் சொர்ணம்.

"இந்த ஆளோட மனைவியும் குடும்பத்தாரும் நாளைக்கு வந்துடுவாங்க.. இவங்க மனைவிகிட்டே விசாரிச்சதிலே... ஒரு விஷயத்தை சொன்னாங்க.

இந்த ஆள் சென்னையில மிகப்பெரிய தொழிலதிபராம். தன்னோட கணவருக்கு வேறொரு பெண்ணோட ரொம்ப காலமாக தொடர்பு இருக்கும்னும்.. அந்தப்பொண்ணு மேல இவரு ரொம்ப ஆசையா இருந்தாருன்னும்.. அந்த மனைவி சொன்னாங்க.. இந்த ஆளோட கதிரவனாம்..

குடும்பத்துல பெரியவங்க கண்டிச்சும்.. அந்த ஆளு அந்தப் பொண்ணு கூட தொடர்ந்து தொடர்பு வச்சிருந்தாருன்னும் சொல்றாங்க.. அவ ஒரு டான்ஸராம்.. பேரு காவ்யாவாம்.

சமுதாயத்துக்கு பயப்படாம பப்ளிக்கா.. பல வருடங்களுக்கு ஜோடியா சுத்தி வந்தாங்களாம்.. ரொம்ப அழுது வருத்தப் பட்டு இதை அவங்க சொன்னாங்க...

நாளைக்கு அவங்க வந்ததும் ஒரு சந்திப்புக்கு ஏற்பாடு பண்றேன்.. உங்களைப் பார்த்துட்டு என்ன சொல்றாங்கன்னு பார்ப்போம்..

டேக் யுவர் ஒன்டைம்! உண்மையை யாராலும் மறைச்சு வைக்க முடியாது.. அது ஒரு நாளைக்கு வெடிச்சுக்கிட்டு வெளியில வரும்னு ஆணித்தரமா நம்பக்கூடியவன் நான்..!"



இன்ஸ்பெக்டர் சாந்தமாக நாசூக்காகப் பேசிவிட்டு வெளியேறி விட்டார்.

"டேய்.. இவ பெரிய மாய்மாலக்காரிடா.. காவ்யாங்கிற பேரை மிதிலான்னு மாத்தி வச்சுக்கிட்டா..அக்கம் பக்கத்துல நல்லா விசாரிக்காம.. ஒரு சாக்கடையில போய் விழுந்துட்டே...

இவளுக்கு இவளோட குடும்பமே உடந்தையா இருந்திருக்கும் போலிருக்கும்.. சே! கேடு கெட்ட குடும்பம்!

அந்த கதிரவனுக்கு ஏற்கனவே மனைவி குடும்பம் இருக்குன்னு தெரிஞ்சும்... பகிரங்கமா அவனுக்கு வப்பாட்டியா இருந்திருக்காளே?

கூச்ச நாச்சமில்லாம எல்லா இடங்களிலும் ஜோடியா சுத்தியிருக்கா... ஒரு விஷயத்தை நல்லா புரிஞ்சுக்கோ மித்திரா இவ பணங்காய்ச்சி மரமா தேடி வசியம் பண்றவள்.

இந்த கதிரவன் பெரிய தொழிலதிபர்.. அதான் வளைச்சுப் போட்டு சுத்திட்டு.. கடைசியா உனக்கும் வலை விரிச்சுட்டா..

இன்னும் எத்தனை பேரு இவ பட்டியல்லே இருக்கானுங்களோ தெரியலையே? ஊரறிஞ்சு சோரம் போனவளை உத்தமின்னு நம்பி.. தாலிகட்டி வீட்டுக்கு கூட்டிட்டு வந்தியே? இப்படி அநியாயத்துக்கு ஏமாந்து உன் வாழ்க்கையும் பாழாகி.. நம்ம பரம்பரைக்கே காலத்துக்டும் பெரிய களங்கம் ஏற்பட்டு போச்சே?

டாக்டரா இருந்தாலும் குடும்ப குத்துவிளக்குன்னு சொன்னியே... இவ குத்து விளக்கு இல்ல.. சிவப்பு விளக்கு சிங்காரி.. த்தூ..!

இவ டாக்டருக்கு படிச்சதே இதுக்குதான் போலிருக்கு.. மேல் தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த ஆம்பிளைகளைத் தொட்டுப்பேசி.. அப்படியே வளைச்சுப் போட்டுக்குவாள்ன்னு நெனக்கிறேன்.

என் மிதிலா அமைதியானவள்.. அதிகமா பேசமாட்டா பொறுமையானவள்ன்னு மெச்சுக்கிட்டியே...

இவ பண்ணின காரியத்தைப் பார்த்தியா? ஊமை ஊரைக்கெடுக்கும்னு சொல்வாங்க.

இந்த மாதிரி அமைதியா இருக்கிறவங்க தான்.. பெரிசா வேட்டு வைப்பாங்க... வச்சுட்டாளே..?

பெரிய அணுகுண்டைத் தூக்கி தலையில போட்டுட்டாளே?

சோபாவில் அமர்ந்தபடி நீலிக்கண்ணீர் வடித்தாள் சொர்ணம்.

அவமானத்தால் தேகமே தீப்பற்றிக்கொண்டாற்போல் திகுதிகு

வென்று எரிந்தது.

தேவி அழுதபடி மீண்டும் உக்கிரான அறைக்குள் அடைக்கலமா னாள் மிதிலா.

# 14

தேனியிலிருந்த மிகப்பெரிய ஆஸ்பத்திரியில் அந்த கதிரவன் அனுமதிக்கப்பட்டிருந்தான்.

ஐ.ஸி.யூ.வுக்கு வெளியே தவிப்புடன் அவனது குடும்பத்தினர் ஓட்டமும் நடையுமாக வந்து நின்றனர்.

அவனது மனைவி வசுமதி அழுதவாறே..சோர்ந்துபோய் தொப் பென்று அங்கிருந்த நீளமான பெஞ்சில் அமர்ந்தாள்.

இன்ஸ்பெக்டரின் உத்தரவின் பேரில்.. அந்த ஆஸ்பத்திரிக்கு வரவ ழைக்கப்பட்டாள் மிதிலா.

''மிஸ்டர் மித்திரன்! அந்தக்குடும்பம் வந்தாச்சு..உங்க மனைவியைக் கூட்டிக்கிட்டு ஹாஸ்பிடலுக்கு வந்துடறீங்களா? அந்த வளாகத்துல வச்சு விசாரிச்சுடலாம்...''

இன்ஸ்பெக்டரிடமிருந்து.. போன் வந்ததும்.. மறுபேச்சு பேசாமல் சம்மதித்தான் மித்திரன்.

''அம்மா! அவளை ஆஸ்பத்திரிக்கு கூட்டிட்டு வரச்சொன்னாரு.. அந்த இன்ஸ்பெக்டர்!''

அவனது குரலில் ஏகத்திற்கும் வெறுப்பு மண்டிக் கிடந்தது

மனைவியைப் பற்றி பேசுவதற்கே.. அவனுக்கு அப்படி மனம் கசந் துபோய் விட்டிருந்தது.

குரலில் வெறுப்பு மட்டுமல்ல.. அருவருப்பும் உதாசீனமும் கோபமும் இழையோடியதை..மிதிலா.. அந்த இருட்டறையில் இருந்த வண்ணம் செவி மடுக்கத்தான் செய்தாள்.

நேற்று மதியத்திலிருந்து பச்சைத்தண்ணீர் பல்லில் படவில்லை.

அந்தப்புழுக்கமான அறையில்.. அவள் இருக்கிறாளா? செத்தாளா? என்று அவன் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

எதிர்பாராமல் நடந்த இந்த சம்பவத்தால்..

ஒரே நாளில் அவன் அடியோடு மாறிப்போய் விட்டிருந்தான்.

அவன் மனதிலிருந்த காதல்,நேசம், பாசம், பிரேமை அன்பு, எல்



லாமே நொடிப்பொழுதில் மங்கிமறைந்து வற்றி வறண்டு போய் விட் டிருந்தன.

''ஆ...மா.. இந்த பத்தினி தெய்வத்தை பல்லக்கலே ஏத்தி பவனி தான் வரணும்.. நாம பியட்லே முன்னாடி அங்க போயிடலாம்.

இவ நம்ம பழைய கார்லே ஏறி வரட்டும்.. என்ன சொல்றே? நம்ம கூட சமதையா உட்கார்ந்து வர்றதுக்கு இவளுக்கு என்ன அருகதை இருக்கு..?''

''அதுதான் சரி! எனக்கு தலைக்கு மேல வேலை குவிஞ்சு கிடக்கு.. அதையெல்லாம் விட்டுட்டு இவ பின்னாடி அலைய வேண்டியிருக்கு.. கருமம்''

அவர்கள் முதலில் பியட்டில் ஏறிச்சென்று விட்டார்கள்.

''ஏய்... கேட்டுக்கிட்டு தானே இருக்கே? வந்து சேரு'' அதட்டி விட்டு உற்சாகமாய் பியட்டில் அமர்ந்து கொண்டாள் சொர்ணம்.

கால்கள் துணியாய் துவண்டன.

பசி வயிற்றைக் கிள்ளியது.

அவளுக்கு நாட்கள் தள்ளிப் போயிருந்தன.

இன்னமும் மூன்றே வாரத்தில் வெட்டிங் டே வந்துவிடுமே...?

அப்போது இந்த சந்தோஷமான சமாச்சாரத்தை மித்திரனிடம் செ ால்லலாம்.

அதுவரை இந்த இனிப்பான சேதி.. சஸ்பென்சாக இருக்கட்டும்.. என்று தீர்மானித்திருந்தாள்.

தலை சுற்றியது போலிருந்தது.

வாயெல்லாம் கசந்து தொலைத்தது.

காலியான வயிறு தான்.. இருப்பினும் குமட்டிக்கொண்டு வந்தது.

பசி மயக்கம், கவலை, அதிர்ச்சி, சோர்வு.. எல்லாமாகச் சேர்ந்த



''மகளிர் காவல் நிலையத்தில் என்னப்பா ஒரே கூட்டம்?''

''ஓடுகாலி பெண்ணுக்கு திருமணம் செய்து வைத்து அட்சதையும் போட்டு வாழ்த்துராங்களாம்''

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்

தால்.. நடை தள்ளாடியது.

தடுமாறி விழப்போனவளை.. பதற்றமாய் வந்து தாங்கிக்கொண்டாள் கனகம்மா..

"உங்களுக்கா இந்த கதி வரணும்? எல்லாத்தையும் நானும் அவரும் கேட்டுக்கிட்டு தான் இருந்தோம்.

இந்தப்பால் வடியற முகத்தைப் பார்த்தாலே தெரியுதே? நீங்க கறந்த பால் மாதிரிம்மா.. சுத்தமானவள்மா.. பாவி... நாக்குல நரம்பில்லாம என்ன பேச்சு பேசறா? அப்படியே உலக்கையால ரெண்டு போடு போட்டா என்று மசு கொதிச்சுப்போச்சு.

இந்த ராட்சசிக்கு நெஞ்சுல எப்பவும் ஈரம் கிடையாது.

சின்ன எஜமானுக்கு புத்தி எங்கே போச்சு?

படிச்சவரு.. பண்பானவரு.. இந்தக்காலத்து இளைஞரு... எல்லாத்துக்கும் மேல உங்களை விரும்பி கல்யாணம் பண்ணிட்டு வந்தவராச்சே?

கிட்டத்தட்ட ஒரு வருஷமா அந்நியோன்யமா உங்க கூட வாழ்ந்தவருக்கு.. உங்களைப் பத்தி தெரியாம போச்சே?

இப்படி அறிவு கெட்டுப்போயி.. உங்க மனசை நோகடிச்சுட்டாரே?"

"அ... அதைத்தான் கனகம்மா.. என்னால தாங்கிக்க முடியலை.."

அரற்றினாள் மிதிலா.

"அம்மா...! ஒரு டம்ளர் பாலாச்சும் சாப்பிடுங்கம்மா. வயித்துல ஒரு ஜீவன் ஜனிச்சிருக்கே? பட்டினி போடக்கூடாதும்மா.."

திகைத்துப்போய் ஏறிட்டாள் மிதிலா.

"என்னம்மா அப்படி பார்க்கிறீங்க? நான் கிராமத்து மனுஷி.. அனுபவப்பட்டவ.. வெளிறிப் போன உங்க முகத்தைப் பார்த்தாலே தெரியுதே..? நீங்க உண்டாயிருக்கீங்கன்னு நான் சொல்றது சரி தானா தாயீ?"

"சரிதான் கனகம்மா.. இதை நான் இன்னமும் அவர் கிட்ட கூட சொல்லலை.. தலைவிதி..! எனக்கு குடிக்க தண்ணி மட்டும் குடுங்க.."

அப்படியே என் கூட ஹாஸ்பிடல் வரைக்கும் வர்றீங்களா? ப்ளீஸ்"

"உத்தரவு போடுங்க தாயீ"

பழைய காரில் ஏறிச்சென்ற போது.. "சுபாவிங்க.. ஏதோ தீண்டத்தகாதவ மாதிரியில்ல. இப்படி ஒதுக்கி வச்சுட்டுப் போறாங்க.. கடவுள்



இவங்களுக்கு கூலி குடுப்பாரு தாயீ.."

புலம்பியபடி வந்தாள் கனகம்மா ஆஸ்பத்திரி வளாகத்தில்..

இவளைக்கண்டதுமே... கதிரவனின் மனைவி வசுமதி ரௌத்திரமானாள்.

இன்ஸ்பெக்டரிடம், " சார்! இவ தான் அந்த காவ்யா சந்தேகமே இல்ல.. பிஸினஸ் விஷயமா மதுரை வரைக்கும் போயிட்டு வர்றேன்னு.. சொல்லிட்டுப் போனாரு..

இந்த மலைக்கிராமத்துக்கு எஸ்டேட்டுக்கு ஏன் வந்தாரு?ன்னு குழம்பிட்டிருந்தேன்.

இந்தப்பாவியைபார்க்கிறதுக்காக.. இங்க வந்திருக்கார் போலிருக்கு சார்!

என் வாழ்க்கையை பங்கு போட்டா.. உள்ளூர புழுங்கி அழுதுட்டு நாட்களை ஓட்டிட்டு இருந்தேன்.. கடைசியில் இவ.. அவரோட உயிருக்கே உலை வச்சுடுவா.. போலிருக்கே

இவளாலதானே இங்க வந்து விபத்துல மாட்டி... இப்போ சாகக்கிடக்கிறாரு...

கோமாவுல விழுந்து கிடக்கிறாரே...? பாவி! எல்லாம் இவளாலதான் சார்...!" என்று ஆங்காரமாய் கத்தினாள் விக்கித்துப் போனாள் மிதிலா.

விதி ஏன் என் விஷயத்தில் இப்படி சதி செய்கிறது? சந்தர்ப்பம் சூழ்நிலை எல்லாம் எனக்கு பாதகமாக இருக்கிறதே?

எப்படி என்னை நிரூபிக்கப்போகிறேன்?

எந்தப்பக்கம் போனாலும் அந்த வழி அடைபட்டுப் போகிறதே?

முட்டிக்கொண்டு வந்த அழுகையை.. கீழுதட்டை அழுந்தக்கடித்தது அடக்கினாள்.

"அம்மா! என்னை நல்லாப் பாருங்கம்மா.. நான் காவ்யா இல்லம்மா... உங்க கணவரை நான் முன்னே பின்னே பார்த்ததே இல்லம்மா..நல்லா கூர்ந்து பார்த்து நிதானமா சொல்லுங்கம்மா..

நீங்க சொல்லப்போற பதில்லே தான்... என் வாழ்க்கையே அடங்கி இருக்கு.

நீங்களும் ஒரு பொண்ணு தானே? எல்லாருமே என்னைப் பழிபோட்டு பேசறாங்க. நான் ஒரு பாவமும் அறியாதவள் நான் கறைபடாதவ.. இது சத்தியம்!

உருவ ஒற்றுமையைப் பார்த்துட்டு நீங்க தவறான முடிவுக்கு வந்

துட்டீங்க...''

கரங்களைக் கூப்பியபடி கண்ணீர் உகுத்தபடி தழுதழுத்த குரலில் கெஞ்சினாள் மிதிலா.

ஸ்தம்பித்துப்போய் அந்த வசுமதி.. இவளையே ஏற இறங்கப் பார்த்தாள்.

நூலிழை நம்பிக்கையைப் பிடித்தபடி ஊசலாடிக் கொண்டிருந்தாள் மிதிலா.

## 15

''இல்ல நான் நம்ப மாட்டேன். நீதான் நாட்டியக் காரியாச்சே? அப்பப்பா.. என்னவொரு முகபாவம்னு டான்ஸை நேர்ல பார்த்தவங்க சொல்றதை.. நான் கேட்டிருக்கேன்.

கை தேர்ந்த நடிப்புக்காரி நீ! உன்னை உன் வார்த்தையை நான் நம்பவே மாட்டேன்.

என்ன திமிரு இருக்கணும் உனக்கு? அவரை விட்டுட்டு வேறொருத்தனை வசமா பிடிச்சு.. இங்க செட்டிலாகிட்டே என் வாழ்க்கையைக் கெடுத்தவ நீ உன்னோட வாழ்க்கை நிலைக்க நான் உதவணுமா?

உன்னோட நீலிக்கண்ணீரெல்லாம் ... என் மனசைக் கரைக்காது. தெரிஞ்சுக்கோ! என்று கூறி விட்டு இன்ஸ்பெக்டரிடம் திரும்பினாள்.

''இவ தான் அவ இது நூறு சதவீதம் நிஜம் இன்ஸ்பெக்டர்'' என்றாள்.

நொறுங்கிப்போனாள் மிதிலா.

எதிரிலிருந்த வேப்பமரத்தடியில் நின்று இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சொர்ணத்திற்குள் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கியது.

''பார்த்தியாடா! இவளும் சத்தியம் பண்ணாத குறையா உறுதியா சொல்லிட்டா''

''ஆமாம்மா''

ஈனஸ்வரத்தில் முனகினான் மித்திரன்.

இன்ஸ்பெக்டர் இவர்களை நோக்கி வந்தார்.

''அப்புறம் என்ன இன்ஸ்பெக்டர்? நீங்க ஆக வேண்டியதைப் பாருங்க.. நாங்க நியாயம் அநியாயத்துக்கு கட்டுப்பட்டு நடந்துக்கிடறவங்க.



தப்பு செஞ்சது யாராக இருந்தாலும் சரி... அவங்க சட்டப்படி தண்டனையை அனுபவிக்கணும். அதுதான் முறை'' என்றாள் சொர்ணம்.

இந்த நொடிப்பொழுதிலேயே.. மிதிலாவை ஒழித்துக் கட்டி விட வேண்டும் என்ற ஆவேசம்.. அவளுக்குள் அலையடித்தது.

இன்ஸ்பெக்டர் முறுவலித்தார்.

''அந்த கதிரேசன் கோமாவிலே கிடந்தாருல்ல? அவரோட நிலைமையிலே கொஞ்சம் இம்ப்ரூவ்மெண்ட் இருக்கிறதா டாக்டர் சொல்றாரு..

தேறி வரட்டும். சுய நினைவு வந்ததும் அவர் கிட்டேயே விசாரணை பண்ணுவோம்.

எனக்கு ஏதோ.. உருவ ஒற்றுமையில குரல்ல கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறதா மனசுக்கு தோணுது.

உங்க மனைவியை நீங்க அழைச்சுட்டு போகலாம்''

''எங்க மேல வச்சிருக்கிற மரியாதையின் காரணமா.. கான்பிடன்ஷியலா பெர்ஸனலா கூப்பிட்டு விசாரணை பண்ணினீங்க.. அதுக்கு நான் ரொம்ப நன்றிக்கடன் பட்டிருக்கேன்.''

''உங்க மனைவி சொல்றதை வச்சுப்பார்த்தாலும் அந்த அழுகை அவங்க துடிக்கிறதைப் பார்த்தாலும்... எனக்கு உள்ளூர இவங்க சொல்றது அத்தனையும் உண்மைன்னு தோணுது.

நம்பிக்கையோட இருங்க. உங்க மனைவிக்கு ஆறுதல் சொல்லுங்க''

கை குலுக்கி விட்டு விடை பெற்றார் இன்ஸ்பெக்டர்.

''ஊகூம்! எனக்கு என்னமோ அந்த உருவ ஒற்றுமையில ஒரு வித்தியாசமும் படலைப்பா..

இந்த இன்ஸ்பெக்டரு நேத்து வரைக்கும் நல்லாத்தானே இருந்



''அன்பே கடைசிவரை எனக்கு கை கொப்பாய் என்று நம்புகிறேன்''
''இல்லீங்க ஏற்கனவே என்கையை இன்னொருத்தருக்கு கொடுத்திட்டேன்''
-ஆர்.கவுரி, தஞ்சாவூர்

தான்?

கண்ணுலேயே நயன பாஷை பேசி இவனையும் மயக்கிட்டா போலிருக்கே?

இவ தான் நவரசத்தையும் வெளிப்படுத்தற நாட்டியக்காரி ஆச்சே''

மகனின் மனம் கலைந்து விடக்கூடாதே? என்று உள்ளூர பதைத்துப் போனாள் சொர்ணம்.

இன்ஸ்பெக்டரின் பேச்சைக் கேட்டதும்... மித்திரனுக்கு ஒரு நெருடல் ஏற்பட்டது நிஜம்!

அந்த யூகத்தின்படி மிதிலாவின் பக்கம் உண்மை இருந்து விட்டால்?

அவள் சொல்லியது அத்தனையும் உண்மை என்று நிரூபணம் ஆகி விட்டால் என்ன செய்வது?

அப்புறம் நான் அவளது முகத்தில் எப்படி விழிப்பேன்?

குற்ற உணர்வு குடையத்தொடங்கியது.

நீயும் தானே பார்த்தே? அந்தப்படங்களை கண்ணாரப்பார்த்ததுமே அப்படியே மனசுடைஞ்சு போயிட்டேல்ல?

விரும்பி கல்யாணம் பண்ணினவன்.. நீயே அவளை உன் மனசிலிருந்து தூக்கி எறிஞ்சுட்டியே?

''உனக்கே எந்த வித்தியாசமும் தெரியலை.. இந்தப்போலீஸ்கார தடியனுக்கு வித்தியாசம் தெரிஞ்சு போச்சாக்கும்?

ஒட்டுப்பொறுக்கி பசங்க.. நம்ம கிட்டேயிருந்து ஏதாச்சும் ஆதாயம் கிடைக்குமா?ன்னு நாக்கைத் தொங்கப்போட்டுட்டு அலையறான்.

தவிர இவன் அவளைப் பார்த்த பார்வையே சரியில்லை.''

அம்மாவின் பேச்சைக்கேட்டதும் மீண்டும் அவனது மனம் குட்டையாய் குழம்பியது.

மிதிலா இவர்கள் இருக்கும் திசைப்பக்கம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை.

பார்வையைத் தழைத்த வண்ணம் கண்ணீர் மல்கியபடி கனகம்மாவுடன் பழைய காரிலேறிச் சென்று விட்டாள்.

''ஏம்மா... இவ்ளோ கொடுமை நடக்குது? உங்க வீட்டுக்கு போன் போட்டு அம்மா அப்பாவை வரச் சொல்லி நியாயம் கேட்கலாமே தாயீ?''

''ஊகூம்.. இதைக்கேட்டா அவங்க தாங்கவே மாட்டாங்க வேணாம்... என் பிரச்சனையை நான் தானே எதிர்கொள்ளணும்.



அப்படியே நியாயம் கேட்டு என்னத்தை நிலை நாட்டப்போறேன்?

என்மிது விழுந்த கறை நீங்கணும். அதுவரைக்கும் தான் நான் இங்க இருப்பேன்.

நான் சுத்தமானவள்னு நிரூபிச்சுட்டா.. மறுகணமே நிரந்தரமா இந்த வீட்டை விட்டுப்போயிருவேன்''

''அம்மாடி! அவசரப்படாதீங்க.. தாயீ''

''கனகம்மா! என்னைத்தனியா விடுங்களேன் பிளீஸ்''

கட்டாந்தரையில் சரிந்து படுத்து.. விழிகளை மூடியபடி கண்ணீர் உகுத்தாள் மிதிலா.

இந்தப்பயலுக்கு நிலையான மனசு கிடையாது. மறுபடியும் இவன் மனசு மாறி பொண்டாட்டி பக்கம் சாய்ஞ்சுட்டா அப்புறமா அந்த வக்கத் தவளை இந்தப் பயகிட்டேயிருந்து பிரிக்கவே முடியாதே? விட மாட்டேன்டி இரு பஞ்சாயத்து விசாரணைக்கு உடனே ஏற்பாடு பண்றேன்.

கறுவியவள் சம்பந்தப்பட்டவர்களுக்கு போனில் விஷயத்தைக்கூறி அதற்கான ஏற்பாட்டையும் செய்து முடித்தாள்.

மறுநாளே பஞ்சாயத்து கூடும் என்று தீர்மானிக்கப்பட்டது.

அன்று பொழுது சாயும் தருணத்தில் அந்த பிரமாண்டமான ஆலமரத்தருகே ஒட்டுமொத்த மலைக்கிராம மக்கள் திரண்டிருந்தனர்.

அசோக வனத்து சீதையாய் கலைந்த கூந்தலுடன் சோகமே உருவாக பரிதாபமாய் நின்றிருந்தாள் மிதிலா.

இப்போது.. அவளது விழிகளில் கண்ணீர் சுரக்கவில்லை.

தாடை இறுக.. பார்வையைத் தழைத்தபடி நின்றிருந்தவளை ஒட்டுமொத்த ஜனங்களும் வேடிக்கை பார்த்தனர்.

மகராசி! இந்தப்பொண்ணு பாவம்.. நல்லா மாட்டிக்கிச்சு. என்

''குழந்தை இல்லேன்னு சுவாமிஜியை பார்க்கப்போனேன்''

''அவர் என்ன சொன்னார்?''

அவரோட ஜூனியரிடம் என்னை அனுப்பி வைத்துவிட்டார்''

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்



பேத்தி சரிவுல விழுந்து மண்டை உடைஞ்சு போனப்போ இந்த புண்ணியவதி தான் அவசரமா ஓடி வந்து சிகிச்சை பண்ணி காப்பாத்துச்சு.

மாமியார் மதியம் தூங்கிட்டிருந்தப்போ அவங்களுக்கு தெரியாம ஓடியார்ந்து உதவி பண்ணுச்சு.

பாவம் நல்ல மனசு இந்தப் பொண்ணுக்கு கடவுள் தான் துணையிருக்கணும்.

இந்தப் பஞ்சாயத்துல என்ன தீர்ப்பு சொல்லப் போறாங்களோ தெரியலையே?''

கூட்டத்தில் மத்தியிலிருந்த ஒரு பாட்டி மிதிலாவுக்கு பாராட்டுப் பத்திரம் வாசித்ததோடு கழிவிரக்கத்துடன் அவளையே பார்த்தாள்.

ஆலமரத்து மேடையருகே நடு நாயகமாய் வந்து நின்றாள் சொர்ணத்தம்மாள்.

இந்த சபைக்கு வணக்கம் தெரிவிச்சுக்கிறேன். இந்த விசாரணை எதுக்காக? அப்படீன்னு பஞ்சாயத்து பெரியவரு சொன்னதை நீங்க எல்லாரும் கேட்டீங்க தானே?

என் சார்பா நான் சொல்லிக்க விரும்பறது என்னன்னா? தெரிஞ்சோ தெரியாமலோ இப்படியொரு அபாண்டம் என் மருமகமேல விழுந்திருச்சு.

ஜனங்க மொத்தமும் இதைப்பத்தியே தான் பேசிட்டிருக்காங்க.

நியாயத்துக்கு கட்டுப்பட்டு நடக்கிறவங்க நாங்க நம்ம பஞ்சாயத்து சட்டதிட்டப்படி இப்படியொரு அபாண்டம் சுமத்தப்பட்ட பொண்ணுக்கு தன்னோட நேர்மையை நிலைநாட்டறதுக்கு ஒரு சோதனை வைப்பாங்க.

அதை தாராளமா என் மருமகளுக்கும் வைக்கட்டும் அந்த சோதனையில அவ கட்டாயமா தான் ஒரு நிரபராதின்னு நிரூபிக்கட்டும்.

அரண்மனை வீட்டு மருமகளைப் பத்தி.. நாளைப்பின்னே யாரும் ஒரு வார்த்தை கூடப்பேசிடக்கூடாது: என் மருமக நிரபராதின்னு எனக்கு நல்லாத் தெரியும்.

அக்னிப்பிரவேசம் செஞ்சு அவ தன்னை பரிசுத்தமானவள்னு நிரூபிக்கட்டும்.

ஊருக்கொரு நியாயம்? அரண்மனை வீட்டுக்கு ஒரு நியாயமா? அப்படீன்னு யாரும் எங்களைப் பத்தி சொல்லிடக்கூடாது. பாருங்க..

இத்தோட என் பேச்சை நான் முடிச்சுக்கிறேன். சபைக்கு வணக்கம்...''



பேசி முடித்துவிட்டு பக்கவாட்டில் ஒதுங்கிப்போய் நின்று கொண்டு எதிரில் நின்றிருந்த மருமகளைக் குரூரமாய் பார்த்தாள்.

கைகளை மார்பின் குறுக்கே கட்டியபடி தலைகுனிந்து நின்றிருந்தான் மித்திரன்.

ஆலமரத்து மேடையில் அமர்ந்திருந்த ஏழெட்டு முதியவர்களில் நடுநாயகமாக இருந்தவர். தொண்டையைக் கனைத்தார்.

கூட்டத்தில் சலசலப்பு சப்தம் அடங்கியது. ஊசி விழுந்தால் கூட சப்தம் கேட்கும் வண்ணம் நிசப்தம் நிலவியது.

## 16

“சொர்ணத்தம்மாவை பஞ்சாயத்து சார்பா நான் பாராட்டறேன். பொதுவாக ஒரு நபர் மேல குற்றச்சாட்டு வந்துச்சுன்னா.. நாம்ப தான் உத்தரவு போட்டு அந்தநபரை பஞ்சாயத்து வரவச்சு.. விசாரணை செய்து தீர்ப்பு வழங்குவோம்.

ஆனா.. இந்தம்மா தானே முன் வந்து தன்னோட மருமகளை விசாரணைக்கு கொண்டாந்து நிறுத்திட்டாங்க. தன் மருமக மேல விழுந்த களங்கத்தை துடைக்கணும்.

இனிமேல் யாரும் தன் மருமகளை ஒரு பேச்சு பேசிடக்கூடாதுன்னு மருமகளை அக்னிக்குழியில் இறங்கச் சொல்லி அவளை உத்தமின்னு நிரூபிக்க முன் வந்திருக்காங்க.

இவங்களோட நல்ல மனசைப் பாராட்டறேன். பஞ்சாயத்தோட சட்டதிட்டத்துக்கு இவங்க தர்ற மதிப்பை நாம பாராட்டியாகணும்.



“மன்னர் ஏன் அந்தப்புரத்திற்கு அவசரமாக போகிறார்?”

“ராணியின் அந்தப்புரத்திற்கு போன அமைச்சர் வெகு நேரமாகியும் வரவில்லையாம்”

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்

இந்தம்மாவோட ஆசைப்படியே இவங்க மருமக அக்னிக்குழியில இறங்கி தன்னை நிருபிக்கும்படி பஞ்சாயத்துஉத்தரவிடுது.''

பேசி முடித்துவிட்டு மிதிலாவை ஊன்றிப் பார்த்தார் அந்தப்பெரியவர்.

''அடப்பாவிகளா? உங்க அக்கிரமத்துக்கு அளவே இல்லையா? போலீஸ் இன்ஸ்பெக்டர் கூட இந்தம்மா மேல இரக்கப்பட்டு தன்மையா விசாரிச்சு.. கோமாவுல கிடக்கிற ஆளு.. தேறிவரட்டும். அவன் கிட்டே நல்ல விசாரிச்சுட்டு அப்புறமா பார்த்துக்கலாம்னு போயிட்டாரு..

போலீஸ் விசாரணை பண்ணிட்டிருக்குல்ல? உண்மை என்னன்னு கண்டுபிடிச்சு அவங்க தீர்ப்பு சொல்லட்டுமே? அதுக்குள்ளே உங்களுக்கு என்ன அவசரம்?

இந்த அப்பிராணி பொண்ணை வீட்டுல முடக்கிப்போட்டு வசை பாடி நோகடிச்சு பண்ணின கொடுமையெல்லாம் பத்தாதா?

அக்னிக்குழியில தள்ளி மருமகளை சாகடிக்கலாம்னு இந்தஅரக்கி நாடகம் போடுது. யாரும் நம்பாதீங்க மருமக மேல இருக்கிற அக்கறையில... இவங்க இங்க வரலை.

ஒழிச்சு சாம்பலாக்கிடணும்கிற முடிவுல தான் வந்திருக்காங்க. தினம் தினம் இந்தம்மா பண்ணின சித்ரவதைகளை நாங்க கண்கூடா பார்த்துட்டு தானே இருந்தோம்.

உங்க வீட்டுலேயும் பொண்டு பிள்ளைங்க இருக்கு. வீணா இந்த மகராசியோட பாவத்தைக் கொட்டிக்காதீங்க...

போலீஸே தலையிட்டிருக்குல்ல? அவங்க பாடுன்னு விட்டிருங்க..

இந்த ராட்சசிக்கு நல்ல சாவே கிடைக்காது. இவளுக்கு யாரும் துணை போகாதீங்க''

ஆங்காரம் தாங்காமல் கொதித்துப்போய் பெருங்குரலெடுத்து கர்ஜித்தான் காசி.

''டேய்.. காசி! எங்க வீட்டு வேலைக்கார நாயி நீ! என்ன தைரியம் இருந்தா.. பல பேர் முன்னாடி இவளுக்கு வக்காலத்து வாங்கிக்கிட்டு என்னை அவமானப்படுத்துவே ராஸ்கல்''

''அட போம்மா.. மனிதாபிமானமே இல்லாத உங்கிட்ட இத்தனை காலமா உழைச்சுக்கொட்டினதுக்கு நான் வெட்கப்படறேன்.

உண்மையைத் தானே சொன்னேன்? வேலை போகும் அவ்வளவு தானே? போம்மா.. தூ! ஈவு இரக்கம் இல்லாத ராட்சசி! வாழ வேண்டிய



பொண்ணை நெருப்புக்குழியில் தள்ளி விட சதி பண்றியே? நீயெல்லாம் ஒரு பொம்பளையா?''

துண்டை உதறிப்போட்டுக் கொண்டு சுட்டு விரலை நீட்டிப்பேசினான் காசி.

''அப்படி சொல்லுங்க.. யார் பெத்த பொண்ணையோ இஷ்டத்துக்கு கொடுமைப்படுத்தி சாவடிக்கப் பார்க்கிறீயே டாக்டருக்கு படிச்ச பொண்ணு பறக்கிற பறவையோட இறக்கைகளை முறிச்சுப்போட்ட மாதிரி வீட்டுலேயே முடங்கிக்கிடக்க வச்சே...

காலத்துக்கும் பொறுத்துப்போன பொண்ணை அவ வாழ்க்கையைக் கெடுக்கிறியே..? ஏம்பா சின்ன எஜமானே!

இது உனக்கே நியாயமா? படிச்சவன் தானே நீ? போலீஸே இந்த மகராசியோட முகத்தைப் பார்த்தா இது நிரபராதியா தான் இருக்கும்னு நெனச்சு தன்மையா நிதானமா கேஸை கையாளறாங்க.

நீ என்னடான்னா அம்மா கோண்டு மாதிரி இந்தப் பேயோட இஷ்டப்படி பொண்டாட்டியை இம்சிக்கிறியே?

இது உனக்கே நியாயமா? நீயும் உங்கம்மாளும் உருப்படுவீங்களா?

புள்ளைத்தாச்சியா இருக்கா உன் பொண்டாட்டி அது தெரியுமா உனக்கு?

கொலைப்பட்டினி கிடக்கிறா... இந்தப்பாவம் உங்களை சும்மாவே விடாது.'' உச்சஸ்தாயியில் தன் ஆத்திரத்தைக் கொட்டித்தீர்த்தாள் கனகம்மா.

திக்கென்னு அதிர்ந்து போய் மனைவியை ஏறிட்டுப் பார்த்தான் மித்திரன்.

''கனகம்மா! நீங்க அமைதியா இருங்க. என் பொருட்டு நீங்க யாரையும் விரோதிக்க வேணாம்

''கேரட்டில் ஏன்டா பச்சை பெயின்ட் அடிக்கறாங்க?''

''டாக்டர் பச்சை கேரட் சாப்பிடச் சொன்னார்''

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்



பஞ்சாயத்துல தீர்ப்பு சொல்லியாச்சு. சம்பந்தப்பட்ட நபரே அமைதியா இருக்கிறப்போ.. காசியும், கனகம்மாவும் சபையை மதிக்காம.. தாம்தூம்னு குதிச்சா, என்ன அர்த்தம்?

பஞ்சாயத்தை மதிச்சு நடந்துக்கோங்க..

அக்னிக்குழி தயாரா இருக்கு.. சொர்ணத்தம்மாவோட மருமகளை அங்க கூட்டிட்டுப்போங்கன்னு பஞ்சாயத்து உத்தரவிடுது.''

அந்தப்பெரியவர் மீசையைத் தடவியபடி மீண்டும் உத்தரவிட்டார்.

பத்தடி தொலைவில் இதற்கென்றே அமைக்கப்பட்டிருந்த குழியில் கட்டைகளைப்போட்டு எரித்து அக்னிக்குழி தயார் செய்யப்பட்டிருந்தது.

''என்னால அக்னிப்பிரவேசம் செய்ய முடியாது.

அழுத்தம் திருத்தமாக முதல் முறையாக வாய் திறந்து பேசினாள் மிதிலா.

''நீ சுத்தமானவள்னு எப்படி நிரூபிக்கிறதாம்? உன் பேரு ஊர் முழுவதும் நாறிப்போச்சு.. கண்டிப்பா உன்னை நிரூபிக்கலைன்னா... காலத்துக்கும் அந்தக் களங்கம் தொடரும் போன கவுரவம் திரும்பக்கிடைக்கணும்னா.. நீ அக்னிபிரவேசம் செய்து தான் ஆகணும்'' என்றாள் சொர்ணம்.

''நான் ஒரு டாக்டர்! அக்னியில யார் இறங்கினாலும்.. சுட்டுப் பொசுக்கத்தானே செய்யும்? கண்டிப்பா என்னையும் பொசுக்கும் பொசுங்கிட்டா நான் கற்பில்லாதவள்னு ஆயிடுமா?

இப்போ உங்களைப் பிடிச்சு தள்ளினாலும் இந்த மேனிக்கு பழுதில்லாம திரும்ப வந்துடுவீங்களா? முடியாதுல்ல? அப்போ.. நீங்களும் கெட்டுப்போன பெண்ணுன்னு சொன்னா ஏத்துப்பீங்களா?

திரேதா யுகத்துல சீதை அக்னிப்பிரவேசம் செய்தா ராமன் சந்தேகப்பட்டதற்காக இல்ல.. தன்னோட ராமன் இதுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்னு அவளுக்குத் தெரியும்.

அந்நியன் தூக்கிட்டுப்போய் அசோக வனத்துல அத்தனை நாள் இருந்துட்டு வந்ததால.. உலகத்தார் யாரும் தூற்றி ஒரு வார்த்தை பேசிடக்கூடாதுன்னு அந்த சீதையை அக்னிப்பிரவேசம் பண்ண வச்சாரு..

சத்தியமா அவர் சந்தேகப்படலைன்னு சீதைக்கு தெரியும்.. ஊருக்காக உலகத்துக்காக அந்த உத்தமி அக்னியில இறங்கினா அக்னி பகவான் பூமாரி பொழிஞ்சு காட்சி தந்தாரு...

இது கலியுகம்... நானும் சீதைதான்.. என் கணவர் அமைதியா இங்க



நிக்கிறாரு. தன்னோட அம்மாவோட விருப்பப்படி நான் அக்னிப்பிரவேசம் செய்யணும்னு எதிர்பார்க்கிறாரு.

நான் சத்தியமா சீதை தான். சந்தேகப்படறதால இவர் ஒண்ணும் ராமனாயிட முடியாது.. தாலியைக் கட்டி மனைவியா ஆக்கிட்டோம். நாம இட்ட கட்டளைப்படி இவ நடந்து தான் ஆகணும்னு நெனக்கிறாரு.

அப்பேர்ப்பட்ட பந்தம் எனக்கு தேவையில்ல.. இனிமேல் நான் இவருக்கு மனைவி இல்ல.. இப்பேர்ப்பட்ட முதுகெலும்பில்லாத பிராணி கூட இத்தனை நாள் வாழ்ந்ததை நெனச்சு வெட்கப்படறேன். வேதனைப்படறேன்.

நான் எடுக்கிற முடிவு.. ஒட்டுமொத்தப் பெண் சமுதாயத்துக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும்..

சந்தேகப்படற ஆண்களுக்கு இது ஒரு படிப்பினையா இருக்கும்.''

ஒரு காளியைப் போன்று விழிகள் அக்னித் துண்டங்களாய் ஜொலிக்க உணர்ச்சி வசப்பட்டு பேசி முடித்தாள் மிதிலா.

அவள் பேசி முடித்தது தான் தாமதம்.

கூட்டத்தில் பெரிய சலசலப்பு சப்தம்..

திகைத்துப்போய் பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

அங்கே..

# 17

அச்சு அசலாய் மிதிலாவின் சாயலில் அந்த காவ்யா நின்றிருந்தாள்.



''மாசி மகத்திற்கு போன என் கணவர் திரும்ப வரவே இல்லை''

''ஏன் என்னாச்சு''

''ஒரு லட்சம் பணம் கிடைக்கும்னு தான் அனுப்பிவைத்தேன்''

-ஆர்.கவுரி, தஞ்சாவூர்

விடுவிடென்று நடந்து வந்து மிதிலாவின் கைகளைப்பற்றிக் கொண்டாள்.

''சாரிங்க.. என்னால உங்க லைப்லே பெரிய பிரச்சனை ஏற்பட்டுருச் சாமே? நான் பெங்களூர் வாழ்தமிழ் குடும்பத்தைச் சேர்ந்த பொண்ணு. படிச்சது வளர்ந்தது எல்லாமே அங்க தான். நான் ஒரு டான்சர்.

காலேஜில நானும் கதிரவனும் ஒண்ணா படிச்சோம். காதலிச்சோம். அவங்க வீட்டுல சம்மதிக்கலை.. இருந்தாலும் ரகசியத்திருமணம் செய் துக்கிட்டோம்.

நான் பல ஊர்களுக்குப் போய் டான்ஸ் புரோகிராம் செய்றது வழக்கம். கர்நாடகாவில் குடகுமலைப் பக்கம் ஒரு ஊர்லே டான்ஸ் புரோகிராம் பண்ணப்போயிருந்தேன். செல்போன் டவர் ஒரு வாரத் துக்கும் மேலா அங்க கிடைக்கலை.

நைட்டு தான் நான் வந்தேன். கதிருக்கு போன் செஞ்சா.. இன்ஸ் பெக்டர் எடுத்தாரு.. விஷயத்தை எல்லாம் சொன்னாரு..

உடனடியா மதுரை வரைக்கும் பிளைட்டுல வந்து அங்கிருந்து கார்லே புயல் வேகத்துல வந்தேன்.

நல்ல காலமா கதிருக்கும் நினைவு திரும்பிட்டது. என்னை அவர் தான் உடனடியா உங்களை மீட் பண்ணச் சொன்னாரு.. நடந்த தவறுக்கு நாங்க ரொம்ப பீல் பண்றோம். சாரிங்க கதிர் இங்க ஏதோ எஸ்டேட் விலைக்கு வருதுன்னு.. அதைப் பேசி முடிக்க வந்தாராம்.''

கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் காவ்யா.

''ஐயோ! சினிமாவுல வர்ற மாதிரி பஞ்சாயத்து நடக்குதா? அக்னிக் குழி வேற தயாரா இருக்கு? எதுக்கு? உங்களுக்கு தண்டனை தரவா? மைகாட்! நான் கொஞ்சம் லேட்டா வந்தாலும் மிகப்பெரிய விபரீதம் நடந்திருக்கும் போலிருக்கே.

என்னங்க இது? அநியாயமா இருக்கு? ஒரு செல் போன்லே இருக் கிற படங்களைப் பார்த்ததும் இப்படியா ஏடா கூடமா உங்களைத்தப்பா நெனப்பாங்க?

இத்தனை வருஷமா கூட இருந்தும் உங்க குணம் தெரிய வேணாம்? கடவுளே! இந்தக்கம்ப்யூட்டர் யுகத்துல இந்த ஜனங்க இப்படி ஆதிவாசி கள் மாதிரி பிஹேவ் பண்றாங்க? இட் இஸ் டு பேட்!

காவ்யாவின் கண்கள் கலங்கி விட்டன.''

''என்னால உங்க வாழ்க்கையில இப்பேர்ப்பட்ட கொடுமை நடந்து போச்சே?''



''நான் உங்களுக்கு நன்றி தான் சொல்லணும் காவ்யா! வருத்தப்படாதீங்க. எனக்கு நீங்க நன்மை செஞ்சுட்டீங்க.''

''என்ன சொல்றீங்க மிதிலா?''

திகைப்பாய் ஏறிட்டாள்.

''என்னோட டாக்டர் புரபஸனை முடக்கிப்போட்டாங்க. யாருக்கும் ஆத்திர அவசரத்துக்கு கூட வைத்தியம் பண்ணக்கூடாதுன்னாங்க அதுக்கும் பொறுத்தேன்.

எல்லாத்துக்கும் பொறுத்துபோனேனே? யாருக்காக. இதோ இவருக் காக உருக உருக நேசிச்சாரு மனுஷன் காதலை ஏத்துக்கிட்டு கழுத்தை நீட்டினேன்.

எப்போ செல்போன்ல இந்த போட்டோவை பார்த்துட்டு என்னை சந்தேகிக்க ஆரம்பிச்சாரோ? அப்பவே நான் செத்துட்டேன். காதலும் கானல் நீராயிடுச்சு.

நீயில்லாம நான் வாழவே மாட்டேன்னு சொன்ன மனுஷனை ஒரு செல்போன் ஒரே நாளிலே மாத்திப்போட்டுருச்சே?

இவரோட உண்மையான குணத்தை எனக்குப் புரிய வச்சதுக்கு நான் தான் உங்களுக்கு நன்றி சொல்லணும்.'' தழுதழுத்த குரலில் மிதிலா பேசினாள்.

''சே! இப்படி பண்ணிட்டீங்களே மித்திரன்?'' என்ற குரல் கேட்டு அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

அங்கே இன்ஸ்பெக்டர் நின்று கொண்டிருந்தார்.

''நான் என்ன சொல்லிட்டுப்போனேன்? அந்த அழுகை அந்த துடிப்பைப் பார்த்தால் அவங்க பொய் சொல்ற மாதிரி தெரியலைன்னு சொன்னேன் இல்லையா?

''ஏன்டி உன் பையன் வேலைக்கா பின்னாலே சுத்தறான்?''

''அவன் அவுங்க அப்பா மாதிரி பட ஷோக் பேர்வழி''

-ஆர்.கவுரி,தஞ்சாவூர்



மூணாம் மனுஷன் நானே புரிஞ்சுக்கிட்டேன். தாலி கட்டின கணவர் நீங்க பெரிய பிஸினஸ்மேன்.

உங்க மனைவி விஷயத்துல நீங்க மன்னிக்க முடியாத தப்பைப் பண்ணிட்டீங்க மித்திரன்!

மிதிலா பேசியதை கேட்டதுமே மித்திரனுக்கு சாட்டையால் யாரோ விளாசித்தள்ளியதைப் போலிருந்தது. போதாதற்கு காவ்யா இப்போது இன்ஸ்பெக்டர் வேறு நாக்கைப் பிடுங்கிக் கொள்வதுபோல் கேட்டு விட்டார்.

குற்ற உணர்வில் கூனிக்குறுகி விட்டிருந்தான்.

தலையில் மடீர் மடீர் என்று அடித்துக் கொண்டு அழுதபடி பேசினான்.

"மி...தி...லா...! என்னை மன்னிச்சுடும்மா. நான் மகா பாவி! இந்தப் பாவி புத்தி கெட்டுபோயி தப்பு பண்ணிட்டேன்.

ஐயோ.. பைத்தியக்காரத்தனம் பண்ணிட்டேனே?

மிதிலா! உன் கால்லே விழுந்து மன்னிப்பு கேட்கிறேன்.

உன் முடிவை மாத்திக்கோ செல்லம்! நம்ம நம்ம குழந்தைக்காக நாம சேர்ந்து தான் வாழணும். பிளீஸ்."

"நிறுத்துங்க. உங்க மனைவி எப்பவோ செத்தாச்சு. என் நல்ல நேரம். காவ்யா நேர்ல வந்துட்டாங்க. ஊருக்கே இப்போ நான் நிரபராதின்னு தெரிஞ்சு போச்சு.

இது மட்டும் நடக்கலைன்னா? வயித்துல ஜனிச்ச குழந்தை என்னோடது இல்லைன்னு வாய் கூசாம சொன்னாலும் சொல்லியிருப்பீங்க...

நான் எடுத்த முடிவுலே எந்த மாற்றமும் இல்லை தொட்டதுக்கெல்லாம் சந்தேகப்படற ஆண் வர்க்கத்துக்கு இது ஒரு பாடமா இருக்கட்டும்.

எனக்கு என் டாக்டர் தொழில் இருக்கு. சுதந்திரமா சொந்தக் கால்லே நின்னு என் குழந்தையை நான் வளர்த்து ஆளாக்குவேன். இதே மலைவாழ் மக்களுக்காக மருத்துவமனை அமைத்து நான் சேவை செய்யறதுக்கு இனி எனக்கு யாரும் தடை விதிக்க முடியாது. குட் பை மிஸ்டர் மித்திரன். குட் பை பார் எவர். அவளின் கம்பீரமான குரல் உயர்ந்து எழுந்ததும் கனகம்மா காசி உள்பட அங்கிருந்த சராசரி மக்கள் கண்ணீர் மல்க கை கூப்பினார்கள்.

**முற்றும்**



# பட்டுச்சேலை

## பரிசுபெற்றவர்கள்

டிசம்பர் 1,2012 — பதில் துப்பாக்கி

1. **ஆர். கீதா, 631501சின்னகாஞ்சிபுரம்**
2. **ஆர்.என்.மிராபாய்,627358 திருநெல்வேலி**
3. **இந்துமதி,621214 திருச்சி**

## மாங்காய் சாதம்

தேவையான பொருட்கள்:

பச்சரிசி- 250 கி, மாங்காய், பெங்களூரா மாங்காய்- 1, மிளகாய்ப் பொடி- 1 ஸ்பூன், பச்சை மிளகாய்- 3, கடுகு- 1 ஸ்பூன், எண்ணெய்- 50 கி, உப்பு, தேவையான அளவு, மஞ்சள் பொடி- சிறிது, கறிவேப்பிலை- 1 கொத்து.

செய்முறை:


அரிசியை சாதமாக உதிர், உதிராக வடித்து ஒரு பெரிய தாம்பளத்தில் போடவும், மாங்காயை கேரட் சீவியில் துருவலாக சீவவும். வாணலியில் எண்ணெய் சிறிது விட்டு, கடுகு, கறிவேப்பிலை போட்டு தாளிக்கவும். பின் அதில் துருவிய மாங்காய்தூள், மிளகாய்ப்பொடி, பச்சை மிளகாய், மஞ்சள் பொடி சேர்த்து எண்ணெயில் நன்கு வதக்கவும். வதங்கியதும் தேவையான உப்பைப் போட்டு கிளறி தாம்பாளத்தில் போட்டிருக்கும் சாதத்தில் கொட்டி, மீதி எண்ணெயையும் விட்டு நன்கு கிளறி ஒரு பாத்திரத்தில் வைக்கவும். சுவையான மாங்காய் சாதம் ரெடி. இதற்கு அப்பளம், வடகம் தொட்டுக் கொள்ளலாம்.

**-இந்திரா தேவி, மதுரை.**

# ராகி கேக்

தேவையான பொருட்கள்:

ராகிமாவு - 100 கிராம், மைதா மாவு - 50 கிராம், மில்க்மெய்டு - 250 கிராம், வெண்ணெய் - 125 கிராம், சமையல் சோடா - 1 டீஸ்பூன், பொடித்த சர்க்கரை- 50 கிராம், வெனிலா எசென்ஸ்- 2 துளிகள்.



செய்முறை:

ஒரு அகலமான பாத்திரத்தில் வெண்ணெயை நன்றாக நுரைக்கும்படி அடித்துக் கொள்ள வேண்டும். பின் மில்க்மெய்டை கொஞ்சம் கொஞ்சமாக அதில் கலக்க வேண்டும். அதனுடன் எசென்ஸை சேர்த்து மீண்டும் அடித்து கொள்ள வேண்டும்.

ராகிமாவு, மைதா மாவுடன் பொடித்த சர்க்கரை, சமையல் சோடாவை சேர்த்து நன்றாக சலித்து, வெண்ணெய் கலவையுடன் கொஞ்சம் கொஞ்சமாக கலக்க வேண்டும். மொத்த கலவையும் அடர்த்தியான மாவு பதத்துக்கு வந்ததும் அவனில் சுமார் 20 நிமிடம் வைத்து எடுக்க வேண்டும். கமகம சாப்ட் ராகி கேக் ரெடி.

-வி.ஆதிரை, சென்னை.

# கேரட் கேக்

தேவையான பொருட்கள்:

கேரட்- 200 கிராம், தேங்காய்- 1, முந்திரிப்பருப்பு- 50 கிராம், சர்க்கரை- 250 கிராம், நெய்- 250 கிராம், பால்- 100 கிராம், குங்குமப்பூ- 1 சிட்டிகை.



செய்முறை:

கேரட்டை தோல் சீவி துண்டுகளாக்கி பாலில் வேக விடவேண்டும். முந்திரிப்பருப்பு, தேங்காய்த்துருவல், வெந்த கேரட் எல்லாவற்றையும் சேர்த்து கேரட் வேக வைத்த பாலையே விட்டு அரைத்து எடுக்க வேண்டும். சர்க்கரையில் சிறிது தண்ணீர் விட்டு அடுப்பில் வைத்து பாகாக காய்ச்சி, கேரட் விழுதைப் போட்டு குங்குமப்பூ சேர்த்து நெய் ஊற்றி இறுக கிளறி நெய் தடவிய தட்டில் விட்டு ஆறிய பிறகு துண்டுகள் போட வேண்டும்.

பண்டிகை காலங்களில் செய்ய ஏற்ற கேக் இது.

-ஆர்.மீனாட்சி, நெல்லை.



# முந்திரிகேக்

தேவையான பொருட்கள்:

முந்திரிப்பருப்பு- 100 கிராம், தேங்காய்த்துருவல்- 1½ கப், சர்க்கரை- 2 கப், நெய்- ¼ கப்.



செய்முறை:

முந்திரிப்பருப்பை ஒரு மணி நேரம் ஊற வைத்து தேங்காய்த்துருவலுடன் கெட்டியாக வெண்ணெய்போல் அரைக்கவும். வாணலியை அடுப்பில் வைத்து அரைத்த விழுதை சர்க்கரையோடு சேர்த்து நன்கு கிளறவும். நெய்யை சிறிது சிறிதாக ஊற்றி கிளறவும்.

வாணலியில் ஒட்டாமல் பூத்து வரும்போது ஒரு தட்டில் நெய்யை பரவலாக தடவி முந்திரி கலவையை கொட்டி சமமாக பரப்பி, சிறிது ஆறியதும் தேவையான வடிவத்தில் வெட்டி எடுக்கவும். அதிக சுவையான ரிச்சான ஸ்வீட் இது.

-காஞ்சனா ராதாகிருஷ்ணன், சென்னை.

# பால் கேக்

தேவையான பொருட்கள்:

பால்- 1 டம்ளர், கடலைமாவு- 1 டம்ளர், சர்க்கரை- 2 டம்ளர், நெய்- 1 டம்ளர்.



செய்முறை:

அடிகனமான பாத்திரத்தில் பால், சர்க்கரை, கடலைமாவு மூன்றையும் ஒன்றாக கலந்து அடுப்பில் வைத்து அடிபிடிக்காமல் கிளற வேண்டும். கொஞ்சம் தோசைமாவு பதத்தில் வரும்பொழுது நெய்யை சிறிது சிறிதாக விட்டு கிளற வேண்டும். கலவை பொங்கி வரும் போது நெய் தடவிய தட்டில் கொட்டி சமபடுத்தி வில்லைகள் போட வேண்டும். இதுவே 'பால் கேக்'. சாப்பிட ருசியாக இருக்கும்.

-ரா.ராஜேஸ்வரி, மேற்குமாம்பலம்.